www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

பெப்.09-15,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 191

## உள்ளூராட்சி தேர்தல் வெற்றி யாருக்கு?

## ஆபத்தான ஏவுகணைகள்

## சூப்பர் மிசைல்



## மனதில் என்ன பாரம்?

## வாசக நெஞ்சங்களுக்கு வசீகரமான நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## இதுதானா நாகரிகம்?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

பீட்டர் கெனமன்
மரணமானபின்னர்
தமிழ்க் கட்சிகள் சில
விழுந்தடித்து விடுத்த அறிக்கைகள்
உருக்கமாக இருந்தன-ஆனால்
உண்மையாக இல்லை!
"தொழிலாளர்களின் தோழன்!"
"தமிழ் மக்களின் நண்பன்!"
என்றெல்லாம் எக்கச்சக்கமான
புகழாரங்கள் சூட்டப்பட்டன.
கெனமனைப் புகழ்வதில்
அவரது கட்சியினரைக்கூட
ஓரம் கட்டிவிட்டன தமிழ்க் கட்சிகள்!
ஒருவர் மறைந்த பின்னர்
வசைபாடாமல்
வேண்டுமானால் இருக்கலாம்;
உண்மைகளுக்கு மாறாக
வாழ்த்துப்பா
பாட வேண்டும் என்றில்லை!
கூட்டணி முதற்கொண்டு
ஜனநாயகப் பாதைக்குத் திரும்பிய
தமிழ்க் கட்சிகள் யாவும்
தனி ஈழம் கேட்டவைதான்!
தனி ஈழக் கோரிக்கையை
அக் கட்சிகள்
இன்று கைவிட்டிருக்கலாம்!
அதற்கான
காரணங்களும் இருக்கலாம்!
ஆனால், அன்று
தனி ஈழம் கேட்பதற்கு
காரணமாக இருந்த நிகழ்வுகளையும்
அவற்றின் காரண கர்த்தாக்களையும்
எப்படி மறக்க முடிகிறது?!
எந்த நிகழ்வுகளை
காரணம் காட்டி
எண்ணற்ற உயிர்களை
காவு கொடுக்கும் போராட்டத்தை
தமிழ்க் கட்சிகள் ஆரம்பித்தனவோ,
இன்று அந்த நிகழ்வுகளை
பொற்கால நிகழ்வுகளாக
பொய் சொல்லலாமா?
1972ல்தான்
புதிய அரசியலமைப்பு
சிறிமாவோ அம்மையார் தலைமையிலான
மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியால்
கொண்டுவரப்பட்டது.
அந்த அரசியலமைப்பை எதிர்த்தே
தந்தை செல்வா பதவியைத் துறந்தார்.
'தனி ஈழம் காண
வீட்டுக்கு ஒரு வீரனை'
அழைத்தனர் கூட்டணியினர்.
அதன்பின்னர்தான்
போராட்டம் விரைந்து பரவி
ஆயுதப் போராட்டமாக
உருமாறத் தொடங்கியது!
1970களின் முன்னர்
இன ஒற்றுமை பேசிய
இடதுசாரிகள்தான்
1970க்குப் பின்னர்
தமிழ் பேசும் மக்களை
இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும்
நடவடிக்கைகளுக்கு நாற்று நட்டனர்!
1972ன் அரசியலமைப்பை
உருவாக்கியவர் 'இடதுசாரி' கொல்வின்.
சரியென வாதிட்ட 'இடதுசாரிகள்' தான்
கெனமனும்-என்.எம்.பெரேராவும்!
70களுக்கு முன்னர்
அவர்கள் என்ன பேசினார்கள்
என்பது முக்கியமல்ல;
70களின் பின்னால்
அவர்கள் என்ன செய்தனர்
என்பதுதான் முக்கியம்!
இலங்கை அரசியல் வரலாற்றில்
தொழிலாளர்களுக்கும்
சிறுபான்மை மக்களுக்கும்
துரோகம் செய்த வரலாறுதான்
'பாரம்பரிய இடதுசாரி'களின் வரலாறு!
மலையகத் தமிழ் மக்களுக்கு-
அந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கு-
பிரஜா உரிமை வழங்கக்கூட
முன்வந்து முயலாத 'இடதுசாரிகளா'
தொழிலாளர்களின்
தோழர்கள்? தலைவர்கள்?
'இடதுசாரிகள்' என்றாலே
மக்கள் முகம் சுழிக்க வைத்த
பெருமை வேண்டுமானால்
அவர்களைச் சேரலாம்!
வேறெந்தப் பெருமையையும்
வரலாறு சூட்டப்போவதில்லை!
ஆனால்-இரத்த ஆறு பெருகி
எண்ணற்ற உயிர்கள் பலியாக
ஆரம்பகர்த்தாக்களாக இருந்தவர்களை
தமிழ்க் கட்சிகள்
பாராட்டுவது எதற்காக?
நாகரிகத்துக்கும்
ஒரு வரம்பு உண்டு!
கெனமன் தமிழ்க் கட்சிகளுக்கு
தோழன் என்றால்
கொல்வின்களாலும், கெனமன்களாலும்
ஆராதிக்கப்பட்ட
அரசியலமைப்பை எதிர்த்து
போராடிச் செத்தவர்களெல்லாம்
தமிழ்க் கட்சிகளின்
எதிரிகளாகிவிட்டனர்
என்று அர்த்தமாகிவிடும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## நாம் செய்ய வேண்டியது என்ன?

உபத்திரவங்கள்... இதனைத் தாங்க முடியாது சஞ்சலத்துடன் வாழும் உள்ளங்கள் கோடி! இதனால் பொறுமையிழந்து நிம்மதி இழந்து தவிப்பவர் கோடி....!

"உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்.... ஜெபத்திலே தரித்திருங்கள்...." (ரோமர் 12:12)

ஆம்! உபத்திரவங்கள் ஏற்படும்போது பொறுமையுடன் ஜெபத்திலே தரித்திருப்போம்.

தீமைகள்...... எமக்குத் தீமை செய்தால் சகித்துக் கொள்வோம்.... தீமை செய்கிறவன் மேல் கோபம் கொள்ளாதிருப்போம். தீமை செய்கிறவனைப் பழிவாங்க வேண்டும் என நினையாதிருப்போம் ஏன்?...

"பழி வாங்குதல் எனக்குரியது பிள்ளைகளே, நானே பதில் செய்வேன்!" (ரோமர் 12:19)

ஆம்! பொறுமையுடன் காத்திருப்போம். எமக்காக வழக்காட ஒருவர் உள்ளார்... அவர் பதில் கொடுப்பார். நாம் ஜெபத்திலே உறுதியாகத் தரித்திருப்போம்.

ஜே.புளோரன்ஸ், கெங்கல்ல, அம்பக்கோட்டை.

## ரமழானின் ஐந்து வகைப் பாக்கியங்கள்

ரமழான் மாதத்தில் ஐந்து விஷயங்கள் அண்ணல் நபியின் உம்மத்தினருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

முதலாவது- நோன்பாளியின் வாய்வாடை அல்லாஹ்விடம் கஸ்தூரியை விட அதிக நறுமணமுள்ளதாக இருப்பது.

இரண்டாவது- நோன்பாளி நோன்பு திறக்கும் வரை கடலிலுள்ள மீன்கள் அவருக்காக மன்னிப்புத் தேடுவது.

மூன்றாவது- ஒவ்வொரு நாளும் சொர்க்கம் நோன்பாளிக்காக அலங்கரிக்கப்படுவது.

நான்காவது- அட்டூழியம் புரியும் ஷைத்தான்கள் அந்த மாதத்தில் விலங்கிடப்படுகின்றன.

ஐந்தாவது- ரமழான் மாதத்தின் கடைசி இரவில் நோன்பாளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படுகிறது. இது லைலத்துல் கத்ரு இரவு அல்ல; ஒரு வேலைக்காரருக்கு கூலி வழங்கப்படுவது அவர் அவ்வேலையை முடித்த பிறகுதான் என்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். ஆதாரம்- தர்கீப்

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.188

### பரிசுக்குரிய கவிதை

### சீரழிவு வாழ்க்கை

துள்ளிநான் திரியும் காலம்.
தொலைந்துமே போச்சுதே;
பள்ளிநான் செல்லும் எண்ணம்,
பகல்கனவாச்சுதே;
அல்லல் தரும் போரால்,
அகதிமுகாம் அடுப்பூதும்,
அவலமிதை யாரறிவார்?

பூ-இதயரெத்தினம், ஆரையம்பதி-03.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:



**ஒற்றுமை!**

சின்னவள் குழல் எடுத்து
எரிப்பது அடுப்பைத்தான்!
நம்மவர் குரல் கொடுத்து
எரிப்பது எம்மைதான்!

உன்னவன்- வட்டவளை.

**பழையன மறைக!**

பாழான நாட்டிலினி
பழையதெல்லாம் மறைகவென்று
பாலகி நான் பொங்குகின்றேன்
பானையிலே பொங்கலொன்று!
அன்பும் பொங்காதோ?
அமைதி யுகம் வாராதோ?
சின்னமணித்தீவில்
சிரிப்பு அலை கேளாதோ?

நிஜந்திக்கா கனகசிங்கம்- கல்லடி, மட்டக்களப்பு.

**இழப்பு**

பாதி வழி வருகையிலே
பறித்து விட்டான்
தந்தை தனை;
பாசமுடன்
வளர்த்த தாயும்
படுக்கையிலே நோயாக!
பச்சிளந் தங்கைக்கு
பாற்கஞ்சி காய்ச்சுகின்றேன்.

திருமதி எஸ்.வி.மூர்த்தி-புதிய நகர், இரஜவெல்ல.

**அகதிக் குலமகள்**

இடுப்பொடிய வாய்களைக்க,
பிடித்தகை கொப்பளிக்க,
வானமே குடை பிடிக்க,
கானகமே தஞ்சமென,
எடுத்த சில பண்டமுடன்-
அடுப்பூதி பொங்கலிடும்-
அகதிக் குலமகளே!
அவதியெல்லாம் போவதெப்போ?
அமைதிதான் வருவதெப்போ?
உனக்கும் தெரியாது
மெக்கும் தெரியாது!

திருமதி நே.சிவபாதம்- இரம்பைக்குளம், வவுனியா.

**போராட்ட நிழல்கள்**

நிவாரண அரிசியிலே
நிலவே நீ அடுப்பூது!
பாரம் தனைச் சுமந்து
பாவை இவள் படும்பாடு
நெருப்போடு மட்டுமல்ல;
நெடும் போரோடும் தான்!

ஆ.வசந்திதேவி- குருமன்காடு, வவுனியா.

## கவிதைப் போட்டி இல-191



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி- 15.02.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.191 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

**பச்சை மரம்**

பச்சரிசி கொதிநீரில் வேகுதம்மா;
பட்டமரம் வெந்தணலில் கருகுதம்மா;
பச்சைமரம் பசித்தீயில் உருகுதம்மா;
பார்ப்பவரின் கண்களும்நீர் கசியுதம்மா.

பா.எல்றோய்- இறம்பைக்குளம், வவுனியா.

**அது அந்தக் காலம்**

முத்தையன் கட்டில் விளைந்த நெல்லை
...ருகண்டி பிள்ளையாருக்கு பொங்கலிட்டு
மூட்டையாய் கட்டிவைப்போம் அன்று!
முக்கால் பேணி அரிசிக்கு முழுகுகிறோம் இன்று!

கே.செந்தில்பவன்- பட்டாணிச்சியூர், வவுனியா.

**கொடுப்பனவு**

அரிசியில்லாக் கலயமொன்று
அடுப்பினிலே;
அருகே ஓரிளந்தளிர் பசியினிலே.
கொடுப்பனவு இன்றில்லையேல்...
குடும்பமே மூழ்கும், வறுமையிலே!
இப்படியிருக்கு எங்கள் நிலை;
எப்போது வரும் சகஜ நிலை?!

மோ.மோகனா- கரப்பன்காடு, வவுனியா.

**பிரச்சனை**

சிறுமியே விலகு!
ஊதுகுழலை எம்
தலைவரிடம் கொடு!
ஊதி ஊதி
பெரிசாக்குவதில்
சிறந்தவர்கள் அவர்கள்!

சுபா வரன்- கண்டி.




# வாசக(ர்) சாலை

அன்பின் முரசுக்கு எங்கள் முதற்கண் நன்றி! நீர் வாரா வாரம் வழங்கிவரும் அம்சங்கள் அனைத்தும் அருமையிலும் அருமை. 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை, அற்புதன் தரும் தொடர் அற்புதமாகவே உள்ளது'. ரசிகனின் இலக்கியநயம் இதயத்தை நிறைக்கின்றது. மேலும் உன் பணி தொடரட்டும்.

எஸ்.வித்தியா சத்தியா, மன்னம்பிட்டி.

என் அன்பின் முரசே! காதிலை பூ கந்த சாமியாரின் பதிலுக்குப் பதில் பாட்டோடு சூப்பர். இலக்கிய நயமோ இதயத்தில் இனிப்பு. சீனி விசிட் சுடச் சுட இவ்வாறு நீ சுமந்து வரும் அம்சங்கள் தேனிலும் இனிமை. முரசே, உன் பணி சிறக்க எம் வாழ்த்துக்கள்.

த.சித்திரநாத், தனுஜா, சத்துருக்கொண்டான், மட்டக்களப்பு.

பட்டுச் சேலையுடன் இருவரைப் பார்த்தவுடன் முரசின் பட்டுச் சேலைப் பரிசுத்திட்டத்தில் பரிசு பெற்ற வாசகிகள் இருவர் என்று நினைத்தேன். அடடே! உயிர்த்தோழிகளல்லவா? பொருத்தமான இடத்தில் படத்தைப் போட்டு குழப்புவது உமக்கொரு வேடிக்கை?

தெய்வா விஜயகுமார், சிலாபம்.

வாரத்தில் ஒரு நாள் வலம் வந்து எம் இதயத்தில் இடம் பிடித்த என் இதய முரசே! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சிறப்பு. அதில் 'அனிதா இளம் மனைவி' தொடர் அருமையிலும் அருமை. கொள்ளைராணி பூலான்தேவி தொடர் விறுவிறுப்பாகப் போகிறது. தொடரட்டும் உன் இனிய பணி. என்றென்றும் என் இனிய வாழ்த்துக்கள்.

மா.ஜெயந்தி, அன்புவழிபுரம்.

என் இனியமுரசே!

உனது பணி என்றும் தொடர என்றும் என் இனிய நல்வாழ்த்துகள். நீ தரும் ஒவ்வொரு செய்திகளும் உண்மையாகவே இருக்கின்றன. உனது தங்கங்களான கொள்ளைராணி, அல்பிரட் துரையப்பா, இராமாயணம், தூக்குமேடைக் குறிப்பு முதலியவை மிகவும் சிறப்பானவை. உனது பணி என்றும் இனிதாய் தொடர வாழ்த்துக்கள்.

பா.சசிகுமார், பன்சலைவீதி, அப்புத்தளை.

முரசை ஒலித்து வரும் தினமுரசே!

நீ கொண்டு வரும் ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு முத்தாகும். கவிதைத் துளிகள் எமது இதயத்தை ஈரமாக்குகின்றன. சிந்தியா பதில்கள் நல்லவை; என்றும் மனதைவிட்டு நீங்காதவை.

சண்முகநாதன் சுபாஷினி, இராகலை.

உண்மை முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் எக்ஸ்ரே ரிப்போர்ட், இராமாயணம், இலக்கிய நயம், பாப்பா முரசு என்பன என்னை மிகவும் கவர்ந்தவை. மென்மேலும் உன் பணி தொடர என் தமிழ் வாழ்த்துக்கள்.

அ.அச்சுதன், சேனையூர்-06, மூதூர்.

வாரந்தோறும் நீ சுமந்து வரும் அம்சங்கள் அனைத்தும் அருமை காதிலை பூ கந்தசாமியாரின் நகைச்சுவைக்கு பஞ்சமில்லை. மற்றும் லேடீஸ் ஸ்பெஷல் பயனுள்ளது, 'தகவல் பெட்டி' வியக்க வைக்கின்றது. ரசிகனின் இலக்கிய நயமோ அருமையிலும் அருமை.

திருமதி ராதா சிவபெருமாள், டவுன் சைட் எஸ்டேட்.

## குறைந்தது வேண்டாம்!

அன்பின் முரசே!

முரசின் சேவையைப் பாராட்டுகிறேன்.

தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சனைத் தீர்வுக்கு காலமும் நேரமும் நெருங்கி வருவதுபோல் தெரிகிறது.

ஆனாலும் தன்மானத்துடனும் சுயமரியாதையுடனும் தீர்வு அமைந்திருக்க வேண்டும் என்பது தமிழ் மக்களினது பெருவிருப்பாகும்.

தமிழ்பேசும் மக்களின் வடகிழக்கு தாயகத்தின் முழு அங்கீகாரத்துடன், சுயாட்சி சமஷ்டி அரசியல் அமைப்பு முறையாகும்.

சுருக்கமாகச் சொன்னால், தமிழ்பேசும் மக்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்ற ஜனநாயக ஆட்சியாகும். அத்துடன் அமைதி, சாந்தி, சமாதானத்துடன் பொருளாதார, கல்வி மற்றும் தாயகத்தின் சகல அபிவிருத்திகளும் சுயாட்சியில் வேண்டும் என்பதே இலட்சியக் கோட்பாடாகும்.

பல வருடகால சாத்வீக, அகிம்சை, ஆயுதப் போராட்டங்களின் காரணமாக, அழிவுகள், அவலங்கள், இடம்பெயர்வுகள் மற்றும் பலவிதமான துன்பங்களுக்குப் பின்னரும் குறைந்த அளவிலான தீர்வு முறைகளை ஏற்றுக்கொள்வது மடமையிலும் மடமையாகும்.

எஸ். ஆர்.எஸ்.தேவதாசன், முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்.

### மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:

- எஸ்.எஸ்.வேணுகரன், பெரிய நீலாவணை-01.
- ஏ.சிவபாலன், அக்கரப்பத்தனை.
- சி.கணேசமூர்த்தி, ஆரையம்பதி-02.
- ஆர்.கே.மதி, இராகலை.
- முபைதீன் முபாலா, றியாட்-சவூதி அரேபியா.
- கோ.சிற்தரன், பொத்துவில்-03.
- செ.குலம், கரடியனாறு.
- ஆர்.ஸ்ரீரங்கன், திருமலை.
- அ.சிவதீபன், மன்னார்.
- எம்.நிலாமுத்தீன், தெல்தோட்டை.
- எஃப்.நூருன் அஸ்மியா, குவைத்.
- கங்காதரன், கனடா.
- எஃப் நக்கத், தெகிவளை.
- எம்.எம்.பிறோஸ், அக்குறணை-7.
- ஏ.ஜே.எம்.ஜஃபார், கொழும்பு-15.
- ப.மசீனா, திருமலை
- எம்.என்.சிவக்குமார், ருவன்வெல்ல.
- சசிகலா நடேசபவானந்தம், திருமலை.
- எம்.பரராஜசிங்கம், வெள்ளவத்தை.
- திருமதி புஸ்பலதா தவராஜா, செட்டிபாளையம்.
- செல்வி-திருமலை.
- எஸ்.அன்னலெட்சுமி, மன்னம்பிட்டி.
- செ.சுந்தரி, விடஸ்டேல்.
- எஸ்.அபிராமி, வாழைச்சேனை.
- ஆர்.ஜெகதீசன், காரைதீவு-12.
- கே.ஜெயப்பிரபு, முந்தல்.
- செல்வி ஜி.யோகராணி, இரத்தினபுரி.
- பர்ஹா உதுமாலெவ்வை, கல்முனை-04.
- செல்வி விஜயலெட்சுமி, மண்டூர்.
- ரா.தங்கமணி, மடுல்சீமை.
- ஆர்.குணசேகரம், கிண்ணியா-01.
- அ.வரதகுமாரன், உடப்பூர்.
- இ.ஜெகநாதன், மண்டூர்.
- மொஹமட் ஸன்பர், கிண்ணியா.
- எஸ்.எம்.இல்யாஸ், நிந்தவூர்.
- செல்வி இ.உதயகலா, மட்டக்களப்பு.
- மு.ஆயிஷாவீவீ, புதிய காத்தான்குடி-02.



படிப்பகம்

www.padippakam.com

# பிரதி பாதுகாப்பு அமைச்சர்மீது புலிகள் குறி!

## தற்கொலைத் தாக்குதலுக்கு புலிகள் திட்டம்!

உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பாக படையினர் பாரிய இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவர் என்று முரசு முன்னர் கணிப்பு வெளியிட்டது தெரிந்ததே.

04.02.97 அன்று வன்னியில் படையினர் படை நகர்வு நடவடிக்கையில் இறங்கினர். ஆயிரக்கணக்கான துருப்புக்கள் கனரக வாகனங்களுடன் வன்னி நடவடிக்கைக்காக குவிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தல் சமயத்தில் படையினரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை 'ஒப்பரேஷன் எலக்ஷன் றூட்' என்று அழைக்கலாம் என அரசியல் விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டார்.

வன்னியில் தரைப்பாதை திறப்புக்கான முயற்சியில் படைகள் ஈடுபடக் கூடும் என்று முன்னரே எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் படையினர் நீண்ட நிலப் பரப்பில் தொடர்ந்து நிலைகொள்வது கடினமாக இருக்கும்.

ஊடுருவித் தாக்கும் நடவடிக்கைகளிலும், நீண்டதூர ஆட்டிலெறி ஷெல் தாக்குதல்களிலும் புலிகள் ஈடுபடக்கூடிய வாய்ப்பு இருக்கும். புலிகளின் பதிலடி நடவடிக்கையைப் பொறுத்தே படையினரின் நடவடிக்கைகள் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வன்னிப்போர் வியூகங்கள் தொடர்பான மேலதிக விபரங்கள் அடுத்தவார முரசில் இடம்பெறும்.

வன்னியில் படையினரின் பாரிய நடவடிக்கையை புலிகளும் எதிர்பார்த்திருந்தனர். படை நடவடிக்கைக்கான ஆயத்தங்கள் நடைபெறுவதாக கடந்தவாரம் புலிகள் தெரிவித்திருந்தனர்.

### தலைநகரில் புலிகள்

உள்ளூராட்சித் தேர்தல் சமயத்தில் தலைநகரில் தாக்குதல் நடத்த புலிகள் திட்டமிட்டிருந்தனர் என்பது தெரியவந்துள்ளது.

கொழும்பில் வீதிச் சோதனையில் சயனைட் உட்கொண்டு மரணமான ஜெகதீஸ்வரி, புலிகளின் தாக்குதல் பிரிவைச் சேர்ந்தவர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஜெகதீஸ்வரி மரணமான செய்தி அறிந்ததும் அவருடன் வந்திருந்த தாக்குதல் குழுவினர் தமது இருப்பிடங்களை மாற்றிக் கொண்டனர்.

அவர்களில் ஒருவர் கொழும்பில் இருந்து திருமலைக்குத் தப்பிச் சென்றதாகவும், திருமலையில் வைத்து அவர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வழக்கமாகச் செல்லும் பாதையூடாகவே ஜெகதீஸ்வரி ஓட்டோவில் சென்றுள்ளார். அப்பாதையில் வீதிச் சோதனைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதில்லை. கங்காராம வீதியில் ஒரு வீதிச் சோதனை அரண் இருக்கிறது. எப்போதாவது திடீரென்றுதான் பொலிசார் அங்கு நின்று சோதனையிடுவர்.

ஜெகதீஸ்வரி கங்காராம வீதிவழியாக வெள்ளவத்தைக்குச் செல்லும்போது பொலிசார் அந்தச் சோதனை அரணில் நிற்கவில்லை. அதனால்தான் மீண்டும் அப்பாதை வழியாக ஜெகதீஸ்வரி ஓட்டோவில் திரும்பிச் சென்றிருக்கிறார். அப்போது திடீரென்று கங்காராம சோதனை அரணில் பொலிசார் நின்று சோதனையிட்டுக் கொண்டிருந்தனர்.

ஓட்டோவுக்குள் இருந்த ஜெகதீஸ்வரிக்கு பொலிசார் சோதனையிடும்போது பதட்டம் ஏற்பட்டுவிட்டது. சயனைட்டை உட்கொண்டு விட்டார்.

திருமலையில் கைது செய்யப்பட்டுள்ள இளைஞர் சில தகவல்களை வெளியிட்டிருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையின்மீது தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டதாக அவர் கூறியிருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மரணமான ஜெகதீஸ்வரி புலிகளின் தற்கொலைப் படைப்பிரிவு உறுப்பினரா, அல்லது கொழும்பில் புலிகளின் தாக்குதல் குழுக்களுக்கு இடையிலான தொடர்பாளரா என்பது சந்தேகமாக உள்ளது.

# வறுமை நிவாரண உணவு முத்திரை இரத்து!

## பொதுசன உதவிகள் குறைப்பு

இதுவரைகாலமும் வறிய மக்களுக்கு வழங்கப்பட்டுவந்த வறுமை நிவாரண உணவு முத்திரைகளுக்கும் மண்ணெண்ணெய் முத்திரைகளுக்கும் இனிமேல் உணவுப் பொருட்களை வழங்காது உடனடியாக இரத்துச் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வறுமை நிவாரண ஆணையாளர், திருமதி கே.பி.குணவர்த்தன தனது 21.01.97 ம் திகதியிட்ட சுற்று நிருபம் இலக்கம் 107 மூலம் வடக்கு- கிழக்கு மாகாண மாவட்ட செயலாளர்களுக்கும் சகல பிரதேச செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இவ்வறிவித்தலின் பிரகாரம், இதுவரை வறுமை நிவாரண உணவு முத்திரைகளை பெற்று தமது ஜீவனோபாயத்தை கழித்து வந்த ஆயிரக்கணக்கான வறிய குடும்பங்கள் நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

வடக்கு- கிழக்கு தவிர்ந்த நாட்டின் இதர பகுதிகளில் வறுமை நிவாரணத் திட்டத்திற்கு பதிலாக 'சமூர்த்தி' நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் வடக்கு- கிழக்கு தமிழ் பகுதிகளில் பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் ஒருசில பகுதிகளில் மாத்திரம் தற்சமயம் 'சமூர்த்தி' ஊக்குவிப்பாளர்கள் நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வேளையில் யுத்த சூழ்நிலைகளினால் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டு, இடம் பெயர்ந்து, அகதிகளாக, தொழிலற்று அல்லலுறும் இம்மக்களுக்கான வறுமை நிவாரணத்தை உடனடியாகவே இரத்துச் செய்திருப்பது கவலைக்குரியது என்று பரவலான கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இது ஒரு புறமிருக்க, இல்லாத இயலாத ஏழைக்குடும்பங்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டுவந்த பொதுசன உதவிப் பணத்தை (பிச்சை சம்பளம், தொழுநோய், காசநோய், புற்றுநோய், குஷ்ட ரோகம், போன்றவற்றுக்காக வழங்கப்படும் உதவிப் பணம்) ஒவ்வொரு பிரதேச செயலகமும் தமது வருடாந்தக் கொடுப்பனவில் சுமார் இரண்டு இலட்ச ரூபாவை குறைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# கைதானோர் விடுதலை

## குண்டுவீச்சில் இருவர் பலி

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் உள்ள தமது வீடுகளைப் பார்வையிடச் சென்றவர்கள்மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கூட்டமாக அவர்கள் சென்றதைக் கண்ட படையினர், புலிகள் என்று கருதி துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர். துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்தார். ஏனையோர் கைதுசெய்யப்பட்டனர். கடந்த மாதம் 26ம் திகதி இச் சம்பவம் இடம் பெற்றது.

கைதுசெய்யப்பட்ட 15 பேர் தற்போது இராணுவத்தினரால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் உடையார் கட்டு பகுதியில் இடம்பெற்ற குண்டுவீச்சில் பொதுமக்கள் இருவர் பலியானார்கள். 29.01.97 அன்று நடைபெற்ற இத்தாக்குதலில் கந்தையா ராஜ்குமார், வயது 31, விஷ்ணுகுமார் வள்ளிமயில், வயது 40 ஆகியோர் பலியாகினர். சரோஜாதேவி என்னும் 27 வயது இளம்பெண் காயமடைந்தார்.

# சென்னையில் மாபெரும் பேரணி!

## கரும்புலிகளுக்கு ஆதரவாக கோஷம்

பாட்டாளி மக்கள் கட்சியினரால் 1.02.97 அன்று சனிக்கிழமை தமிழ்நாட்டில் 'ஈழத் தமிழர் பாதுகாப்பு பேரணி' நடத்தப்பட்டது.

பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமான பேரணி, சீரணி அரங்கத்தைச் சென்றடைய ஏழுமணி நேரமானது. பல்லாயிரக்கணக்கான மக்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் நடைபெற்ற இப் பேரணியில் புலிகளுக்கு ஆதரவான கோஷங்கள் எழுப்பப்பட்டன.

'வெல்லட்டும் வெல்லட்டும் கரும்புலிகள் வெல்லட்டும்', 'தோற்காது தோற்காது தம்பியின் படை தோற்காது', "எச்சரிக்கை எச்சரிக்கை சந்திரிக்காவுக்கு எச்சரிக்கை!" போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

"காப்பாற்று காப்பாற்று ஈழத் தமிழனைக் காப்பாற்று!" என்ற கோஷத்தைத் தவிர வேறு எதையும் சொல்ல வேண்டாம் என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் மைக் மூலம் அறிவித்தார்.

இந்தப் பேரணியின் காரணமாக சென்னை நகரின் போக்குவரத்துக்கள் ஏழு மணிநேரம் தடைப்பட்டன.

ரயில் போக்குவரத்துக்களும் தடைப்பட்டன. பேரணிக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

ஊர்வலத்தில் மொத்தம் 914 வாகனங்களும் கலந்து கொண்டன.

# இந்தியப் படை கால ஆட்திரட்டல்கள்

## ஈ.பி.ஆர்.எல்.எஃப். மன்னிப்புக் கோருகிறது

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் கடந்தவாரம் ஒரு பிரசுரம் வெளியிட்டுள்ளனர். இந்திய அமைதிப்படை காலத்தில் தமது இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஆட்திரட்டல் சம்பவங்களுக்காக அப் பிரசுரத்தில் மன்னிப்புக் கோரியுள்ளனர்.

"கடந்த ஐந்து ஆறு வருடங்களாக யாழ் மக்களுடன் தொடர்புகொள்ள முடியவில்லை. அதனால் ஏனைய இயக்கங்கள் போலவே நாமும் விமர்சிக்கப்பட்டோம். ஆனால் உண்மை அதுவல்ல.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். 1990 முதல் ஆயுதங்களற்ற முழுமையான அரசியற் கட்சியாகவே செயற்பட்டு வருகிறது," என்று அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுளளது.

இதேவேளை ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள செய்தி ஒன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்: "நாம் ஆயுதங்கள் தூக்கத் தேவையில்லை. குண்டெறியத்தேவையில்லை. ஆனால் இவற்றை வைத்திருப்போருக்கு எதிராக, இவற்றை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராக ஒன்று திரள்வோம்," என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 03.02.97 அன்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருக்கு இராணுவத்தினரால் ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஈ.பி.ஆர். எல்.எஃப். கேட்டுக் கொண்டதன் பேரிலேயே ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# "அரசின் நடவடிக்கை போதவில்லை!"

## அமெரிக்கா கண்டனம் தெரிவிப்பு!

கொழும்பு மாநகரச் சுற்று வட்டாரத்தில் அமைந்துள்ள பொல்கொட ஏரியிலும் ஏனைய ஏரிகளிலும் 23 தமிழ் இளைஞர்களின் பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவர்களைக் கொலை செய்தவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் அதிரடிப்படையைச் சேர்ந்த 22 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு, கடந்த வருடம் பெப்ரவரியில் மீண்டும் கடமைகளுக்குச் சேர்க்கப்பட்டுவிட்டனர். இவர்களுக்கு எதிரான விசாரணைகள் எவ்வாறு நடத்தப்பட்டன; அவற்றின் பலாபலன்கள் என்ன என்பதை பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

இவ்வாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள- 1996ம் ஆண்டுக்கான மனித உரிமைகள் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் வருமாறு:

கடந்த வருடத்தின் பிற்பகுதியில் யாழ் குடாநாட்டில் 300 பேரும் ஏனைய பகுதிகளில் 50 தமிழர்களும் காணாமற் போயிருந்தனர். இவர்கள் தொடர்பாகவும் போதுமான விசாரணைகள் நடத்தப்படவோ குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவோ தண்டனை கொடுக்கவோ பொதுஜன முன்னணி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

அவசரகால நிலையின் அடிப்படையில் வவுனியாவைச் சேர்ந்த ஒரு வர்த்தகர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அவருடைய எரியூட்டப்பட்ட சடலம் கடந்த ஜூலை மாதம் வடமத்திய மாகாணத்திலுள்ள கிரிபவா என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டது. இது தொடர்பாக வவுனியா பொலிசைச் சேர்ந்த பொறுப்பதிகாரி உட்பட அறுவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். விசாரணைகள் நடத்தப்பட்டு சட்டமா அதிபருக்கும் அறிக்கைகள் அனுப்பப்பட்டன. ஆனால் வருடமுடிவில்கூட எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பொதுஜன முன்னணி பதவிக்கு வந்த போது சூரியகந்தையில் 300 சடலங்களும் அங்கும்பறையில் 36 சடலங்களும் பாரிய குழிகளுக்குள்ளிருந்து தோண்டி எடுக்கப்பட்டன. இவர்கள் அனைவரும் 1989ல் பொலிசாரால் கொல்லப்பட்டனர் என்று கூறப்பட்டது. ஆனால் இது தொடர்பாக அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுத்துள்ளதாகத் தெரியவில்லை.

இவ்வாறு பல அம்சங்களைச் சுட்டிக் காட்டும் அமெரிக்க மனித உரிமைகள் அறிக்கை, 1994 ஒக்டோபரில் காமினி திசநாயக்காவும் 58 பேரும் கொலையுண்டது தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் பற்றி எதுவித அபிவிருத்தியையும் காணமுடியவில்லை என்று தெரிவிக்கிறது.

# "சிங்கள மக்களுக்கு பேராபத்து!"

## கமிஷன் முன் பேராசிரியர் சாட்சியம்

"உலகனைத்திலுமுள்ள சகல இன-மதப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் தங்களுக்கென்றொரு நாட்டில் வாழக் கூடியதாக இருக்கிறது. பௌத்த- சிங்களவர்களைப் பொறுத்த மட்டில் சின்னஞ்சிறிய இலங்கைத் தீவு மட்டுமேயுள்ளது. ஆனால் இன்றைய அரசியல் வாதிகளின் நடைமுறையினால் அந்த உரிமையையும் பறிகொடுக்க வேண்டிய நிலைதான் ஏற்படப்போகிறது," என்று பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் டி.எம். மதுமபண்டார தெரிவித்தார்.

சிங்களவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் 'சிங்கள கொமிஷன்' முன்பாகச் சாட்சியமளிக்கையில் இக்கருத்தை பேராசிரியர் வெளியிட்டார்.

"இந்நாட்டின் அரசியல்வாதிகள், நாட்டின் தேசியப் பிரச்சனைகளில் கவனம் செலுத்தாமல், தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தம் கட்சிக்குமே அரசியல் தலைமைப் பீடத்தில் முக்கிய இடம் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்று பாடுபடுகின்றனர்.

இதன் காரணமாக நாட்டின் பெரும்பாக நிலம் பௌத்த சிங்களவர் அல்லாதோரின் உடைமையாகிவிடுகிறது. தெல்தெனியாவில் ஒரு சுடலைக்காக ஒரு சிறு துண்டுக் காணியைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது," என்று பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

காமினி இரியகொல்ல சாட்சியமளிக்கையில், "சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கையின் படி மலையகத்திலுள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளர்களில் 525,000 பேரை இந்தியா அழைத்துக்கொள்வதென்றும் எஞ்சிய 300,000 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் அதன்பின்னர் பதவிக்குவந்த அரசியல்வாதிகள் இதற்கு மாறாக பல இலட்சம் இந்திய வம்சாவளியினருக்குக் குடியுரிமை வழங்கிவிட்டனர். இதன்காரணமாக தொண்டமான் போன்றோர், ஆட்சி பீடத்திலுள்ளவர்கள் மீது அதிகாரம் செலுத்தி, இந்திய வம்சாவளி மக்களுக்கு மென்மேலும் சலுகைகளைப் பெற்றுக் கொடுக்கிறார்கள்," என்றார்.

# படை — புலிகள் மோதல்

யாழ்ப்பாணம் தீவுப்பகுதிகளில் ஒன்றான காரைநகரில் இறங்குதுறையருகே புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று படையினர் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 28.01.97 அன்று இத்தாக்குதல் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 1.02.97 அன்று படையினருக்கும், புலிகளுக்கும் இடையிலான மோதலில் தமது தரப்பில் லெப்டினன்ட் குயிலன் என்பவர் பலியானதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர். படையினர் தரப்பில் மூவர் பலியானார்கள். இம்மோதல் தொடர்பாக படையினர் விடுத்த செய்திக் குறிப்பில், தமது தரப்பில் மூவர் பலியானதாகவும், புலிகள் தரப்பில் 7முதல் 8பேர் வரை பலியானதாகவும் தெரிவித்துள்ளனர்.

திருக்கோணமலை மாவட்டத்தில் புலிகள் மீது இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் கப்டன் தமிழ்வாணன் (அழகுதுரை ஜெகசோதி) என்பவர் பலியானார்.

நாசிவன்தீவில் படையினரின் தாக்குதலில் லெப்டினன்ட் மனுதன் (வேலுப்பிளை வரதராயன்-வாழைச்சேனை) என்பவர் பலியானதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

# பொன்னாலையில் 9 பேர் பலி!

## பலியானவர்களில் மூவர் பெண்கள்

யாழ்ப்பாணம் காரைநகரில் உள்ள பொன்னாலைப் பாலத்திற்கு தென்கிழக்கே ஒன்றரைக் கிலோமீட்டர் தூரத்தில் 'கிளைமோர்' கண்ணிவெடித் தாக்குதல் ஒன்று இடம்பெற்றது.

ரோந்து சென்ற படையினரில் ஆறுபேர் காயமடைந்தனர். ஒருவர் பலியானார்.

இச் சம்பவத்தை அடுத்து ஒன்பது பொதுமக்கள் பலியாகி உள்ளனர். ஆறுபேர் காயமடைந்தனர். பலியானவர்களில் மூன்று பேர் பெண்களாவர்.

கிளைமோர் தாக்குதலின் பின்னர் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் காரணமாகவே பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எப்.எஃப். ஆகிய கட்சிகள் யாழ்ப்பாணத்தில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளன.

படையினர்மீதே அக் கட்சிகள் குற்றம் சாட்டியிருந்தன.

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. விடுத்த அறிக்கை ஒன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"தொழிலுக்குச் சென்ற மக்களை இடைமறித்த இராணுவத்தினர் அவர்களைத் திரும்பிச் செல்லுமாறு கூறினார்கள். மக்கள் திரும்பிச் செல்லும்போது கைக்குண்டு ஒன்று வெடித்த சத்தம் கேட்டது. அதனைத் தொடர்ந்து சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

மக்கள் விடுதலை என்று கூறிக்கொண்டு மக்கள் செறிந்துள்ள பகுதிகளில் புலிகள் தாக்குதல் நடத்தும்போதும், அதனை எதிர்த்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்தும்போதும் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது தமிழ்ப் பிரதேசம் எங்கும் தொடர்ச்சியாக நடைபெறும் நிகழ்வாக உள்ளது.

பொதுமக்கள் விடயத்தில் மிக நிதானமாகச் செயற்படுமாறு படையினரை வலியுறுத்துமாறு படை அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறோம்" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் படையினர் விடுத்துள்ள அறிக்கையில், பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு புலிகளின் கிளைமோர் தாக்குதலே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு காரணமாகவே பொதுமக்கள் பலியானதாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் 'உதயன்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

'உதயன்' பத்திரிகை ஆசிரியர் இராணுவத்தினரால் விசாரிக்கப்பட்டதாகவும், இராணுவத்தினர் தொடர்பான செய்திகளை தமது அனுமதி பெற்றபின்னரே வெளியிடுமாறு அறிவுறுத்தப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

# பிரிட்டனின் நிலைப்பாட்டில் சந்தேகம்!

## வடக்கில் புலிகள் தெரிவிப்பு

இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்ய பிரிட்டன் தயார் என்று பிரிட்டிஷ் அமைச்சர் கூறியிருப்பதை புலிகள் வரவேற்றுள்ளனர். அதே வேளையில் பிரிட்டனின் நிலைப்பாடுகள் குறித்தும் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

வன்னியில் இருந்து புலிகளால் வெளியிடப்படும் 'ஈழநாதம்' தினசரி தனது ஆசிரியர் தலையங்கத்தில் அந்தச் சந்தேகங்களைத் தெரிவித்துள்ளது.

"இரு தரப்பினரும் கேட்டுக்கொண்டால் இனப்பிரச்சனை தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்கலாம் என்று பிரிட்டன் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. இனப்பிரச்சனைத் தீர்வில் புலிகளின் பங்கினை பிரிட்டன் ஏற்றுக்கொண்டுள்ளதின் வெளிப்பாடு இது என்று கொள்ளலாம்.

இந்நிலையினை பிரிட்டன் உணர்ந்திருப்பினும்கூட அதன் ஒரு சில நடவடிக்கைகள் கேள்விக்குரியதாகவும் உள்ளன. அதாவது சிறீலங்காவுக்கு ஒருவகையில் தேவையான உதவிகளை வழங்கிக்கொண்டு மறுபுறம் அதன் நடவடிக்கைகளை விமர்சனம் செய்வதுபோலவும் அமைந்துள்ளது. இது பிரிட்டனின் நோக்கம் குறித்து சந்தேகத்தை விளைவிப்பதாக உள்ளது.

பிரிட்டன் சிறீலங்காவுக்கு நிதி உதவிகளை வழங்கிவருகிறது. இதில் சிறீலங்கா அரசு இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு பதில் இராணுவத்தீர்வை நாட ஆதாரமாகவுள்ளது.

இந்த நிலைப்பாடானது பிரிட்டன்மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைப்பதற்கு இடையூறாக உள்ளது. மாறாக சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது. ஏனெனில் பிரிட்டன் கூறுவதைப்போல, இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுதான் வழி எனில், சிறீலங்கா அரசு இராணுவத்தீர்வை தீவிரமாக நாடி நிற்கின்ற போதும், பிரிட்டன் ஏன் சிறீலங்காவுக்கு பொருளாதார உதவிகளை முனைப்புடன் செய்ய வேண்டும்?

தனது நிலைப்பாட்டுக்கு ஏற்ப அரசியல் தீர்வொன்றைக் காணுமாறு பிரிட்டன் ஏன் சந்திரிகா அரசை நிர்ப்பந்திக்கக் கூடாது?" என்று கேள்வி எழுப்பியுள்ளது ஈழநாதம்.

## உயிரிழந்தோர் விபரம்:

பொன்னாலை சம்பவத்தில் உயிரிழந்தோர் விவரம்:

1. சின்னப்பொடியன் செல்லன் (வயது 60) 2. இரத்தினம் சரஸ்வதி (வயது 45) 3. சற்குணராசா புவனேஸ்வரி (வயது 20) 4. நாகமுத்து நகுலேஸ்வரன் (வயது 15) 5. வைரவன் ஆனந்தமூர்த்தி (வயது 30) 6. வைரவன் ஆனந்தமூர்த்தியின் மனைவி சாந்தமல்லி (வயது 28) 7. சின்னவன் சண்முகம் (வயது 65) 8. சின்னவன் நாகன் (வயது 55) 9. நாகன் புவனேந்திரன் (வயது 20). இவர்கள் அனைவரும் பொன்னாலையைச் சேர்ந்தவர்களாவர்.



படிப்பகம்

www.padippakam.com

# யாழ்—வலிகாமத்திலிருந்து ஒரு கடிதம்

## "கைதுகள் தொடர்ந்தால் நிம்மதி எப்போது?"

வலிகாமத்தில் மீளக் குடியேறி பத்துமாதங்களாகின்றன. இன்னும்தான் இங்குள்ள மக்கள் இராணுவ அத்துமீறல்களுக்கு ஆளாகி வருகின்றார்கள். எங்கும் எதிலும் இராணுவம்தான். அன்று போடப்பட்ட சென்றிகள் இன்றும் தொடர்கின்றன. சோதனைகள், வேதனைதரும் பேச்சுக்கள், சுதந்திரமாக விரும்பிய நேரம் விரும்பிய இடத்திற்குச் செல்ல முடியாத நிலை.

வலிகாமம் வரும் மக்களுக்கு பூரண பாதுகாப்பு என்றும், மன்னிப்பென்றும் பன்னிப்பன்னி இராணுவம் களம் வகுத்த போது ஒலிபெருக்கி மூலம் ஒலி பரப்பியது.

இங்கு விடுதலைப் புலிகளின் மாவீரர், போராளி குடும்பத்தினர் வந்திருக்க மாட்டார்கள். அவர்கள் வன்னியிலேயே குடியேறிவிட்டனர். ஆனால் புலிகள் இயக்க உறுப்பினர்கள் வலிகாமத்தில் நாம் மீளக்குடியமர வந்தபோதே இருந்திருக்கிறார்கள்.

பத்தாண்டுகளோ, ஐந்தாண்டுகளோ, முன்னர் புலிகளுக்கு உதவியோர் இன்றும் விசாரிக்கப்படுகிறார்கள்.

புலிகளுடன் நெருக்கமில்லாதோரும் சில பிழையான தகவல்களினால் கைது செய்யப்பட்டுள்ளனர். பின்னர் விடுதலையாயினர். ஆனால் முதலில் 'நல்ல சாப்பாடு.'

சந்தேகிப்பவர்களை இராணுவம் விசாரிக்க வேண்டும். அதில் பிரச்சனை எதுவும் இல்லை. அப்படி விசாரிப்பவர்கள் தக்க ஆதாரங்களைப்பெற்ற பின்னரே நடவடிக்கையில் இறங்க வேண்டும். அப்படி எதுவுமே இங்கு நடப்பதில்லை.

ஒருவரை விசாரிப்பதானால் அவரை பகலில் அழைத்து விசாரிக்கலாம். ஆனால் இங்கு நடப்பதென்ன? நட்ட நடு நிசியில், உறங்கும் நேரம் கதவைத் தட்டி எழுப்பி முகாமுக்குக் கொண்டு செல்கிறார்கள். இது அவசியம்தானா? சமாதானத்தை நிலைநாட்ட வந்த இராணுவத்தினர்தானா இவர்கள்?

ஒருநாள் இரவு 9 மணி; அடைமழை; குளிரின் காரணமாக நித்திரைக்குச் சென்றுவிட்டோம். கதவு தட்டும் சத்தம் கேட்டது. யாரெனக் கேட்டேன். முதலில் இயக்கம் என்றார்கள். "யாராயினும் கதவுதிறக்க மாட்டேன். காலை வாருங்கள்!" என்றேன். அதன்பின்னர் "ஆமி திறவுங்கள்!" என்றார்கள். அப்போது வீட்டில் நானும், மனைவியும் எனது 24 வயது மகளும் தானிருந்தோம்.

மகள் "அப்பா கதவைத் திறவாதையுங்கோ," என அழுதாள். மனைவியாரும் பயந்து அழுதாள். "கதவை உடைக்கப் போகிறோம். திறவுங்கள்" என பலதடவை கூறியபின்னர், நடப்பது நடக்கட்டுமென மனைவியையும் மகளையும் ஓரறையில் விட்டுவிட்டு கதவைத் திறந்தேன்.

"உங்களுக்குத் தெரிந்த விடுதலைப் புலிகளைச் சொல்லுங்கள்!" என்றார்கள். "இங்கிருந்தவர்கள் வன்னி சென்றுவிட்டார்கள்" என்றேன். "உங்களுக்கும் அவர்களுக்குமுள்ள தொடர்பு என்ன?" என்று கேட்டார்கள். அதனையும் விபரமாகச் சொன்னேன். பலவித பயமுறுத்தல்களைச் செய்தார்கள். எனக்கும் அவர்களுக்கும் எதுவித தொடர்புமில்லை என்று திட்டவட்டமாகக் கூறினேன். பலரது பெயரைச் சொன்னவர்கள். அவர்களை எனக்குத் தெரியாது என்றேன். இத்தனைக்கும் நாம் இடம் பெயர்ந்து தென்மராட்சி போகுமுன் நடந்த சம்பவங்களையே கேட்டார்கள். எல்லாரிடமும் துப்பாக்கி இருந்தது.

அதன் பின்னர், சுமார் ஒரு மணிநேர விசாரணையின் பின்னர், நாம் இங்கு வந்ததையோ உங்களை விசாரித்ததையோ எவருக்கும் சொல்லக்கூடாதென்ற கடும் எச்சரிக்கை செய்துவிட்டுச் சென்றனர். எனக்கும், எனது மனைவிக்கும், மகளுக்கும் அன்றிரவு நித்திரையில்லை. தொடர்ந்து பல நாட்கள் மனவேதனையுடனும் பயத்துடனும் இருந்தோம். இப்படியே அடிக்கடி வந்து விசாரித்துப் போவதால் வலிகாமம் வந்ததைப் பற்றி அதிகம் விசனப்படுகிறேன்.

13.01.97 காலை ஆனைக்கோட்டைப் பகுதியில் துப்பாக்கி வேட்டுகள் கேட்டன. எவருக்கும் எதுவித காயமுமில்லை.

உடனடியாகவே இராணுவம் வந்து சுற்றிவளைத்து வீதியால் போனவர்களையும் வீட்டிலிருந்தோரையும் முகாமுக்குக் கொண்டு சென்றார்கள். பத்து மணிக்குப் பிடித்துச் சென்ற அனைவரும் இரண்டு மணிக்கே விடுவிக்கப்பட்டனர். சாதாரண பொதுமக்கள் இவ்வாறு கைது செய்யப் படுவது இன்று வலிகாமத்தில் சர்வ சாதாரண நிகழ்வாகின்றது. இந்த நிலையில் தமிழ் மக்கள் நிம்மதியாக இங்கு வாழ்வது எப்போது?

கே.வி.

# வைத்தியசாலைக்கு கட்டட வசதி!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகப் பெரிய பரப்பளவைக் கொண்ட ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில், சுமார் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம மக்களின் நீண்டகாலத் தேவையாக இருந்த செங்கலடி வைத்தியசாலைக்கு ஒரு கட்டட வசதி கிடைத்துள்ளது. கடந்த 23.01.97 அன்று ஒரு மாடி கொண்ட நிர்வாகக் கட்டடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 இலட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள இக்கட்டடத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர், வைத்திய கலாநிதி செல்வத்துரை அவர்கள், "எனக்கு முன்பேசிய எல்லோரும் பல குறைகளைச் சுட்டிக்காட்டினார்கள். வைத்தியசாலையைத் தரமுயர்த்தி மருந்துகளைக் கூடுதலாகப்பெற ஆவன செய்ய வேண்டுமென்று கூறினார்கள்.

ஆனால் வைத்திய சேவையின் நோக்கத்தை எல்லோரும் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். மருத்துவத்தைப் பற்றிய அறிவையும், விளக்கத்தையும், நோய் வருவதற்கான காரணங்களையும் அவற்றைத் தடுப்பதற்கான வழிவகை பற்றிய அறிவையும் மக்களுக்கு ஏற்படுத்தி ஆரோக்கியமாக வாழக் கூடிய செய்திகளைப் பரப்புவதேயாகும்.

வைத்தியசாலைகளின் தரத்தை உயர்த்தினால் வைத்தியர்களின் சேவை சிறப்படையும் என்று நினைப்பது தவறு. அது எந்தத் தரமுடைய வைத்தியசாலையாக இருந்தாலும் அங்கு கடமையாற்றும் வைத்தியர்களினதும், ஊழியர்களினதும் அர்ப்பணிப்பினால்தான் அவ் வைத்திய சாலையின் பெயர் சிறந்து விளங்கும். றோசாப்பூவை என்ன பெயர் சொல்லி அழைத்தாலும் அது மணக்கும்," என்றார்.

இந்நிகழ்ச்சியில் பல பிரமுகர்கள் உரையாற்றினார்கள். அவ்வைத்திய சாலையின் வைத்தியர் திரு.ரி. சச்சிதானந்தத்தின் சேவை எல்லோராலும் பாராட்டப்பட்டது. கிட்டத்தட்ட 80 ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கிராமிய ஆஸ்பத்திரியின் குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும் என்று அவர் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் அடிக்கடி எடுத்துக் கூறி வந்துள்ளார்.

தினமுரசும் இவ்வைத்தியசாலையின் அத்தியாவசிய மற்றும் அடிப்படைத் தேவைகள் பற்றிச் செய்திகள் வெளியிட்டு வந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# "ரெலிகொம்": புதிய இணைப்புகள்

(அக்குறணை நிருபர்)

பலகாலமாக பேசாமடந்தைகளாக இருந்த கட்டுகஸ்தோட்டை தொடக்கம் முழு அக்குறணை வரையிலுமான தொலைபேசிகள் ஜனவரி முதல் வெகு சிறப்பாக தொழிற்படுகின்றன.

இது விடயமாக ஏற்கனவே முரசில் இரண்டு செய்திகள் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. பாடசாலைகள். அலுவலகங்கள். ஏன் தபாலகத் தொலைபேசி கூட இயங்காமல் இருந்து வந்தது. தற்பொழுது பொதுமக்களுக்கு இருந்து வந்த அசௌகரியங்கள் நீங்கி விட்டன.

# குரும்பசிட்டி கனகரத்தினத்துக்கு பாராட்டு!

## கனடா விழாவில் 'ஆவண ஞானி' பட்டமளிப்பு!

கடந்த 40 ஆண்டுகளாக உலகத்தமிழர்களது– சிறப்பாக இலங்கைத் தமிழர்களது அரசியல், கலை சலாசார, இலக்கிய தொல்லியல், சமய வரலாற்றுத் தகவல்களைக் கையகப்படுத்திப் பேணிப் பாதுகாத்தும் வருவதோடு, அவற்றைக் கணனி மயப் படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுவரும் குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் அவர்களுக்கு, கனடாவாழ் தமிழ் மக்கள் "ஆவண ஞானி" என்ற சிறப்புக் கௌரவத்தை வழங்கிப் பாராட்டியுள்ளனர்.



கனடா ஸ்காபரோ நகரில் உள்ள வேபோண் கல்லூரி மண்டபத்தில் குரும்பசிட்டி நலன்புரிச்சங்க ஆதரவில் பாராட்டுவிழா நடைபெற்றது.

இந்தப் பாராட்டு வைபவத்தையொட்டி இரா. கனகரத்தினத்தின் சேகரிப்புக்கள் கொண்ட மாபெரும் கண்காட்சி ஒன்றும் 2வது தடவையாக மேற்படி மண்டபத்தில் இடம் பெற்றது. திரளான மக்கள் வந்து கண்காட்சி நடைபெற்ற இரண்டு நாட்களும் பார்த்து, தகவல்களைப் பெற்றுக் கொண்டதை அவதானிக்க முடிந்தது.

தனது மனைவி பவளராணியின் ஒரே துணையுடனும் ஒத்துழைப்புடனும் எவ்வித அரசியல் சார்புமின்றிக் கனது தளராத முயற்சியால் ஒரு நூற்றாண்டு காலத் தகவல்களை (1895–1996)த் திரட்டியதுமன்றி, அவற்றின் ஒரு பகுதியை– சுமார் 8000 ஆவணங்களை முதல் தடவையாகக் கடல் கடந்து கனடா நாட்டுக்கு எடுத்துச் சென்று வருங்கால சமுதாயத்துக்கு வழங்கும் நோக்குடன் கணனி மயப்படுத்தும் அவரது பணி பாராட்டுக்குரியது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் நிறுவனரான திரு. கனகரத்தினம் அந்த அமைப்பின் கனடாக்கிளை ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. உலகெல்லாம் பரவிய தமிழர் வரலாற்றைத் தேடித் திரட்டிவரும் திரு. கனகரத்தினம் "உலகத் தமிழர் ஆவணக் காப்பகம்" என்ற அமைப்பையும் தோற்றுவித்தவராவார்.


**பிரத்தியேக வகுப்பு**

A/L விலங்கியல்
ஆண்டு 11, 10 விஞ்ஞானம்
தனித்த/ குழுமுறையில்
யாழ்பட்டதாரி, டிப்ளோமா
ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.
— — - தொடர்பு - — —
V.Vickneswaran
BSc., Dip. in Ed.
592246

**விளம்பரப் பகுதி**

**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும். திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில்
அமைந்த காண்டம் எனும்
நாடி ஜோதிடத்தில்
உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும்
தொலைபேசி மூலம் தொடர்பு
கொண்டு பார்க்கலாம்.
சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

**றெறாசோ ஷிப்ஸ்**
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments)
(Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

**COMPUTER வகுப்புக்கள்**
தனித்தனியாக கற்பிக்கப்படும். O/L,A/L மாணவ மாணவியர்களுக்கும், பட்டதாரி மாணவர்களுக்கும், சிறுவர்களுக்கும், ஏனையவர்களுக்கும் அவரவர்க்கு ஏற்றபடி கற்பிக்கப்படும்.
INDIVIDUAL CLASSES
CONTACT:
ICS COMPUTER CENTRE 32/1, GALLE ROAD, DEHIWALA.

**மனோதத்துவ வைத்தியம்**
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr. ஆறுமுகம் அவர்களை
கீழ்காணும் இடங்களில் சந்திக்கவும்.
ஓட்டமாவடியில் மாதாந்தம் 4,5 திகதிகளிலும்,
கல்முனையில் பெப்ரவரி 8,9,10 திகதிகளிலும்
கொழும்பு அகமட் டூரிஸ்ட் இன்னில்
பெப்ரவரி 16 முதல் 28 வரையும் சந்திக்கவும்.
கொழும்பு நாட்களில் மட்டும் 078/71101
போன் : 436383, 438390

**உடனடி வேலைவாய்ப்புக்கள்**
சவூதி அரேபியாவில்
ஜித்தா, மக்கா, மதீனா
நகரங்களில் பணிபுரிய
முஸ்லிம் பணிப்பெண்கள்
சம்பளம் ரூபா 7,000/- முதல்
முஸ்லிம் சாரதிகள்
சம்பளம் ரூபா 10,000/- முதல்
முஸ்லிம் சாரதி/பணிப்பெண் சோடி (Couples)
சம்பளம் ரூபா 16,000/- முதல்
கல்ஃப் லைசன்ஸ் உள்ள சாரதிகளுக்கும், ஆங்கிலம் பேசத் தெரிந்த பணிப்பெண்களுக்கும் கூடுதலான சம்பளத்தை பேசித்தீர்த்துக் கொள்ளலாம்.
உடன் தொடர்பு கொள்க
TGL
ட்ரான்ஸ் கல்ஃப் (பிறைவெட்) லிமிடட்
மொஹமட் ரிப்கி
இல. 65,
முதலாம் மாடி,
ஹொஸ்பிடல் வீதி,
கோட்டை, கொழும்பு 1.
தொலைபேசி: 329258
541076
அரசாங்க அனுமதி இல. AL/742/Advt/03/97

**மாணிக்கக் கற்கள்**
உங்களது அதிஷ்டம்! நீங்கள் அணியும் ராசிக் கற்களிலேயே அமைந்துள்ளது.
எங்களிடம் பரிசோதனை செய்த கற்களும், ராசிக் கற்களும் உள்ளன. மற்றும் கற்களைப் பரிசோதனை செய்து வடிவமைக்கக் கூடிய வசதியும் உண்டு.
நாணயம் மற்றும் நம்பிக்கை
உள்ள ஒரே ஸ்தாபனம்
கண்டி ஜெம்பியுரோ
115B, கொட்டுகொடேல வீதி,
கண்டி.
தொலைபேசி இல /பெக்ஸ்- 08-234415



33 வருடமாக
அனுபவத்தைத் தன்னகத்தே
கொண்டுள்ளது
எமது நிறுவனம்.
வாடிக்கையாளர்களிடம்
அவர்களது குறைகளைக்
கண்ட மாத்திரமே
எடுத்துக்கூறி
அவர்களின்
நம்பிக்கைக்குப்
பாத்திரமாகவே
செயல்படுகிறோம்.

**மலையாள மாந்திரீகம்**
எந்த மாதக் கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் பூஜையில் கலந்து நிவர்த்தி பெறலாம். காலை 09 மணி முதல் மாலை 6 மணி வரை.
தொடர்புகளுக்கு:-
P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு)
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
பி.கே. சாமி (J.D.G.A.N.)JP
NO.162, MAY FIELD ROAD
KOTAHENA, COLOMBO-13
தொலைபேசி வரிசைகள்:
342463-344831-344832-431137-07841571
பக்ஸ் இல-342464
பேஜர் சென்டர் இல- 588407
தொடர்பு கொண்டு இல- 972
இனைக் கேட்கவும்.
வெளிநாட்டில் உள்ளவர்கள்
COMPUTER INTERNET. NO....
E/MAIL/SAMY 1.2 @ SLT.LK,
WWW LGO SLT.LK.
நேரில் சந்திக்க-
காலை 9 முதல் 12 வரை
மாலை 3 முதல் 6.30 வரை
அப்பாயின்ட்மெண்ட் பெற்று வரவும்.
வெள்ளிக்கிழமை விடுமுறை.



**கலை அலங்கார வகுப்புக்கள்**
★ சிகை அலங்காரம்
★ அழகுக்கலை
★ மணப்பெண் அலங்காரம்
★ 4 மாத கற்கைநெறி
ஆரம்பம்:15-02-97
FASNAZ BEAUTY SALON
142, டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை,
கொழும்பு-06.
தொலைபேசி: 589457

**அக்குறணையில்**
NEW FAJRIYAS BOOK SHOP
உங்கள் இதயங்கவர்ந்த நண்பர்களை,
உறவினர்களை வாழ்த்தி மகிழ்ந்திட வெளிநாட்டு,
உள்நாட்டு Ramazan Festival Greeting Cards
பெருநாள் வாழ்த்து மடல்கள் தற்பொழுது
பரபரப்புடன் விற்பனையாகின்றது . உங்கள்
தேர்விற்கு முந்துங்கள். மேலும் பாடசாலை
புத்தகங்கள், பேக் வகைகள், குர்ஆன்,
அத்தர்வகைகள், வாகன ஸ்டிக்கர்கள், அழகு
சாதனப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள்
அனைத்தையும் விஷேட விலைக் குறைப்புடன்
பெற்றிட நாடுங்கள்.
நிவ் ஃபஜ்ரியாஸ்
அஸ்னா மார்க்கட்,
அக்குறணை-06.




படிப்பகம்

# இருமுனைத் தாக்குதல், புதிய உத்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாவடிவேம்பு இராணுவ முகாம்மீது 2.02.97 அதிகாலை புலிகளின் கெரில்லாக்கள் தாக்குதல் நடத்தினார்கள்.

அதே நேரம் வடக்கில் வெற்றிலைக்கேணி முகாம்மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

வெற்றிலைக்கேணி முகாம்மீது நடத்தப்பட்டது பாரிய தாக்குதல் அல்ல; அடையாளத் தாக்குதல் மட்டும்தான்.

வெற்றிலைக்கேணி முகாமின் முன்னரங்க காவல் அரண்கள் ஆறு ரொக்கட் லோஞ்சர்களால் தாக்கியழிக்கப்பட்டன. அங்கிருந்த ஆயுதங்களும் புலிகளின் கெரில்லாக்களால் எடுத்துச் செல்லப்பட்டன.

மட்டக்களப்பு மாவடிவேம்பில் நடைபெற்றதுதான் பாரிய தாக்குதல்.

அதிகாலை 12.10 மணியளவில் முகாம் புலிகளின் கெரில்லாக்களால் சுற்றி வளைக்கப்பட்டது.

இருநூருக்கு மேற்பட்ட புலிகள் களத்தில் இறக்கப்பட்டனர்.

கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் மோதல் நடைபெற்றுள்ளது. படையினரும் திருப்பித் தாக்கியுள்ளனர்.

மாவடிவேம்பு முகாமுக்கு அருகில் கொம்மாதுறை, மற்றும் சித்தாண்டி இராணுவ முகாம்கள் இருந்தமையால், அங்கிருந்து உதவிக்கு வரும் படையினரை எதிர்த்தும் புலிகள் போரிட வேண்டியிருந்தது.

உதவிக்கு விரைந்த படையினரின் கைகள் மேலோங்கும் கட்டத்தில் புலிகள் தாக்குதலை நிறுத்திவிட்டு திரும்பி விட்டனர்.

மாவடிவேம்பு முகாமின் முன்பக்க காவலரன் தீயிடப்பட்டுள்ளது. முகாமுக்குள் இருந்த ஆயுதங்களும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. எனினும் கனரக ஆயுதங்கள் எதுவும் முகாமில் இருக்க வில்லை.

அம்பாறை மாவட்டத்தில் புலுக்குணாவ முகாம் தாக்குதலுடன் ஒப்பிடும் போது மாவடிவேம்புமுகாம் தாக்குதல் சிறியதுதான். புலிகளுக்கு மாவடிவேம்பில் இழப்பும் அதிகம். 15 புலிகள் பலியாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட புலிகளின் விசேஷ தளபதி கருணா தலைமையில்தான் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

தாக்குதல் அணிகள் சமீபத்தில்தான் வன்னியில் இருந்து கடல்வழியாக மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்தன.

கடந்தவாரம் மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புதிய கெரில்லா அணிகளின் நடமாட்டம் அதிகமாக இருந்தது.

பரந்தன் தாக்குதலுக்காக மட்டக்களப்பில் இருந்து வன்னி சென்ற அணிகள் தான் மீண்டும் திரும்பிவந்திருக்கின்றன என்று புலிகளின் பிரமுகர்கள் சிலர் தமக்கு நெருக்கமானவர்களிடம் கூறியிருந்தனர்.

எனினும் புதிய அணிகள் சிலவும் மேலதிகமாக மட்டக்களப்பில் வந்து இறங்கியுள்ளதாக நம்பகமான தகவல்கள் கூறுகின்றன.

மாவடிவேம்பு முகாம் மீதான தாக்குதல் ஒரு பரீட்சார்த்த முயற்சிதான் என்று தெரிகிறது.

கிழக்கில் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு புலிகளின் அணிகள் குறிவைத்துள்ளன என்று நம்பலாம்.

உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துக்கொண்டிருக்கும்போது, புலிகளின் தாக்குதல்களும் வடக்கு-கிழக்கில் சூடுபிடிக்கத் தொடங்கும் என்பதற்கு மாவடிவேம்பு, வெற்றிலைக்கேணி தாக்குதல்கள் ஒரு முன்னோட்டம் மாதிரி நடந்துள்ளன.

மாவடிவேம்பு-வெற்றிக்கேணி தாக்குதல்கள் படைத்தரப்புக்கு புதிய அச்சுறுத்தல் ஒன்றையும் விடுத்துள்ளன.

வடக்கிலும்-கிழக்கிலும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தும் உத்தியை புலிகள் முதன் முதலில் பரீட்சித்துப் பார்த்துள்ளனர்.

இதற்கு முன்னர் வடக்கிலும் கிழக்கிலும் ஒரே நேரத்தில் இரண்டு முகாம்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டதில்லை.

வடக்கிலும்-கிழக்கிலும் ஒரே நேரத்தில் தாக்குதல் தொடுப்பது மூலம் தமது இராணுவ பலம் பரவலாக விரிந்துள்ளது என்று காட்டுவதுதான் பிபாகரனின் நோக்கம்.

ஒரே நேரத்தில் இரண்டு முகாம்கள் தாக்கப்பட்ட செய்தி தெற்கிலும் பரபரப்பாகப் பேசப்படும் என்பதும் பிரபாகரன் எதிர்பார்த்ததுதான்.

வழக்கம்போல ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்தான்.

தென்னிலங்கையில் அரசின் யுத்த வெற்றி முழக்கத்துக்கும் அடி. புலிகளின் பலம் வளர்ந்து வருவதை வெளியுலகம் முன்பாகவும் காட்டியாகிவிட்டது.

ஒரே நேரத்தில் வடக்கிலும் கிழக்கிலும் புலிகள் தாக்குதல் நடத்தியிருப்பதால், புலிகளின் அடுத்த குறி வடக்கிலா, கிழக்கிலா என்று தெரியாமல் படை வட்டாரங்கள் சற்றே குழம்பிப்போயுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான பிரசாரத் தந்திரமாக வன்னியில் படை நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படலாம் என்று புலிகளும் எதிர்பார்க்கிறார்கள்.

வன்னியில் பாரிய நடவடிக்கைக்கு படையினர் தயாராக வாய்ப்புக் கொடுக்காமல் அதிர்ச்சியூட்டும் தாக்குதல்களை நடத்துவதும் புலிகளின் தற்காப்புக்கு அவசியமாக இருக்கிறது.

கிளிநொச்சியில் இருந்து வவுனியா வரையான தரைப்பாதையை திறப்பதுமூலம் வடக்கில் பெற்றுள்ள மற்றொரு பெரும் வெற்றி என்று அரசாங்கம் தெற்கில் சொல்ல முடியும்.

ஆனால்-வன்னியில் தரைப் பாதைத் திறப்புக்கான படை நகர்வை ஆரம்பிக்க வேண்டுமானால் கிழக்கில் இருந்தும் படைகளைக் கொண்டு செல்ல வேண்டும்.

யாழ் குடாநாட்டில் இருந்தும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான படையணிகளை வன்னிப் படையெடுப்புக்குப் பயன்படுத்த வேண்டி இருக்கும்.

அவ்வாறான நேரத்தில் கிழக்கிலும், யாழ் குடாநாட்டிலும் புலிகளின் அணிகள் பாரிய தாக்குதல்களில் ஈடுபட்டால் என்ன செய்வது? என்று படையினரை யோசிக்க வைப்பதுதான் பிரபாகரனின் மற்றொரு தந்திரம்.

வடக்கு-கிழக்கு போர்க்களத்தின் தற்போதைய நிலவரப்படி பிரதான தளமான வன்னியை பாதுகாப்பதுதான் புலிகளின் பிரதான நோக்கமாக இருக்கிறது.

தமது பிரதான தளப்பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த புலிகள் மேற்கொள்ளும் உத்திகள் வடக்கு-கிழக்கு போர்முனையெங்கும் பரவலாக நீளும்.

வன்னியில் படை நகர்வை மேற்கொள்ளக்கூடிய முகாம்களின் பாதுகாப்பை அச்சுறுத்தும் தாக்குதல்கள் வன்னியில் தொடரும்.

குறிப்பாக பரந்தனில் இருந்து கிளிநொச்சிவரை நிலைகொண்டுள்ள படையினர் மீது அடிக்கடி தாக்குதல்களை புலிகள் நடத்திக் கொண்டிருப்பர்.

வெலிஓயா மற்றும் வன்னியில் உள்ள படைநிலைகள்மீது புலிகளின் தாக்குதல்கள் மேலும் அதிகமாக்கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன.

வன்னியில் புலிகள் நடத்தும் தாக்குதல்கள் தற்காப்புக்கான தாக்குதல் யுத்த வகையானவை.

தற்காப்பு உத்திகள் இரண்டு வகைப்படும். ஒன்று: படைகள் முன்னேறும் போது தடுத்து நிறுத்தித் தாக்குவது: அது தற்காப்பு யுத்தம் என்று அழைக்கப்படும்.

இரண்டு: படைகள் தயாராக முன்னர் படைகளைத் தேடிச் சென்று தாக்குவது: அது தற்காப்புக்கான தாக்குதல் யுத்தம் என்றழைக்கப்படும்.

தற்காப்புக்கான தாக்குதல் யுத்தம் அழித்தொழிப்பு யுத்தமாகவும் வளர்ச்சி பெறும். பரந்தனில் புலிகள் நடத்தியது அழித்தொழிப்பு யுத்தம்.

வன்னியைப் பொறுத்தவரை, தற்காப்புக்கான தாக்குதல் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டு, ஏனைய போர்க்களங்களில் தாக்குதல்களில் ஈடுபடுவதுதான் புலிகளின் திட்டமாக இருக்கிறது.

யாழ் குடாநாட்டில் புலிகள் நடத்தும் தாக்குதல்கள் தற்காப்புக்கான தாக்குதல்கள் அல்ல; படையினரின் மன உறுதியைப் படிப்படியாகக் குலைத்து பாரிய ஒரு தாக்குதலுக்கு தயாராவதுதான் யாழ் குடாநாட்டுப் போர் முனையில் புலிகளின் உத்தியாக இருக்கிறது.

உளவியல் ரீதியாக படையினர் தளர்ந்து போகும் கட்டத்தில் பாரிய தாக்குதல்களில் ஈடுபடுவது சுலபமாக இருக்கும் என்று புலிகள் நினைக்கிறார்கள்.

படையினரின் நடமாட்டத்துக்கு அச்சுறுத்தல், பலவீனமான நிலைகளை இனம்கண்டு தாக்குதல், யாழ் குடாநாட்டை சகஜ நிலை நிலவும் பகுதியாக சித்தரிக்க முடியாமல் செய்தல் போன்ற நோக்கங்கள் குடாநாட்டில் புலிகளின் உடனடித் திட்டங்களாக உள்ளன.

படையினரை முகாம்களுக்குள் முடக்கி வைத்திருப்பது, பலவீனமான முகாம்கள் மீது தாக்குவது, தற்காலிக தளப்பிரதேசங்களை நிறுவி நிலைகொள்வது, படிப்படியாக அவற்றை விரிவுபடுத்துவது என்பவை



கிழக்கில் புலிகளின் தந்திரோபாயங்களாக இருக்கும்.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, வடக்கு-கிழக்கில் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் படைக்குவிப்பைத் தடுக்கும் வகையில் படையினரை பல்வேறு திசைகளுக்கு இழுப்பதாக புலிகளின் பிரதான உத்தி அமைந்துள்ளது.

இந்தப் பிரதான உத்தி மூலமாக இராணுவரீதியில் தமது பலத்தை மேலோங்கச் செய்யும் அதே நேரத்தில், தமது பிரதான தளமான வன்னியையும் புலிகள் பாதுகாத்துக் கொள்கிறார்கள்.

எனவே-வன்னிப்பகுதியிலும், கிழக்கிலும் புலிகளின் தாக்குதல்கள் மேலும் தீவிரமாகப் போகின்றன.

ஒரே நேரத்தில் வடக்கிலும் கிழக்கிலும் புலிகள் தாக்கும்போது படையினருக்கு மற்றொரு பிரச்சனையும் ஏற்படும்.

புலிகள் முகாம்களைத் தாக்கும்போது, விமானப்படை உதவியைத்தான் படையினர் பிரதானமாக நம்பியிருக்கின்றனர்.

ஒரே நேரத்தில் வடக்கிலும், கிழக்கிலும் புலிகள் தாக்கும்போது விமானப் படை உதவியை ஒன்று குவிந்த நிலையில் வழங்க முடியாமல் போகும்.

புலிகளின் இருமுனைத் தாக்குதல் உத்தியானது படையினருக்கு புதிய தலைவலிதான்!

●●●




**நாரதர்**

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

மனித உரிமைகள் பற்றியும், யுத்தங்கள் நிறுத்தப்படுவது பற்றியும் அமெரிக்கா வாய்கிழியப் பேசுவதெல்லாம் வெளிப் பூச்சுக்குத்தான்.

உலகில் தனது பிடியை இறுக்கிக் கொள்வதுதான் அமெரிக்காவின் அகண்ட கனவு.

இரண்டாயிரம் ஆண்டில் அமெரிக்கா உலகுக்கு வழங்கப்போகும் 'கொடைகளில்' ஒன்று 'சூப்பர் மிசைல்'- தன்னியக்க ஏவுகணை.

எதிரியின் பிரதேசத்துக்குள் விமானம் சென்றால் ராடர்களில் தெரிந்துவிடும். ராடர்களின் கண்களுக்குத் தெரியாத விமானங்களும் இருக்கின்றன.

1991 வளைகுடா யுத்தத்தில் ராடர்களின் கண்களுக்குத் தெரியாத 'ஸ்ரீல்த்' என்னும் விமானங்கள் ஈராக்குக்குள் ஊடுருவின. அந்த விமானங்களில் இருந்து லேசர் கதிர்கள் மூலம் வழி நடத்தப்படும் ஏவுகணைகள் இலக்குகள் நோக்கி அனுப்பப்பட்டன.

நிலத்துக்குக் கீழ் இருந்த இலக்குகள் கூட அந்த ஏவுகணைகளால் அழிக்கப்பட்டன.

எனினும் லேசர் மூலம் வழி நடத்தப்படும் ஏவுகணையைச் செலுத்த வேண்டுமானால் குறிப்பிட்ட இலக்கு இருக்கும் பகுதிக்குள் விமானமும், விமானியும் சென்றாக வேண்டும்.

ஆனால் அமெரிக்கா தற்போது கண்டுபிடித்துள்ள 'சூப்பர் மிசைல்' எனப்படும் ஏவுகணை மிக முன்னேற்றமானது.

ஏவுகணையைச் செலுத்தும் விமானம் குறிப்பிட்ட இலக்கு அமைந்துள்ள பகுதிக்குச் செல்லவே தேவையில்லை.

எதிரியின் பிரதேசத்துக்குள் நுழையாமல் எட்டநின்றே விமானத்தில் இருந்தோ, கப்பலில் இருந்தோ ஏவிவிடலாம்.

பார்வைக்கு குட்டி விமானம்போல தெரியும். இறக்கைகளும் இருக்கும். இதன் நீளம் 14 அடி; அகலம் 8 அடி. இதன் உண்மையான பெயர்: 'ஸ்ரான்ட்ஒஃப் லான்ட் அற்றாக் மிசைல்-எக்ஸ்பாண்டெட் றெஸ்போன்ஸ்.' (விரிவாக்கப்பட்ட பணிக்குரிய தனித்தியங்கும் தரைத்தாக்கு ஏவுகணை) சுருக்கமாக 'ஸ்லாமெர்' என்று பெயர். நூறு மைல்கள் தூரம்வரை தானாகச் சென்று தாக்கும்.

இந்த ஏவுகணையின் முகப்பில் புற ஊதாக்கதிர்வீச்சுக் கமரா பொருத்தப்பட்டிருக்கும். தான் செல்லும் பாதையில் உள்ள கட்டடங்கள், தரையமைப்பு போன்றவற்றை கமரா படம்பிடித்துக் கொண்டிருக்கும். அக்காட்சிகள் ஏவுகணையை ஏவிய விமானத்தில், அல்லது கப்பலில் உள்ள கம்பியூட்டர் திரையில் தெரிந்து கொண்டிருக்கும். சரியான இலக்கு வந்ததும் கம்பியூட்டர் திரைக்கு முன் உள்ள விமானி கம்பியூட்டர் மூலமாக உத்தரவு பிறப்பிப்பார். உடனடியாக ஏவுகணை இலக்கில் மோதும்.

ஏவுகணைக்கு பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் 'சற்றலைற் நெற்வேர்க்' தொழில் நுட்பம் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன்.

'ஸ்லாமெர்' ஏவுகணைகளை அமெரிக்காவில் உள்ள மக்டொனெல் கம்பனி தயாரிக்கிறது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 'ஸ்லாமெர்' ஏவுகணைகள் சிலவற்றை அமெரிக்கக் கடற்படை பரிசீலிதுப் பார்த்துள்ளது.

இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் மேலும் புதிய 'ஸ்லாமெர்' ஏவுகணைகள் தயாரிக்கப்பட உள்ளன.

"பல போர் விமானங்களைக் கொண்டு ஒரு இலக்கைத் தாக்குவது பழைய முறை. ஒரு போர் விமானத்தைக் கொண்டு பல இலக்குகளைத் தாக்குவது புதியமுறை. அதுதான் இப்போது எங்கள் சிந்தனை!"- அமெரிக்க இராணுவ ஜெனரல் றொனால்ட்.

ஆனாலும் என்னதான் கில்லாடித்தனமான தயாரிப்பு என்றாலும் ஒரு பலவீனமும் இதில் இருக்கிறது.

எந்த இலக்கைத் தாக்க வேண்டுமோ அந்த இலக்கின் புகைப்படம் முன்கூட்டியே எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தப் புகைப்படத்தை வைத்துத்தான் ஏவுகணை செல்லும் பாதையை 'புரோக்கிராம்' பண்ணி அனுப்ப முடியும்.

உதாரணமாக காட்டுக்குள் உள்ள ஒரு இலக்கைத் தாக்கவேண்டுமானால் அந்த இலக்கின் புகைப்படம் தேவை. காட்டுக்குள் உளவு விமானத்தை அனுப்பி புகைப்படம் எடுப்பதுகூட சாத்தியம் இல்லை.

எனவே நகர்ப்புற யுத்தத்தில்தான் 'ஸ்லாமெர்' ஏவுகணைகள் பயன்படும்.

சர்வதேச ரீதியில் யுத்த அரங்கில் பாவிப்பதற்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய ஆயுதங்கள். மற்றும் விமானங்கள் நாடுகளுக்கிடையிலான போர்களுக்குத்தான் உபயோகமானவை. அதாவது பெரும் படையையும், பகிரங்கமான இலக்குகளையும், கேந்திர நிலைகளையும் கொண்டுள்ள நாடுகளைத் தாக்குவது சுலபம்.

உள்நாட்டு யுத்தத்தில் கெரில்லா முறையில் இரகசியமான மறைவிடங்களை கொண்டுள்ள இயக்கங்களை வெற்றி கொள்ள நவீன தொழில் நுட்பம் பெரியளவில் கைகொடுக்காது.

இராணுவத் தொழில் நுட்பத்தில் முன்னேறிய பிரிட்டன், ஐரிஸ் கெரில்லாக்களைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறுவது சரியான உதாரணம். அதே பிரிட்டன் பிறிதொரு நாட்டுடன் போரிட்டால் வெற்றி பெற்றுவிடும்.

எனினும்-அமெரிக்கா போன்ற வல்லரசுகள் தமது புதிய கண்டுபிடிப்புக்களை வளர்ந்துவரும் நாடுகளிடம் கொடுத்து அந்த நாடுகளைத் தமது பரிசோதனைக் களமாக்கும். எனவே உள்நாட்டு யுத்தங்கள் வல்லரசுகளுக்கு வேடிக்கைதான். பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுவிப்பதும் அதனால்தான்!

■

## அதிரடி அப்பாத்துரை



தலைநகரப் பாடசாலைகளில் ஒழுக்கம், கட்டுப்பாடு எல்லாம் காற்றில் பறக்கத் தொடங்குவதாக பெற்றோர்கள் கவலைப்படத் தொடங்கியிருக்கினம். தமிழ்ப் பாடசாலைகள் சிலவும் அதில் அடக்கம். பாடசாலை நேரத்திலேயே 'தம்' அடிக்கிறது, உற்சாக பானம் அருந்துவது எண்டு மாணவர்கள் சிலர் தறிகெட்டுப் போகினமாம். மாணவிகள் சிலரும் போதை மருந்து பாவிப்பதுதான் அதிர்ச்சியான விஷயமுங்கோ! ஆசிரிய சமூகத்தின் ஏனோ தானோ போக்காலும் மாணவர்கள் பிழையான ரூட்டில் போய்க்கொண்டிருக்கினம். வழிகாட்ட வேண்டியவை தூங்கிப் போனால் வழிநடப்பவை வழுக்கி விழத்தானே செய்வினம்?

யாழ் குடாநாட்டில் போலி மருத்துவர்கள் பலர் தோன்றியிருக்கினமாம். மருத்துவர்கள் தட்டுப்பாடு காரணமாக, 'ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சக்கரை' எண்ட கதைதான். போலி மருத்துவர்களின் சொற்படி கேட்டு மருந்து பாவித்த பலர் தலை வலிபோய் திருகுவலி வந்த நிலையில் இருக்கினமாம். 'ஆயிரம் பேரைக் கொன்றால்தான் அரை வைத்திய'ராகலாம் எண்டு சொல்வது வழக்கம். போலி வைத்தியர்கள் அனுபவம் பெறுவதற்கிடையில் எத்தனை பேர் சாகவேணுமோ?

திருடர்கள் பாடு ஒரே வேட்டையாம். சைக்கிளை விட்டுப்போட்டு கண்ணை மூடி கண்ணைத் திறப்பதற்கு இடையில் மாயமாய் மறைஞ்சு போகுதாம். எங்கே தெரியுமோ? எல்லாம் கட்டுப்பாட்டில் உள்ள குடாநாட்டில்தான்! பொலிஸ் நிலையங்கள் பேருக்குத்தான் இருக்குது. முறைப்பாடு செய்தாலும் முறையான நடவடிக்கை எடுக்க முடியேல்லையாம். திட்டம் போட்டு திருடுற கூட்டம் கொட்டம் போட்டுத் துள்ளுது!

யாழ்ப்பாணம் பொன்னாலையில் சனம் பலியான விஷயத்தைக் கண்டித்து யாழில் உள்ள மூன்று கட்சிகளும் அறிக்கை விட்டவையாம். பச்சை உடைத் தரப்பாருக்கு அதனால் மனத் தாங்கலாம். பொன்னாலைச் செய்தியை வெளியிட்ட யாழ்ப்பாணப் பத்திரிகை ஆசிரியருக்கும் 'அன்பான' அறிவுறுத்தல் விடப்பட்டிருக்கிறதாம். "இப்படியான செய்திகளை வெளியிடும்போது எங்களிடம் காட்டிப்போட்டு வெளியிடுங்கோ!" எண்டு அன்பான உத்தரவாம். வாழ்க; பத்திரிகைச் சுதந்திரம்! இதே உத்தரவு கொழும்பில் பெரும்பான்மை இனப் பத்திரிகைகளுக்கு போடப்பட்டிருந்தால் எத்தனைபேர் துள்ளியிருப்பினம்?

பாடசாலைகளுக்கு அனுப்பும் உபகரணங்கள் சிலவற்றுக்கும் பாதுகாப்புத் தரப்பு அனுமதி மறுத்திருந்தது. அந்த உபகரணங்கள் யாழ் சென்றால் ரெண்டு எழுத்தார் விறுவிறுவென்று வளர்ந்திடுவினமாம். அப்படித் தடுக்கப்பட்ட உபகரணங்களுள் ஒன்று பூதக் கண்ணாடி. அதுக்கும் பாதுகாப்பு பிரச்சனைக்கும் என்ன சம்பந்தம்?

ஜனநாயகக் கட்சித் தலைவர் பூரித்துப்போனார். தமிழ்ச் சேவை வர்த்தக சேவை நேரக் குறைப்பை அதிகாரமுள்ள சக்தியானவர் இரத்துச் செய்து போட்டார். இரத்துச் செய்த உத்தரவும் ஜனநாயக கட்சித் தலைவரின் கையில்தான் கொடுக்கப்பட்டதாம். தனக்குத் தெரியாமல் இப்படிச் சில வம்பான காரியங்கள் நடக்கின்றன எண்டு கோபமாகச் சொன்னாராம் சக்தியானவர். உடனடியாக சக்தியானவர் உத்தரவு போட்டதுதான் ஜனநாயகக் கட்சித் தலைவரின் பூரிப்புக்குக் காரணம்.

கூட்டான கட்சியினர் காணாமல் போனோர் பற்றி பேசுகிறார்கள்; அறிக்கை விடுகிறார்கள். சமீபத்தில் கிழக்கின் சிங்கத்தாரை சந்தித்த ஒருவர், காணாமல் போன தனது உறவினர் பற்றிய முடிவு என்னவென்று கேட்டாராம். சிங்கத்தார் அதுக்குச் சொன்ன பதில்தான் நெத்தியடி. "நான்தான் சபையில் அதுபற்றிப் பேசிவிட்டேனே! என் 'றோல்' அவ்வளவுதான்!" எண்டாராம் சிங்கத்தார். விசாரிக்கப்போனவர் வாழ்க்கை வெறுத்துபோய் திரும்பினாராம்.

வவுனியா பாஸ் 'ஃபிக்சட் ரேட்' லேட்டஸ்ட் நிலவரம் என்ன தெரியுமோ? 30 ஆயிரம் ரூபாய்! ரெண்டு எழுத்தாராக இருந்தால் என்ன, நாலு எழுத்தாராக இருந்தால் என்ன (மக்கள்) விலை படிஞ்சால் விடுதலை, விடுதலை, விடுதலை.

பெண் குழந்தை என்றதும் முகம் சுளிப்பவர்களுக்கு இந்தக் குட்டிக் கவிதை.

**முரண்**

"வீட்டின் ஆடு மாடு கோழி
எல்லாம்
பெட்டையாய் பெற ஆசை!
மனைவி மட்டும்
பெறவேண்டும் ஆண்!"



படிப்பகம்

www.padippakam.com

115

# அகதிமுகாமுக்குள் ஷெல் வீச்சு!
# மருத்துவமனைக்குள் பாய்ந்த படைகள்!

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது

### கோவிலுக்குள் அகதிகள்

யாழ் குடாநாடெங்கும் விமானக் குண்டு வீச்சுக்களும், ஷெல் தாக்குதல்களும் உக்கிரமடைந்தன.

இந்தியப் படை, யாழ் நகரை நோக்கிப் பல முனைகளில் முன்னேறத் தொடங்கி விட்டது என்ற செய்தியை குடாநாடெங்கும் உள்ள மக்கள் அறிந்து கொண்டனர்.

எனினும் ஒன்றுக்குப்பின் ஒன்று முரண்பாடான தகவல்கள் பரவ ஆரம்பித்தன.

வீடுகளில் இருப்பது பாதுகாப்பில்லை என்பது மக்களுக்குத் தெரிந்தவுடன், அவர்கள் கோவில்களையும், பாடசாலைகளையும் நோக்கி ஓடினார்கள்.

எங்கும் பீதி நிலவியது. துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்கும் பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறி தலைதெறிக்க ஓடினார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கோவில்களில் அழகானதும், தூய்மையாகப் பராமரிக்கப்பட்டதுமான கோவில்களில் ஒன்று நல்லூர் கந்தசாமி கோயில்.

வருடாவருடம் திருவிழா நடைபெறுவதற்கு முன்னர் புதிய கட்டிட வேலைகள் நடைபெறும். அதற்கேற்ப வருமானமும் உள்ள கோயில் அது. நல்லூர் கந்தனைப் பணக்காரக் கந்தன் என்றும் கூறுவார்கள்.

நல்லூர் கந்தசாமி கோவிலுக்குள் அகதிகள் புகுந்தனர். ஆயிரமாயிரமாக அகதிகள் அங்கு தஞ்சமடைய ஆரம்பித்தனர்.

கிடத்தட்ட 25 ஆயிரம் அகதிகள் நல்லூர்க் கந்தசாமி கோவிலுக்குள் அடைக்கலமாகினர்.

கோயிலுக்குள் தான் சமையல் எல்லாம். சிலர் மாமிசம் சமைத்தபோது பிரச்சனைகள் ஏற்பட்டன. நல்லூர் கோவில் நிர்வாகத்தினர் மாமிசம் சமைக்க வேண்டாம் என்று கூறினார்கள்.

அவ்வாறு கூறியபோது அகதிகள் சிலர் நிர்வாகத்தினரைக் கெட்டவார்த்தைகளால் திட்டித்தீர்த்துவிட்டனர். விட்டால் போதும் என்று நிர்வாகத்தினர் ஓட்டம் பிடித்தனர்.

அதுபோதாது என்று, அகதிகளுக்குள் சிலர், தாம் உயர்ந்த சாதியினர் என்பதால் தமக்கு தனியான இடம் தரவேண்டும் என்று கேட்டதுதான் பெரிய வேடிக்கை.

கோவிலின் சுற்றுப்புறங்களில்தான் மலசலம் கழிக்கப்பட்டது. மழைவேறு கொட்டிக் -கொண்டிருந்தது. அதனால் சுற்றுப் புறமெங்கும் நரகலாகி நாற்றம் அடிக்கத் தொடங்கியது.

யாழ்ப்பாணத்தில் இந்தியப் படை காலத்தில் உருவான அகதி முகாம்களில் மிகவும் பெரியது நல்லூர் கந்தசாமி கோயில் அகதி முகாம்தான்.

### படை முன்னேற்றம்

அக்டோபர் 17ம் 18ம் திகதிகளில் இந்தியாவிலிருந்து மேலும் படைப் பிரிவுகள் வந்து சேர்ந்தன.

கோப்பாயில் புலிகளின் கடும் பதிலடியால் இந்தியத் துருப்புக்கள் முன்னேற முடியாமல் நின்றன.

இந்தியாவில் இருந்து வந்திறங்கிய சூட்டோடு சூடாக புதிய படைப்பிரிவுகள் களத்துக்கு அனுப்பப்பட்டன.

எங்கெல்லாம் புலிகளின் எதிர்ப்பால் இந்தியத் துருப்புகள் முன்னேற முடியாமல் தடைப்பட்டு நின்றனவோ, அங்கெல்லாம் உதவிக்காக மேலதிகப் படைகள் அனுப்பப்பட்டன.

யாழ் குடநாட்டில் உள்ள புலிகளின் எண்ணிக்கை மூவாயிரம் பேர் என்றுதான் இந்தியப் படை அதிகாரிகள் கணிப்பிட்டிருந்தனர்.

அக்டோபர் பத்தாம் திகதி சண்டை தொடங்கும்போது யாழ் குடாநாட்டில் கிட்டத்தட்ட 20 ஆயிரம் இந்தியப் படையினர் இருந்தனர்.

மூவாயிரம்பேர் என்று தாம் மதிப்பிட்டிருந்த புலிகளை எதிர்த்து சண்டையிட 20 ஆயிரம் படையினர் போதாது என்று மேலும் புதிய படைப்பிரிவுகளைத் தருவித்தனர்.

புதிதாக வந்திறங்கிய படைகளுக்கு எவ்வித விளக்கமும் கொடுக்கப்படவில்லை. பொதுமக்களின் இழப்புக்களைத் தவிர்க்குமாறு சொல்லியனுப்பக்கூட இந்தியப் படைத் தளபதிகளுக்கு நேரம் இருக்கவில்லை.

மக்களைப் பற்றி அக்கறைப் படுவதைவிட யாழ் நகரை விரைவாகக் கைப்பற்றுவதுதான் இந்தியப் படை அதிகாரிகளின் ஒரே நோக்கம்.

ஒரு சிறு கெரில்லாக் குழுவை எதிர்த்து நீண்டநாள் சண்டையிடவேண்டியிருந்தால் இந்திய இராணுவத்தின் கௌரவம் என்னாவது?

நாலு நாட்களில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிடலாம் என்று நினைத்தது நிறைவேறவில்லை என்பதும் இந்தியப் படை அதிகாரிகளுக்கு பெரும் கௌரவப் பிரச்சனையாக மாறியிருந்தது.

புதுடில்லியில் இருந்து கேட்கும் கேள்விகளுக்கும் பலாலியில் உள்ள இந்தியப் படை அதிகாரிகள் பதில் சொல்லியாக வேண்டும்.

இந்தியாவின் கௌரவம், இந்தியப் படை அதிகாரிகளின் கௌரவம், இந்தியப் படையின் கௌரவம் என்று பல்வேறு கௌரவப் பிரச்சனைகளும் மூர்க்கமான ஒரு தாக்குதலுக்குத் தூண்டுகோலாக அமைந்தன.

### புலிகள் தாக்குதல்

மக்கள் வெளியேறியதால் காலியான வீடுகள் பலவற்றைப் புலிகள் தமது பாதுகாப்பு அரண்களாகவும், பதுங்குமிடங்களாகவும் மாற்றிக்கொண்டனர்.

மக்கள் நடமாட்டமே இருக்காது; வீடுகள் அமைதியாக இருக்கும்; குறிப்பிட்ட வீடுகளைப் படைகள் தாண்டிச் செல்லும்போது பின்புறமிருந்து புலிகள் திடீரென்று தாக்குவர்.

அமைதியாக இருந்த வீடுகளுக்குள் இருந்து புலிகளின் துப்பாக்கிகள் சீறிக் கொண்டிருக்கும்.

ஆரம்ப கட்டத்தில் இவ்வாறான தாக்குதல்களால் இந்தியப் படைகள் நிலை குலைந்து போயின. சுடப்பட்டு வீழ்ந்தன.

சில வீடுகளுக்குள் பெண்கள் மட்டுமே தனியே இருந்தனர். வீட்டுக்குள் பிரவேசித்த படையினருக்கு பெண்களைக் கண்டதும் சபலம் தட்டிவிடும்.

வீட்டுக்கதவை மூடிவிட்டு பெண்களை நெருங்குவர் படையினர்.

திடீரென்று அப் பெண்கள் மத்தியில் இருந்து துப்பாக்கிகள் சீறும். உள்ளே புகுந்த அத்தனை படையினரும் கொல்லப் படுவர்.

இவ்வாறான தாக்குதல் உத்திகளையும் புலிகளின் பெண்கள் படைப்பிரிவு சில பகுதிகளில் மேற்கொண்டது.

வீடுகளுக்குள் இருந்தும், பாதுகாப்பான கட்டிடங்களுக்குள் இருந்தும் புலிகள் தாக்குவார்கள் என்பது இந்தியப்படையினருக்குத் தெரிந்துவிட்டது.

அதனை எப்படிச் சமாளிப்பது என்பது இந்தியப் படையினருக்குத் தெரியவில்லை. வீடுகளையும் கட்டிடங்களையும் நோக்கி பீரங்கித் தாக்குதல் தொடுப்பதுதான் சரி என்று தீர்மானித்தனர்.

புதிதாக வந்து சேர்ந்த படைப்பிரிவினருக்கு புலிகளும் ஒன்றுதான்; மக்களும் ஒன்றுதான். யாழ் குடாநாடு என்பது எதிரிகளின் பிரதேசம். கண்ணில் பட்டவர்களையெல்லாம் சுட்டுத் தள்ளத் தொடங்கினார்கள்.

யாழ் குடாநாட்டில் மோதல்கள் உக்கிரமானபோது புலிகளின் முக்கியமான தலைவர்கள் அங்கிருந்து வெளியேறி வன்னி நோக்கிச் சென்றனர்.

யாழ் குடாநாட்டில் இருந்து புலிகள் வெளியேறாமல் தடுப்பதற்காக கடலோரப் பகுதிகளில் விமானக் குண்டுவீச்சுக்கள் நடத்தப்பட்டன.

கடற்கரையோரமாகக் காணப்பட்ட படகுகள் குண்டுவீச்சுக்களால் அழிக்கப்பட்டன. அழிக்கப்பட்ட படகுகள் பல மீனவர்களுக்குச் சொந்தமானவை. புலிகளின் படகுகள்தான் அழிக்கப்பட்டன என்று இந்தியப்படை சொல்லிக் கொண்டிருந்தது.

### நல்லூரில் படைகள்

கோப்பாயிலிருந்து இருபாலை நோக்கி முன்னேறிய இந்தியப்படையினர் அங்கிருந்து நல்லூரை நோக்கி நகரத் தொடங்கினார்கள்.

பிரதான வீதிகளில் புலிகள் கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்திருந்தனர்.

அதனால் குறுக்குப் பாதைகள் வழியாக நல்லூரை சென்றடைய இந்தியத் துருப்புக்கள் திட்டமிட்டனர்.

உரும்பிராய் ஊடாக கோப்பாய் வடக்கு, கோப்பாய் தெற்கு வழியாக யாழ்ப்பாணம் நோக்கி முன்னேறிய படைப்பிரிவுக்கு பிரிகேடியர்கள் ஜே.எஸ்.டிலானும், சாமேராமும் தலைமை தாங்கினார்கள்.

அக்டோபர் 19ம் திகதி மேலும் ஒரு படைப்பிரிவு உதவிக்கு வந்தபின்னரே நல்லூரை நோக்கி அவர்கள் முன்னேற ஆரம்பித்தனர்.

இருபாலையில் சில பொதுமக்களை பணயக் கைதிகளாகப் பிடித்தனர் இந்தியப் படையினர். நல்லூருக்குச் செல்லும் குறுக்குப் பாதைகள் பற்றிய தகவல்கள் அந்தப் பொதுமக்களிடம் இருந்தே பெறப்பட்டன.

இருபாலையில் இருந்து பருத்தித்துறை வீதிவழியாகச் செல்லாமல், புதிய செம்மணிப் பாதை வழியாக இறங்கி, ஒழுங்கைகள் மூலமாக நல்லூரை நோக்கி முன்னேறினார்கள்.

நல்லூரை நோக்கி முன்னேறும் படைப் பிரிவைத் தடுத்து நிறுத்த புலிகள் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தனர்.

அதேவேளை மற்றொரு படைப்பிரிவு நாவற்குழியில் இருந்து ரயில் பாதையோரமாக முன்னேறி அரியாலைக்குள் புகுந்தது.

நாவற்குழியில் இருந்து அரியாலைக்கு வந்து சேர அப் படைப்பிரிவுக்கு நான்கு நாட்கள் தேவைப்பட்டன.

புலிகளின் கடும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருந்தமையால் மிக மெதுவாகவே முன்னேறினார்கள்.

### சுற்றிவளைப்பு

அரியாலைச் சந்தியில் புலிகள் பதுங்கு குழிகளை அமைத்து இந்தியப்படையின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்திச் சண்டையிட்டனர்.

அரியாலை சந்தி வழியாக முன்னேறும்போது ஒரு படைப்பிரிவு போக்குக்காட்டிக் கொண்டிருந்தது.

அதேநேரம் இன்னொரு படைப்பிரிவு பிரதான பாதைக்கு இருபுறமும் காணப்பட்ட தென்னந்தோப்பு வழியாக இரவோடு இரவாக மெதுவாக நகர்ந்து புலிகளின் அரியாலைக் காவலரணைச்சுற்றி வளைத்தது.

முன்புறமிருந்து தாக்குதலை எதிர்பார்த்திருந்த புலிகள் பின்புறமிருந்து தாக்கப்பட்டனர். எப்பக்கம் இருந்து படைகள் வருகின்றன என்பதை உடனடியாக ஊகிக்க முடியவில்லை.

அதனால் அரியாலை காவலரணைக் கைவிட்டுப் புலிகள் பின்வாங்கினார்கள்.

அக்டோபர் 18ம்திகதி இரவு அரியாலை இந்தியப்படையினரின் கட்டுப்பாட்டில் வந்தது.

அரியாலையிலிருந்து துரிதகதியில் முன்னேறத்தொடங்கிய இந்தியப் படைகள் மீது புலிகள் ரொக்கட் லோஞ்சர்களால் தாக்கினார்கள்.



இந்தியப் படை முன்னேறிச் சென்றுகொண்டிருந்தபோது புலிகள் திடீரென்று தமது உத்தியை மாற்றிக் கொண்டனர்.

முன்னேறும் படையினரை நோக்கி எதிர்த்தாக்குதல் தொடுக்காமல் முன்னேற அனுமதித்தனர். படையினர் முன்னேறும்போது பின்புறமிருந்து புலிகள் தாக்கத் தொடங்கினார்கள்.

வீடுகள் ஊடாக பதுங்கி வந்து இரவோடு இரவாக புலிகள் தாக்குதல் நடத்தியதில் இந்தியப் படையின் பின்வரிசை பலத்த இழப்புக்களைச் சந்தித்தது.

எங்கிருந்து புலிகள் தாக்கிவிட்டு மறைகிறார்களோ அப்பகுதியில் உள்ள வீடுகள் இந்தியப் படையினரால் தகர்க்கப்பட்டன.

சில வீடுகளுக்குள் புகுந்த இந்தியப் படையினர் அங்குள்ள பொருட்களையெல்லாம் ஒரே இடத்தில் குவித்துவைத்து தீயிட்டுவிட்டுச் சென்றனர். வீடுகளுக்குள் இருந்த சைக்கிள்கள், மோட்டர் சைக்கிள்கள், கார்கள் போன்றவையும் அடித்து நொறுக்கப்பட்டன. தீயிட்டும் எரிக்கப்பட்டன.

### அகதி முகாம் மீது தாக்குதல்

அக்டோபர் இருபதாம் திகதி யாழ் கச்சேரியில் இருந்து முன்னேறிய இந்தியப் படையினர் சரமாரியான ஷெல்தாக்குதலில் ஈடுபட்டனர்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் அகதிகள் நிரம்பிவழிந்தனர். இந்தியப்படையினர் ஏவிய ஷெல் ஒன்று அந்த அகதி முகாமுக்குள் வந்து விழுந்தது.

ஆறுபேர் பலியானார்கள். 20 பேர் படுகாயமடைந்தனர்.

70 வயதான சமாதான நீதவான் எஸ்.என்.கந்தையா உட்பட ஒரு பாடசாலை அதிபர், மற்றும் அவரது மகனான ஒரு



ஆசிரியர் ஆகியோரும் பலியானவர்களில் அடங்குவர்.

அது தவிர வீடுகளில் இருந்த பலரும் ஷெல் தாக்குதல்களால் பலியாகினர்.

சென் ஜோன்ஸ் கல்லூரிமீதும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. அங்கும் அகதிகள் இருந்தனர். ஷெல்லடியால் அதிஷ்டவசமாக அங்கு யாரும் பாதிப்படையவில்லை.

அக்டோபர் 21ம் திகதி யாழ்நகரை எப்படியாவது கைப்பற்றிவிடுவது என்று இந்தியப் படையினர் முடிவு செய்தனர்.

ஷெல் அடியால் யாழ் நகரம் அதிர்ந்து கொண்டிருந்தது.

யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் இருந்த அகதி முகாம்மீது ஷெல்கள் விழுந்து வெடித்தன.

ஷெல் அடியால் முகாமுக்குள் இருந்த ஆறுபேர் பலியானார்கள். நாவலர் மண்டப அகதி முகாம்மீதும் ஷெல் தாக்குதல் இடம் பெற்றது. நான்குபேர் பலியானார்கள்.

அகதி முகாம்களும் தாக்கப்படுகின்றன. படைகள் மூர்க்கத்தனத்துடன் முன்னேறிவருகின்றன, என்ற செய்தி பரவத் தொடங்கியது.

அகதிகள் செய்வதறியாது திகைத்தனர். அங்கிருந்து வேறு பகுதிகளுக்குத் தப்பி ஓடுவதுதான் பாதுகாப்பு என்று நினைத்தனர்.

சுண்டிக்குளி அகதி முகாமில் இருந்து தப்பியோடிக்கொண்டிருந்த மக்களை நோக்கி இந்தியப் படையினர் சுட்டுத் தள்ளினார்கள். சிலரைக் கைது செய்து விசாரித்தனர். உயிர் தப்பி ஓடுவதாக அவர்கள் கூறியதை படைகள் நம்பவில்லை. சுட்டுக்கொன்றுவிட்டனர்.

எண்பது வயதான லெஸ்லி சாமுவேல் என்ற முதியவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார். அவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அக்டோபர் 21ம் திகதி- தீபாவளி தினத்தை யாழ்ப்பாண மக்கள் மறக்கவே மாட்டார்கள்.

தீய அசுரன் ஒழிந்தநாள்தான் தீபாவளி என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும். அக்டோபர் 21ம் திகதி 1987ல் தீபாவளிதினம் அதற்கு மாறாக அமைந்தது.

யாழ் நகரை கைப்பற்றிய இந்தியப் படையினர் யாழ் மருத்துவமனையில் நடத்திய மனித வேட்டை தீபாவளி தினத்தன்றுதான் நடந்தது.

### மருத்துவமனை வேட்டை

யாழ்ப்பாண பொதுமருத்துவமனையில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக 'முறிந்த பனை' நூலில் விபரமாகப் பதிவு செய்துள்ளனர். அந்த ஆவணத்தில் இருந்து சில பகுதிகள் இவை:

யாழ் நகரை இந்திய இராணுவம் கைப்பற்றும் என்பது சில தினங்களாக எதிர்பார்க்கப்பட்டு வந்தது. அதனால் ஊழியர்கள் பலர் வேலைக்குச் செல்லாமல் இருந்தனர். ஏனையோர் இந்திய இராணுவம் நியாயமாக நடந்துகொள்ளும் என்று நினைத்து அங்கேயே தங்கி இருந்தனர்.

ஷெல் தாக்குதல்களால் காயமடைந்த பலர் மருத்துவமனைக்கு வந்துகொண்டிருந்தனர். மருந்துகளுக்கு பற்றாக்குறை நிலவியது. அதனால் அறுவைச் சிகிச்சைகள் செய்யமுடியாமல் இருந்தது.

மருத்துவமனையின் சவக்கிடங்கில் 70 சடலங்கள் குவிந்து கிடந்தன.

அக்டோபர் 21ம் திகதி- தீபாவளிதினத்தன்று காலை 11 மணியளவில் மருத்துவமனையின் சுற்றுப்பகுதிகள் அனைத்தும் கோட்டையிலிருந்தும், மேலே ஹெலிக்கொப்டர்களில் இருந்தும் குண்டுவீச்சுக்கு இலக்கானவை.

காலை 11.30 மணியளவில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுக் கட்டித்தின் மீது ஒரு ஷெல் விழுந்தது.

பிற்பகல் 1.00 மணியளவில் சாந்தி தியேட்டர் ஒழுங்கை முனையில் இந்தியத் துருப்புக்கள் காணப்பட்டன. பிற்பகல் 1.30 மணிக்கு 8ம் நம்பர் வார்ட்டில் ஒரு ஷெல் விழுந்தது. ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

நிலவரத்தைக் கண்டறிய மருத்துவ நிபுணர் ஒருவர் இன்னொரு வைத்தியருடன் வெளியில் சென்றார். மருத்துவமனை வளவுக்குள் இருந்து ஆட்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கிறார்கள். என்பதைக்காட்டும் வகையில் காலியான ரவைக் கூடுகள் சில அங்கு விழுந்து கிடந்ததை அவர் பார்த்திருக்கிறார்.

பிற்பகல் 2.00 மணிக்கு ஆயுதம் தாங்கிய விடுதலைப் புலிகள் மருத்துவமனை வளவுக்குள் நிற்பதை அவர் கவனித்திருக்கிறார்.

பின்னர் அவர் டாக்டர் கணேசரத்தினத்தையும் அழைத்துக்கொண்டு சென்று புலிகள் அங்கு நிற்பதால் ஆஸ்பத்திரிக்கு ஏற்படக்கூடிய ஆபத்தைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதனை ஏற்றுக்கொண்டு புலிகள் அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.

அவர்கள் சென்ற ஐந்து நிமிடத்துக்குள் மற்றொரு புலிகளின் அணி ஆஸ்பத்திரி வளவுக்குள் வந்தது. ஒரு பெண் டாக்டரும், இன்னொரு டாக்டரும் சென்று புலிகளுடன் பேசினர். புலிகள் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர்.

பிற்பகல் நாலு மணியளவில் ஆஸ்பத்திரி வீதியில் பெட்ரோல் ஷெட் பக்கம் இருந்து 15-20 நிமிஷங்களுக்கு துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. ஆஸ்பத்திரியில் இருந்து திருப்பிச் சுடும் சத்தம் எதுவும் கேட்கவில்லை.

"அந்தச் சமயத்தில் எங்கள் அறிவுக்கெட்டியவரை ஆஸ்பத்திரிக்குள் எந்தப் புலிகளும் இல்லை," என்று அந்த மருத்துவ நிபுணர் கூறினார்.

யாழ் மருத்துவமனையின் கேற்வழியாக இந்திய இராணுவம் உள்ளே புகுந்தது.

உள்ளே புகுந்த இராணுவம் கண்மூடித்தனமாகச் சுடத் தொடங்கியது.

அதன் பின்னர்தான் மருத்துவமனைக்குள் நெஞ்சை உலுக்கும் படுகொலை வேட்டை ஆரம்பமானது.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# பலவீனமான இராணுவ முஸ்தீபுகள்! காணமுடியாத கருத்தொருமிப்பு!

அலசுவது– இராஜதந்திரி

உள்ளூராட்சித் தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

கடந்த ஆண்டின் ஆரம்பம் முதல் இறுதிவரை 'யுத்த காண்டம்' இடம் பெற்றிருந்தது. இந்த ஆண்டின் ஆரம்பமும் இராணுவத்தரப்புக்கு பேரிழப்புகளைக் கொடுத்திருந்தது.

இராணுவ நடவடிக்கைகள் முஸ்தீபுகள் மத்தியில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வியூகங்களையும் ஆட்சியாளர்கள் வகுத்துள்ளனர்.

இலங்கையின் ஆட்சியாளர்கள், அவர்கள் எந்தவொரு கட்சியைச் சேர்ந்தவர்களான போதிலும் ஒரு வெல்ல முடியாத, அர்த்தமற்ற போரையே நடத்திக் கொண்டிருக்கின்றனர் என்பதைத் தெளிவாக அறிய முடிகின்றது.

பல்வேறு கட்சிகளினதும் ஆதரவுடன் ஆட்சி நடத்தும் பொதுஜன ஐக்கிய முன்னணி, அரசியல் ரீதியாக மட்டுமல்ல, பொருளாதார ரீதியாகக்கூட பலத்த நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது.

1970ம் ஆண்டுக்கும், 1977ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியை இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு 'பட்டினிச் சகாப்தம்' என்றே மக்கள் வர்ணித்திருந்தனர்.

இதன்காரணமாகவே 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஸ்ரீ.ல.சு.க. படுமோசமான தோல்வியைத் தழுவியதுடன், ஐ.தே.க பெருவெற்றியையும் பெற்றிருந்தது.

இன்றுங்கூட 1970க்கும் 77க்குமிடைப்பட்ட காலத்தில் நிலவிய பட்டினிச் சகாப்தம் மீண்டும் தோன்றி விடுமோ என்பதே நாட்டு மக்களின் பயமாக இருக்கின்றது.

அவர்களது பயத்துக்கும் நியாயம் இருப்பது போலவே விலைவாசி உயர்வு, மற்றும் அன்றாட செலவீனங்களின் அதிகரிப்பு என்பன காணப்படுகின்றன.

இன்றையப் பொருளாதார நிலையில் பாதகமான தன்மைகள் காணப்படுவதற்கு யுத்தத்தையே ஆட்சியாளர்கள் காரணங் காட்டுகின்றனர்.

நாட்டின் வளங்களையும், வருமானங்களையும் யுத்தமே உறிஞ்சி விடுகின்றது என அரசு தெரிவிக்கின்றது.

எனவே நாட்டைக் குட்டிச் சுவராக்கி வருகின்ற யுத்தத்தை ஆட்சியாளர்கள் ஏன் ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாகாது என்ற கேள்வியே எழுந்து நிற்கின்றது.

இக்கேள்விக்கு பதிலிறுக்கும் ஆட்சியாளர்கள் "எல்.ரி.ரி.ஈ.யினர் பயங்கரவாதிகள்; அவர்கள் நாட்டைக் கூறுபோடப்பார்க்கிறார்கள்; இதன்காரணமாகவே யுத்தத்தை நடத்தி அவர்களைப் பலவீனப்படுத்த முனைகிறோம்" என்று கூறுகிறார்கள்.

எல்.ரி.ரி.ஈ.யைப் பலவீனப்படுத்தும் படலம் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாகவே இடம்பெற்று வருகின்றது.

இப்பத்து வருடகாலத்தில் எல்.ரி.ரி.ஈ. படிப்படியாக வளர்ச்சி கண்டும், பலமடைந்தும் வந்துள்ளதே தவிர, எவ்விதத்திலும் தனது பலத்தை- ஆட்சியாளர்கள் எதிர்பார்ப்பது போல- இழந்துவிடவில்லை என்பதே தெளிவாகியுள்ளது.

மறுபுறத்தே 'விரலுக்கு மிஞ்சிய வீக்கம்போல' ஆட்சியாளர்களே நாட்டின் வரவு-செலவுக்கும் அப்பாற்பட்டவிதத்தில் இராணுவத்தைக் கட்டியெழுப்பியுள்ளனர்.

ஆனால் அந்த இராணுவ வளர்ச்சிகூட பலவீனமானதாகவும், போதிய செயற்திறன் இல்லாதிருப்பதாகவுமே விளங்குகின்றது.

எனவே ஒரு பலவீனமான இராணுவத்துடனேயே எல்.ரி.ரி.ஈ.யைப் பலவீனப்படுத்த அரசு கங்கணம் கட்டி நிற்பதை அவதானிக்க முடிகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கடந்த இரு வருடகால ஆட்சியில் வடக்கு-கிழக்குப் பிரச்சினை தொடர்பான அரசியல்

நடவடிக்கைகளைவிட, இராணுவ நடவடிக்கைகளே பெரிதும் காணப்பட்டன.

அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு ஆரம்பத்தில் முகங்கொடுத்தபோது "போர் என்றால் போர்! சமாதானம் என்றால் சமாதானம்!" என்று சூளுரைத்தார்.

ஆனால் இன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, "சமாதானத்துக்காகவே போர்" என்று கூறிவருகின்றார்.

இதன் மூலம் இலங்கையின் எந்தவொரு ஆட்சியாளரும் போர் என்ற பொல்லாத வார்த்தையைத் தவிர்த்து சமாதானம் என்பதை மட்டும் உறுதியாகக் கூறிவிட முடியாதவர்களாக இருப்பதையே அறிய முடிகின்றது.

போர், போர் என்று ஆட்சியிலிருப்போர் முழங்குகின்றனர். அவர்களோடு சேர்ந்து அவர்களின் செய்திச் சாதனங்களும் போர் என்று முழங்குகின்றன.

ஆனால் இலங்கையில் இணைந்து வாழவும், பகிர்ந்து வாழவும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் மதித்து வாழவும் தெரியாத இரு இனங்களுக்கிடையே போர் இடம் பெறுகின்றதே தவிர, வெளிநாடொன்றின் ஆக்கிரமிப்புக்கெதிராகவல்ல.

எனவே இலங்கையில் இன்று இடம் பெறுவதை யுத்தம், போர் என்று குறிப்பிடுவதைவிட ஓர் அர்த்தமற்ற மோதல் என்று கூறுவதே சரியானதாகும்.

உலகின் பல்வேறு நாடுகளும் 21ம் நூற்றாண்டினுள் நுழையும் விதத்தில் தம்மிடையேயுள்ள பூசல்களுக்கு விரைந்து முடிவுகண்டு வருவதை அவதானிக்க முடிகிறது!

இன்றைய உலகில் ஒரு நாடு பின் தங்கி நிற்பதற்கு அதன் தவறான உள்நாட்டுக் கொள்கைகளே முக்கிய காரணமாக இருக்கின்றன.

வெளிநாடுகளின் தலையீடுகளோ, குறுக்கீடுகளோ இன்று வேறொரு நாட்டினுள் நேரடியாகக் காணப்படுவதில்லை.

மேற்கு-கிழக்கு என்றிருந்த 'பனிப்போர்' கெடுபிடிகள் தளர்ந்துபோனதையடுத்து, அந்நியத்தலையீடுகளால் ஒரு நாடு பாதிப்புக்குள்ளாவதும் தவிர்க்கப்பட்டுள்ளது.

இன்று ஒவ்வொரு நாடும் தனது சொந்தநலனில் அக்கறை காட்டுகின்றதே தவிர, ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக இல்லை.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்தர் குமார் குஜ்ரால்கூட இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தமது நாடு தலையிடப்போவதில்லை என்பதனை தெளிவாகவே கூறியிருந்தார்.

எனவே இலங்கை அதன் உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு தன்னாலான முயற்சிகளையே மேற்கொள்ளவேண்டியுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் தமது பலத்தை எடைபோடுவதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே கொள்ளவிருக்கின்றன.

இப்பலப்பரீட்சையில் இனப்பிரச்சினைத்தீர்வு விடயத்தையும் முன்வைத்து, அதுகுறித்த



நாட்டுமக்களின் நிலைப்பாட்டைக் கூறுவதும் ஆட்சியாளரின் முக்கிய நோக்கமாக இருக்கின்றது.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி, அரசின் அரசியல் தீர்வு, அரசியலமைப்பு ஆகியனவற்றை எவ்வகையிலும் ஏற்றுக்கொண்டமைக்கான அறிகுறி காணப்படவில்லை. எனவே ஐ.தே.க.நிச்சயம் தேர்தல் களத்தில் அரசியல் தீர்வு, அரசியலமைப்பு மாற்றம் என்பவை பற்றி தனது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தேத் தீரும்.

தேர்தல் களத்தில் அரசியல்தீர்வுப் பொதி குறித்து பல்வேறு சக்திகளினதும் எதிரும், புதிருமான கண்ணோட்டங்கள் வெளிவரும்போது, அதுபற்றி தேர்தலின் பின்னர் மீண்டும் ஒரு கருத்தொருமித்த நிலையை ஏற்படுத்துவது கடினமான பணியாகவே இருக்கும்.

இந்நிலையில் அரசியல் தீர்வு குறித்த முயற்சியில் மேலும் பின்னடைவுகளை மட்டுமல்லாமல், ஆளும் தரப்புக்கும், எதிர்த்தரப்புக்கும் கருத்தொருமிப்பு என்பது கைகூடப்போவதில்லை என்பதும் தெளிவாகி வருகிறது. தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமைந்தாலும் இரு தரப்பும் அரசியல் தீர்வு விடயத்தில் ஏட்டிக்குப் போட்டியான நிலைப்பாட்டையே மேற்கொள்ளப் போகின்றன.

பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்று ஓர் அரைநூற்றாண்டையும் அண்மித்துள்ள இத்தருணத்தில், நாட்டின் முக்கிய பிரச்சினையை நேர்மையாகத் தீர்ப்பதற்கு இன்னுங்கூட அரசியல் கட்சிகள் தயாராக இல்லை என்பதையும் அவர்களது நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன.

# ஜனாதிபதியின் நம்பிக்கை

புலிகள்மீதான பாரிய வெற்றி ஒன்றுக்காகக் காத்திருப்பதா? அல்லது இப்போதுள்ள முதலுக்கும் மோசம் வர முன்னர் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிப்பதா?

பின்னதுதான் சரியென்று முடிவு செய்துள்ளார் ஜனாதிபதி. திடீரென்று உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்ட சூட்சுமம் அதுதான்.

உள்ளூராட்சித் தேர்தல்களை முதன் முதலில் தள்ளிப்போட்டபோது அரசாங்கத்திடம் சில கணக்குகள் இருந்தன.

யாழ் குடாநாட்டு வெற்றியைப் பூரணப்படுத்துவதோடு புலிகளை வன்னியிலும் பலவீனப்படுத்திவிட்டு புலிகளை வென்ற சாதனையோடு தேர்தலைச் சந்திக்கலாம் என்று கணக்குப் போட்டது அரசாங்கம்.

முதல் கட்டமாக சில மாகாணசபைகளைக் கலைத்துவிட்டு, அங்கு தேர்தலை நடத்துவது. அந்த வெற்றிகளோடு சூட்டோடு சூடாக உள்ளூராட்சித் தேர்தல்களையும் நடத்தி முடித்துவிடலாம் என்பது மற்றொரு கணக்கு.

மாகாண சபைக் கலைப்புக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பு சொல்லப்பட்டதால் அந்த யோசனை கைகூடவில்லை.

முல்லைத்தீவு முகாம் மீதான புலிகளின் தாக்குதலும், வடக்கு-கிழக்கிலும், தலைநகரிலும் புலிகளின் தாக்குதல்களும் அரசாங்கத்தின் யுத்த வெற்றிப் பிரசாரத்தில் பின்னடைவுகளை ஏற்படுத்தியிருந்தன.

எனவே-புலிகள் மீதான பாரிய பதிலடி நடவடிக்கை ஒன்றைத் தொடுத்துவிட்டு, அந்த வெற்றிச் செய்தியோடு தேர்தலைச் சந்திக்கலாம் என்று காத்திருந்தது அரசாங்கம்.

ஆனால் புலிகளின் தாக்குதல்கள் கிழக்கிலும், வடக்கில் பரந்தனிலும் தமது உக்கிர முகத்தைக் காட்டிவிட்டன. எனவே மேலும் காத்திருப்பது என்பது- அரசாங்கம் ஏற்கனவே பெற்ற யுத்த வெற்றிகளையும் நஷ்டமாக்கிவிடக்கூடும்.

வெற்றி தோல்விகள் அடிக்கடி கைமாறிக்கொண்டிருக்கும் யுத்த முனையில் நிச்சயமான வெற்றியை எதிர்பார்த்து காத்திருப்பது விவேகமல்ல, என்ற முடிவுக்கு ஜனாதிபதி வந்துவிட்டார்.

அப்படித்தான் ஒரு வெற்றியைப் பெற்றாலும்கூட, அதனை தக்கவைத்துக் கொள்வது ஒரு பிரச்சனை. குறிப்பிட்ட வெற்றியை மூலதனமாக வைத்து தேர்தலில் பிரசாரம் செய்யும்போது, புலிகள் பதிலடியில் இறங்கிவிட்டால் முதலுக்கே மோசம் வந்துவிடும்.



யாழ் குடாநாட்டை படைகள் கைப்பற்றிய பின்னரும் புலிகளின் தாக்குதல் பலம் வீழ்ச்சியடையவில்லை என்பதைகள நிலவரங்கள் வெளிப்படுத்தி உள்ளன. எனவே புலிகள் பலவீனமாகிவிட்டதாகக் கருதிக்கொண்டு முன்னர் போடப்பட்ட அரசியல்-இராணுவக் கணக்குகள் இனி உதவாது.

தற்போது கையிருப்பில் உள்ள மூலதனத்துடன் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிப்பதுதான் புத்திசாலித்தனம் என்ற முடிவுக்கு வந்தார் ஜனாதிபதி.

யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றியது, புலிகளைப் போரில் வெற்றி கொள்வது என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாக நிற்பது போன்றவைதான் கையிருப்பில் உள்ள மூலதனங்கள்.

அது தவிர உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு நெருங்கும் சமயத்தில், புலிகளுக்கு பதிலடிக்கு கால அவகாசம் இல்லாதவாறு ஒரு தாக்குதலை நடத்தி வாக்காளர்களின் மனங்களை வெல்லவும் அரசு நினைக்கக்கூடும்.

அது தவிர, ஐக்கிய தேசியக் கட்சி இன்னமும் தனது 17 வருடகால ஆட்சி மீதான மக்களின் வெறுப்பில் இருந்து மீண்டுவரவில்லை.

பொதுஜன முன்னணி ஆட்சி பதவிக்கு வந்த பின்னர் சொல்லிக் கொள்ளும்படியான சாதனைகள் எதனையும் செய்துவிடவில்லை.

கடந்த தேர்தலில் வழங்கப்பட்ட எத்தனையோ வாக்குறுதிகள் கிடப்பில் இருக்கின்றன. விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஜனாதிபதி ஆட்சி முறையும் அப்படியே இருக்கிறது. நிர்வாகம் மெதுவாக நகர்கிறது.

17 வருடகால ஐ.தே.கட்சி ஆட்சிமீதான குற்றச்சாட்டுக்களை முதன்மைப்படுத்துவதில்தான் அரசுக்கு அக்கறை. தனது சாதனைகள் என்று எதனையும் கூற முடியாத வெற்றிடத்தை கடந்த ஆட்சி மீதான குற்றச்சாட்டுக்களால் நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஐ.தே.கட்சி மீதான வசைபாடலைக் கேட்டுக் கேட்டு மக்களுக்குப் புளித்துப் போகிறது. ஆனாலும் பொதுஜன முன்னணியின் பெரிய பலம் அதன் வசீகரமான தலைவி. வெளிநாடுகளில் எல்லாம் ஜனாதிபதி சந்திரிக்காவுக்குள்ள செல்வாக்கும் சிங்கள மக்களில் ஒரு சாராருக்கு மகிழ்ச்சியான விஷயம் தான்.

ஐ.தே.கட்சியிடம் வசீகரமான தலைமை கிடையாது. ரணில் இப்போதும் கட்சிக்குள் தனது பிடியை இறுக்கப்போராடிக் கொண்டிருக்கிறார்.

கடந்த காலத்தில் ஐ.தே.கட்சியின் நம்பகமான வாக்கு வங்கியாக இருந்த சிறுபான்மை மக்களிடம் இப்போது கட்சி நம்பிக்கை இழக்கத் தொடங்கிவிட்டது.

ஐ.தே.கட்சிக்குள் உள்ள தீவிரவாதப் பிரிவினர் இனவாதத்தைக் கிளப்பி, அரசியல் தீர்வு யோசனைகளைச் சாடி வாக்குகளைக் கவர்ந்து தருவர் என்று ரணில் நம்புகிறார்.

ஆனால் தீவிரவாதப் பிரிவினரின் பிரசாரங்கள் சிறுபான்மை மக்களின் வாக்கு வங்கிகளை ஐ.தே.கட்சியிடம் இருந்து பிடுங்கிப்போட்டுவிடப் போகின்றன.

மிக முக்கியமான விஷயம் யாதெனில்; பொதுஜன முன்னணிக்கு எதிரான அதிருப்திகள் மக்களிடம் உள்ளன. ஆனால் அந்த அதிருப்திகளை வாக்குகளாக மாற்றிக்கொள்ளும் நிலையில் ஐ.தே.கட்சி இல்லை. அந்த நிலைமையை எட்ட அக்கட்சிக்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுகிறது.

எனவே-உள்ளூராட்சித் தேர்தலில் தமது வெற்றி தொடர்பான ஆளும்தரப்பின் நம்பிக்கையை தேர்தல் முடிவுகள் உறுதி செய்யப்போகின்றன என்றுதான் தெரிகிறது. முரசின் கணிப்பும் அதுதான்.



படிப்பகம்

www.padippakam.com

## தருவது 30 ரசிகன்

# கொள்ளை ராணி

## பூலான்தேவி

"பிடித்திருக்கிறதா?" என்று மல்லா கேட்டதும் எனக்கு திகைப்பாக இருந்தது. எதிர்பாராத சந்தோசமும் திகைக்கவைத்து விடும்தானே?

"ம்" என்றேன் வெட்கத்துடன்.

"எங்கள் கோஷ்டியில் நீ மட்டும்தான் ஒரு பெண். ஒருவேளை எங்களைப் பிடிக்காமல் இருந்தால் தைரியமாகச் சொல்லிவிடு. உன்னைப் பத்திரமாக வீட்டில் சேர்ப்பிப்பது என் பொறுப்பு!" என்றான் மல்லா.

பிடித்திருக்கிறதா என்று கேட்டது இதனைத்தானா? பொத்துக்கொண்டு கொட்டிய மழை சட்டென்று நின்றுவிட்டது போல், என் மனம் காய்ந்துபோனது.

"என்ன யோசிக்கிறாய்?" என்றான் மல்லா.

"ஒன்றுமில்லை. நான் உங்களோடு இருப்பது யாருக்காவது பிடிக்கவில்லையா?" என்று கேட்டேன். கேட்கும்போது அழுகை வந்துவிட்டது.

"சேச்சே.. அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது."

கேட்க இதைவிட்டால் வேறு நல்ல சந்தர்ப்பம் வாய்க்கப்போவதில்லை.

நான் மல்லாவிடம் என் கதையைச் சொல்ல ஆரம்பித்தேன். மல்லா மிகப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

> **சென்றவாரம்**
> பூலான் தேவியும் கொள்ளைக் கோஷ்டியில் ஒருத்தியாகிறாள். சீருடை அணிந்துகொள்கிறாள். தனது கனவுகள் நிறைவேறப் போகின்றன என்று பூரித்துப்போகிறாள்.
> இனி....

எனது துப்பாக்கியையும் எடுத்துவந்து பாயின் அருகே வைத்துக்கொண்டு மல்லாந்து படுத்தேன்.

எனக்கு முதுகைக் காட்டிக்கொண்டு மல்லா படுத்திருந்தான். தலையைத் திருப்பி மல்லாவையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

மல்லாவிடம் இருந்து மெல்லிய குறட்டை ஒலி கேட்கத் தொடங்கியது. எனக்கு ஆச்சரியம், ஆச்சரியமாக இருந்தது.

மல்லாவைச் சந்தித்த பின்னர்தான் எத்தனை ஆச்சரியங்கள்? மல்லாவே ஒரு ஆச்சரியம்தான்.

உடலை அசைத்து மல்லாவை நெருங்கிப் படுத்துக்கொண்டேன். மல்லா திரும்பினான் என்றால் என்மீதுதான் மோதவேண்டும்.

இதுவரை எத்தனையோ இரவுகள் தூங்காமல் கிடந்திருக்கிறேன். அப்போதெல்லாம் கவலை கவலையாக வந்து தூக்கத்தை விரட்டும். இப்போது மனம் இலேசாக இருக்கிறது. சந்தோசம் நிறைந்து கிடக்கிறது. ஆனாலும் தூக்கம் வரவில்லை.

அதிக கவலையென்டாலும் தூக்கம் வராது. அதிக சந்தோசம் என்றாலும் தூக்கம் வராது என்று தெரிந்துகொண்டேன்.


பூலான்

நான் மல்லா முகத்தைப் பார்த்துவிட்டு, பார்வையை விலக்கி, அவன் கையில் இருந்த துப்பாக்கியைப் பார்த்துக்கொண்டே சற்றுக் குரலை உயர்த்திச் சொன்னேன்; "அப்படி விருப்பமில்லையென்றால் சொல்லிவிடுங்கள், நான் போய்த் தொலைந்துவிடுகிறேன்."

மல்லாவின் முகத்தை என் கண்களை மேலே உயர்த்திப் பார்த்தேன். மல்லா என்னையே பார்த்துக்கொண்டிருந்தான். கொஞ்ச நேரம் அமைதி நிலவியது.

பின்னர் மல்லா திடமான குரலில் சொன்னான்;

"இனிமேல் நான் அப்படிக் கேட்க மாட்டேன். இப்போது சந்தோசம்தானே?"

"சந்தோசம்" என்றேன் கண்களைத் துடைத்துக்கொண்டு.

அடுத்து என்ன பேசுவதென்று தெரியவில்லை. மல்லா மட்டும் எதிரில் இல்லையென்றால் அவனுடன் என்னவெல்லாமோ பேச வேண்டும் என்று எண்ணங்கள் தோன்றும். இப்போது எல்லாமே மறந்துபோய்விட்டது.

திடீரென்று மல்லாவிடம் இருந்து அந்தக் கேள்வி வந்தது.

"மையாதீன் யார்?"

அந்தப் பெயரைக் கேட்டதுமே என்னிடமிருந்த தயக்கங்கள், வெட்கம் எல்லாம் மறந்துபோய், ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இப்போது என்னால் மல்லாவின் முகத்தை நேரடியாகப் பார்க்க முடிந்தது.

"என் பெரியப்பாவின் மகன். பணத் திமிர்பிடித்த நாய். நானும் என் குடும்பமும் சீரழியவைத்த பாவி! கொடும் பாவி!"

என் குரலில் இருந்த சீற்றத்தைக் கண்டு மல்லாவின் முகத்தில் வியப்புத் தெரிந்தது.

"மையாதீன் சொல்லித்தான் பாபு சிங் உன்னைக் கடத்திவந்தான்," என்றான் மல்லா.

மல்லா சொன்னது எனக்குப் புதிய செய்தி. ஆனாலும் நான் ஆச்சரியப்படவில்லை. மையாதீன் செய்யக்கூடியவன்தான்.

"உங்களுக்கும் அவனைத் தெரியுமா?"

"தெரியும், பழக்கமில்லை. மையாதீனுடன் உனக்கென்ன அவ்வளவு கோபம்?"

மல்லா அப்படிக் கேட்டதும் அவன் முன்பாக என் சகல சுமைகளையும் இறக்கிவைக்கத் தீர்மானித்தேன்.

இதுவரை, என் உள்ளத்தில் பொத்தி வைத்திருக்கும் சோகத்தையெல்லாம், தீயாய் தகிக்கும் கோபத்தையெல்லாம் பகிர்ந்துகொள்ள எனக்கு யாரும் இருந்ததில்லை.

பாரங்களைப் பகிர்ந்துகொள்ள யாருமே இல்லாததுகூட பெரிய கொடுமைதான். இந்த உலகத்தில் நமக்கென்று யாருமில்லையே, நம்மைப் புரிந்துகொள்ள யார்தான் இருக்கிறார்கள் என்று தனியாக நின்று தவிக்கும் தவிப்பு இருக்கிறதே, அது கொடுமையிலும் கொடுமை.

மல்லாவைச் சந்தித்த பின்னர்தான் அந்தக் கொடுமையில் இருந்து விடுபடத் தொடங்கியிருக்கிறேன். காய்ந்து இறுகிக் கிடந்த நிலமாக இருந்த என் மனதுக்குள் ஈரலிப்பை உணரத்தொடங்கியிருக்கிறேன்.

இப்போது மல்லாவிடம் என் மனதைத் திறந்து கொட்டப்போகிறேன். மனசு முழுக்க நிரவிக் கிடக்கும் பழிக்குப் பழி உணர்ச்சிக்கு மல்லாவின் உதவியைக்

இடையே ஒரு தடவை பரத் சிங் எங்கள் இருவருக்கும் தேநீர் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போனான்.

அந்தத் தேநீரைக் குடிப்பதுகூட என் வேகத்தைத் தடைப்படுத்திவிடும் என்பதால், எல்லாவற்றையும் ஒரே மூச்சில் சொல்லி முடித்துவிட்டுத்தான் தேநீரைக் குடித்தேன். தேநீர் சில்லென்று இருந்தது.

நான் தேநீரை அருந்தும்வரை மல்லாவும் தொடவில்லை. பாவம், அவனும் ஆறிப்போன தேநீரைத்தான் குடித்தான்.

நான் சொல்லிக் கொண்டிருந்தபோது மல்லாவின் முகத்தில் பரிவு, வியப்பு, கோபம் என்று பல்வேறு சாயல்கள் தோன்றி மறைந்தன. சில சமயம் அவனது முகம் இறுகிப்போயிருந்தது. இன்னொரு சமயம் அவனது முகத்தசைகள் துடித்தன. குறுக்கே ஒரு கேள்வி கூடக் கேட்காமல் எல்லாவற்றையும் அவன் உணர்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருந்ததே எனக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

மனம் இலேசாகிப் பஞ்சுமாதிரி ஆகிவிட்டதைப் போல உணர்ந்தேன்.

தேநீரை குடித்துவிட்டு கோப்பையை ஓரமாகத் தள்ளிவைத்துக் கொண்டே மல்லா கேட்டான்:

"அந்த நாய்களையெல்லாம், வேசி மக்களையெல்லாம் விரட்டிக் கொல்ல வேண்டும்! செய்யலாம்! நீ செய்யவேண்டும்! செய்வாயா? சொல்லு செய்வாயா? பயப்பிடாதே! இப்போது நீ ஒருத்தியல்ல; நாங்கள் இருக்கிறோம். நான்... நான் இருக்கிறேன்! விடக்கூடாது, செய்வாயா?"

மல்லாவின் குரல் பயங்கரமாக இருந்தது. அவன் கண்களில் ஒரு வெறி தெரிந்தது. சட்டென்று எழுந்துகொண்டு அங்குமிங்கும் நடந்தான். திடீரென்று நின்று என்னை உற்றுப் பார்த்துக் கேட்டான்: "என்ன பயப்படுகிறாயா?"

எனக்கு உடம்பெங்கும் புது இரத்தம் பாயத் தொடங்கிவிட்டது. மல்லாவின் ஒவ்வொரு வார்த்தையும் எனக்கு நூறு நூறு யானைகளின் பலம் கொடுத்துக் கொண்டிருந்தன. இத்தனை விரைவாக நினைத்தது எல்லாமும் நடக்குமென்று நான்..... நான் நம்பியிருக்கவில்லை. அதனால்தான் மல்லா சொன்னதைக் கேட்டு பிரமித்துப்போய் சிலையாக நின்றேன். எல்லாமும் உண்மைதானா என்று என்னை நானே கிள்ளிப்பார்க்க வேண்டும்போல இருந்தது.

நான் அப்படி நின்றதை பயந்துவிட்டதாக நினைத்துவிட்டான் மல்லா. அவன் அப்படி நினைத்தது எனக்கு அவமானமாக இருந்தது. மல்லாவின் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் நான் கேட்டேன்:

"எனக்கு எப்போது துப்பாக்கி சுடப் பழக்கப்போகிறீர்கள்?"

மல்லா திருப்தியாக என்னை நோக்கினான். பின்னர் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டுச் சொன்னான்:

"முதலில் உனக்கு புதிய உடைகள் தைக்க வேண்டும். நாளைக்கே அதனைச் செய்துவிடலாம். அதற்கெல்லாம் கிராமத்தில் ஆட்கள் இருக்கிறார்கள். உடை தயாரானதும் பயிற்சியை ஆரம்பிக்கலாம்"

"ஏன் இந்த உடைக்கு என்ன?"

"இறுக்கமாக இருக்கிறது, இது பயிற்சிக்கு உதவாது!" என்றுவிட்டு துப்பாக்கியை ஒரு மூலையில் வைத்தான்.

சுருட்டிவைக்கப்பட்டிருந்த பாய்கள் இரண்டை எடுத்துவந்து தரையில் விரித்தான்.

இரண்டு பாய்களையும் அருகருகே விரித்தான். ஏன் இரண்டு பாய்களை விரிக்கிறான் என்று நினைதது்க் கொண்டே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"என் அருகிலேயே நீ படுத்துக்கொள், அதுதான் பாதுகாப்பு!" என்றுவிட்டு துப்பாக்கியை தன் அருகே வைத்துக்கொண்டு மறுபுறமாகத் திரும்பிப் படுத்தான் மல்லா.

எனக்கு எல்லாமே கனவில் நடப்பது போலிருந்தது. மல்லாவின் பக்கத்தில் படுத்திருப்பது எனக்கு எவ்வளவு பெரிய சந்தோசம்!

ம்ஹீம்.. மல்லா அசையவே இல்லை. அப்படியே கிடந்தான்.

மெல்ல அவன் பக்கமாகத் திரும்பிப் படுத்தேன். பயமாகவும் இருந்தது. உடம்பு சூடானதுபோல் இருந்தது.

தூக்கத்தில் காலைத் தூக்கிப்போடுவது போல மல்லாவின் கால்களுக்கு மேலே என் கால்களைப் போட்டுவிட்டேன். நெஞ்சுக்குள் ஒரே படபடப்பு.

மரக்கட்டை மல்லா. அப்போதும் அசையவில்லை. சற்றுநேரம் கால்களை அப்படியே வைத்திருந்தேன். முதலில் இருந்த பயம் சற்றுக் குறைந்தது.

அப்படியே மல்லாவை அணைத்துக் கொள்ளலாமா என்று ஆசையாக இருந்தது. மல்லா என்மீது இரக்கம் காட்டுவது எனக்குப் பிடிக்கவில்லை. மல்லாவுக்கு என்னைப் பிடிக்க வேண்டும். அதற்கு மல்லாவின் மனதை மாற்றவேண்டும்.

ஆனாலும் என்க்கு தைரியம் வரவில்லை. கால்களை மட்டும் அழுத்தமாக வைத்துக் கொண்டு மேலும் கீழுமாக அசைத்தேன்.

மல்லா சட்டென்று திரும்பினான். நான் கண்களை இறுக்கி மூடிக்கொண்டேன்.

நெஞ்சு படக் படக்கென்று அடித்தது. மல்லா சட்டென்று திரும்பியதால் அவனது வலதுகரம் என்....என்...என் நெஞ்சில் பட்டுக் கொண்டிருந்தது. மல்லா என்ன செய்யப்போகிறான்? கண்கள் இறுகமூடியிருக்க காதுகளும் மனமும் மட்டும் திறந்து கிடந்தன.

மல்லா எழுந்து அமர்ந்துகொண்டிருக்க வேண்டும். என் கால்களை தன் கைகளால் தூக்கி விலக்கினான். மீண்டும் படுத்துவிட்டானா? கண்ணைத் திறக்கப் பயமாக இருந்தது.

கொஞ்சநேரம் அப்படியே கிடந்துவிட்டு மெல்ல மெல்ல கண்களை பாதி திறந்து பார்த்தேன்.

-படுக்கையில்-

மல்லாவைக் காணவில்லை.

வெளியே யாருடனோ மல்லா பேசிக் கொண்டிருப்பது கேட்டது.

அப்படியே கிடந்து எப்போது தூங்கிப் போனேன் என்று தெரியவில்லை.

காலையில் எழுந்து வெளியே பார்த்த போது மல்லாவின் முன்பாக மாது சிங்கும், பாரத் சிங்கும் இன்னும் ஒருவனும் கத்தையாக பணத்தை எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

மல்லாவின் முன்பாக தங்க நகைகள் சில பரவிக்கிடந்தன. எனக்கு மல்லாவைப் பார்க்க வெட்கமாக இருந்தது. நான் வேண்டுமென்றுதான் கால்களைப் போட்டேன் என்று மல்லா தெரிந்து கொண்டிருப்பானோ? என்றுதான் மனம் குறு குறுத்தது.

பணம் எண்ணி முடிக்கப்பட்டதும் மல்லா சொன்னான்: "இது முழுக்க பாபுசிங் குஜார் கொள்ளையடித்த பணம். அவனைக் கொன்றுவிட்டு, அவனது பணத்தில் நாங்கள் சாப்பிடக்கூடாது. கொடுத்துவிடலாம். இதையெல்லாம் கிராமத்தில் ஏழைகளுக்குக் கொடுத்துவிடலாம். நாங்கள் இப்போது புறப்படுகிறோம். அஸ்டாவுக்கு போகிறோம். மாது சிங்! எல்லோரையும் தயாராகச் சொல்!"

உத்தரவுகளைப் பிறப்பித்துவிட்டு எழுந்தவன் நான் இருப்பதைப் பார்த்துவிட்டான்.

"பரத் சிங் ஏய் பரத் சிங், வா இங்கே, பூலானுக்கு உடை தைக்க வேண்டும். ஏற்பாடு செய்! என்ன!" சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டான்.

எனக்கு 'அப்பாடா' என்றிருந்தது. உள்ளே போன மல்லா உரத்த குரலில் "ஏய் பூலான்!" என்று கத்தினான்.

நான் எழுந்து உள்ளே ஓடினேன். மல்லாவின் முகத்தில் கோபம் கொப்பளித்துக் கொண்டிருந்தது.

சட்டென்று என்னை நெருங்கிவந்து கன்னத்தில் அறைந்தான்.

-பளார்-

எனக்குப் பொறி கலங்கியது.

"பார் அங்கே!" என்று தரையைக் காட்டினான், கோபம் மாறாத குரலில்.

(தொடர்ந்து வரும்)

## துணைவிகள் காத்திருக்கிறார்கள்!

இந்திய கிரிக்கெட் அணி தொடர்ந்து போட்டிகளில் விளையாடிக் கொண்டிருந்தால் இரசிகர்களுக்கு கொண்டாட்டம்தான்.

கிரிக்கெட் வீரர்களின் மனைவிமார்தான் ரொம்ப சோகத்தில் இருக்கிறார்கள். கப்டன் டெண்டுல்கரின் மனைவி அஞ்சலி தனது சோகத்தை ஒளிக்காமல் சொல்லிவிட்டார்.



திருமணத்தின் பின்னர் டெண்டுல்கர் வீட்டில் இருந்த நாட்கள் குறைவுதான். சென்ற ஆண்டில் நீளமான பிரிவு. உலகக் கோப்பை போட்டிக்காக தீவிரமான பயிற்சியில் இருந்தார் டெண்டுல்கர். உலகக் கோப்பை போட்டி முடிந்ததும் இங்கிலாந்து சிங்கப்பூர், கனடா, என்று சுற்றுப்பயணம். அது முடிந்து திரும்பியதும் இந்தியாவில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகளுடன் ஆட்டம்.

இப்போது தென்னாபிரிக்க பயணம். அது முடிந்தால் ஸிம்பாப்பவே, மேற்கிந்தியா போன்ற நாடுகளுக்குச் செல்ல வேண்டும்.

டெண்டுல்கர் பிரபலமான ஒருவராக இருப்பதில் அஞ்சலிக்குப் பெருமைதான். அதற்காக கொடுக்க வேண்டிய விலைதான் இந்தப் பிரிவுகள்.

ஒன்றை இழந்தால்தான் இன்னொன்று கிடைக்கிறது. பணம், புகழ், பெருமை நிறைந்த இடத்தில் இருக்கிறார்கள் கிரிக்கெட் வீரர்கள். ஆனால் மகிழ்ச்சியை தங்கள் துணைவிகளுடன் பரிமாறத்தான் நேரம் போதவில்லை.

அசாருதீனுக்கும் சமீபத்தில்தான் திருமணம் நடந்தது. முடிந்த கையோடு கிரிக்கெட் சுற்றுப்பயணம் புறப்பட்டு விட்டார் அசாருதீன். சங்கீதா பாவம்தானே!

## மரணம் பக்கத்தில்

சாகப் போகிறோம் என்று தெரிந்தபின் அந்தச் சாவை எதிர்பார்த்துக் காத்திருப்பது எத்தனை கொடுமை!

'எய்ட்ஸ்' என்பது மரணத்தின் மற்றொரு



பெயராகிவிட்டது. மருந்தே கண்டுபிடிக்கப் படாத மரண வியாதி அது.

படத்தில் உள்ள காட்சி மாபெரும் சோகம் ஒன்றின் வெளிப்பாடு. தாய்லாந்து நாட்டில் 'எய்ட்ஸ்' நோயாளிகளுக்கு விசேஷ மருத்துவமனை இருக்கிறது. அதன் பெயர் 'வோட் பிரபாத் நாம்போ'. அங்கு மொத்தம் 170 படுக்கைகள்தான் உள்ளன. 'எய்ட்ஸ்' நோயாளிகளின் எண்ணிக்கையோ பல மடங்காக இருக்கிறது. கிட்டத்தட்ட நாலாயிரம் பேர்.

படுக்கை கிடைக்காதவர்களின் பெயர்கள் பட்டியலில் இருக்கும். படுக்கைகளில் உள்ளவர்கள் சாவைத் தழுவிய பின்னர் பட்டியலில் அடுத்துள்ளவர்களுக்கு இடம் கிடைக்கும்.

அப்படி அனுமதி கிடைத்த ஒருவர்தான் படுக்கையில் செத்துக் கிடக்கிறார். அருகில் முகத்தை மூடிக்கொண்டு இருக்கும் பெண் செத்துப்போனவரின் உறவினர் என்று நினைக்காதீர்கள். அந்தப் படுக்கையில் அடுத்து இடம் பிடிக்கப் போகிறவர் அவர்தான். அந்தப்பெண்ணுக்கு 26 வயது. மரணம் பக்கத்தில் வந்துவிட்டது.

இந்தப் புகைப்படத்தை 'எய்ட்ஸ்' எதிர்ப்பு பிரசாரத்திற்காகப் பயன்படுத்தப் போகிறார்கள்.

## சர்ச்சைக்குரிய பெண் இயக்குநர்

### தணிக்கைக் குழுவுடன் போர்

"வெளியே முகம் சுளித்தாலும் அனைவராலும் உள்ளூர இரசிக்கப்படும் விஷயம் 'செக்ஸ்'. அதனை விளக்க முற்பட்டால் ஏன் துள்ளுகிறார்கள்?" என்று கேட்கும் மீரா நாயருக்கு 39 வயது. 'காமசூத்ரா' பட இயக்குநர் அவர்தான்.



பூலான் தேவி தனது சுயசரிதையை ஒளிவு மறைவில்லாமல் துணிந்து சொன்னார். எனினும் பின்னர் அரசியலில் ஈடுபடத் தொடங்கியபோது தான்கூறிய சிலவற்றை மறுத்தார். ஆனாலும் அவர் மறுப்பதற்கு முன்னரே அவரது சுயசரிதை வெளியாகி பரப்பானது.

அதேபோல பூலான் தேவியின் கதையான பண்டிட் குயினில் நடித்த நடிகை சீமா பிஸ்வாலும் சர்ச்சைகளில் மாட்டிக் கொண்டார். "நிர்வாணமாக நடித்தது நான் அல்ல," என்று மறுத்தார்.

இப்போது மீரா நாயர் சர்ச்சைகளில் மாட்டியிருக்கிறார். 'ஓர் இந்தியப் பெண்ணுக்கு இத்தனை துணிச்சல் எப்படி வந்தது?' என்று எல்லோரும் வியக்கிறார்கள்.

'காமசூத்ரா' என்ற பெயரை தனது படத்திற்கு சூட்டியதும் மீரா நாயரின் தைரியம்தான்.

தாம்பத்திய உறவின் பல்வேறு முறைகளை விளக்கும் நூல்தான் காமசூத்ரா. ஆனால் 'காமசூத்ரா' திரைப்படம் ஒரு பாடமே தவிர ஆபாசமல்ல என்கிறார் இயக்குநர் மீரா நாயர்.

"அவசியம் பெண்கள் பார்க்க வேண்டிய படம் இது. படுக்கையில் கொடிநாட்ட விரும்பும் பெண்களுக்கு என் படம் ஒரு பாடம். தாம்பத்திய உறவின்போது பெண் அடையும் துன்பத்தையும், அதனை சமாளித்து அவள் வெற்றிபெறும் முறையையும் சொல்லியிருக்கிறேன்." என்கிறார் மீரா நாயர்.

சிற்பக் கலைஞனான தனது காதலனை மயக்கி திருமணம் செய்ய ஒரு இளம் பெண் தாம்பத்திய உறவுக் கலைகளை கற்றுத் தேர்கிறாள். அதில் வெற்றியும் பெறுகிறாள் என்பதுதான் கதை.

தணிக்கைக் குழுவினர் படத்தைப் பார்த்துவிட்டு பல காட்சிளை வெட்டிவிட்டனர். போர்க்கொடி உயர்த்தினார் மீரா நாயர். 'பண்டிட் குயின்' பட இயக்குநர் சேகர் கபூரும் அவருக்கு ஆதரவாக களத்தில் இறங்கினார்.

"இந்துக்கோவில்களில் தாம்பத்திய உறவின் பல்வேறு நிலைகளையும், முறைகளையும் விளக்கும் சிற்பங்கள் உள்ளன. திரையில் காட்ட மட்டும் அனுமதி இல்லையா?" என்பது மீராவின் வாதம்.

பாம்பு ஒன்று சீறியெழுவதுபோல காட்டுவதெல்லாம் உணர்ச்சியைத் தூண்டும் காட்சிகள் என்று சொல்லிவிட்டது தணிக்கைக் குழு. இறுதியில் ஒருவிதமாக படம் திரையிடப்பட்டுவிட்டது. இந்தியாவில் மட்டுமல்லாமல் அமெரிக்காவிலும் படம் வெளியாகியுள்ளது.

மீரா நாயரின் துணிச்சலை பல பத்திரிகைகள் பாராட்டியுள்ளன. ஆனால் மீரா நாயருக்கு இன்னமும் தணிக்கைக் குழு மீதான கோபம் குறையவில்லை.



படிப்பகம்

www.padippakam.com




## ஓவியப் பாவை

← உடலில் பச்சை குத்தும் மோகம் பரவிவருவதால் போட்டியெல்லாம் நடத்தத் தொடங்கிவிட்டார்கள். ஆடையால் உடலை மறைக்காமல் அழகு ஓவியத்தால் பளிங்கு உடலை மறைத்திருக்கிறார் இந்தப் பெண். ஜெர்மனியில் நடைபெற்ற உடலோவிய கண்காட்சியில்தான் இவர் தோன்றினார். மூன்று நாட்களாக கண்காட்சி நடைபெற்றது. உலகின் பலநாடுகளைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் தோன்றி தம் உடலை.... மன்னிக்கவும்.... உடல் ஓவியங்களைக் காண்பித்தார்கள். பார்வையாளர்கள் கலைக்கண்களால் ரசித்தார்களாம்.

இந்த அழகியின் பெயர் ஜெனிபர் அமெரிக்காவைச் சேர்ந்தவர். தனது உடலிலுள்ள ஓவியத்துக்கு மட்டும் மறக்காமல் சட்டை போட்டுவிட்டுள்ளார். ஓவியத்தில் ஒரு ஓவியம். ஓவியத்தை வரைந்தவர் மிகப் பொறுமை சாலியாக்கும். ●

## தகவல் பெட்டி

## வில்லாதி வில்லன்



↑ விஷப் பரீட்சை வேண்டாம் என்று சொல்வது வழக்கம். கடினமான காரியங்களில் ஈடுபடும் போது அப்படிச் சொல்வதுண்டு. தமிழ்நாட்டில் கோவையைச் சேர்ந்த இளைஞர் கண்ணன் உண்மையாகவே விஷப் பரீட்சையில் ஈடுபடுகிறார்.

அதாகப்பட்டது, பல்லிகளை லபக் லபக்கென்று நொறுக்குத் தீனி மாதிரி சாப்பிடுகிறார். 'பல்லியில் விஷம் இருக்கிறதல்லவா' என்று கேட்டால் சிரிக்கிறார்.

"ஒரே சமயத்தில் நூறு பல்லிகளை சாப்பிட்டுவிட்டு தண்ணீர் குடித்திருக்கிறேன். உயிரோடுதானே இருக்கிறேன்" என்கிறார்.


100 பல்லிகள், 4 பாம்புகள், 2 ஓணான்களை ஒரே நேரத்தில் சாப்பிட்டு சாதனை படைத்திருக்கிறார் இந்த வில்லாதி வில்லன்.

சாப்பாட்டுப் பிரச்சனையே இவருக்கு இருக்காது. பல்லிகள் இருக்கும்போது இவர் ஏன் பசியுடன் இருக்கப்போகிறார்?! ●

## நண்டில் அதிசயம்

↓ நத்தைகளுக்குத்தான் ஓடு இருக்கும் நண்டுகளுக்கும் இருக்குமா? இருக்கும். படத்தில் உள்ள நண்டைப் பாருங்கள். இது அபூர்வமான நண்டு. 'ஹெட்மிட் கிராப்' என்பது இதன் பெயர்.

நத்தைகளுக்கு இருப்பது போலவே இந்த ஹெட்மிட் கிராப்' நண்டுகளுக்கும் மேல் ஒடு உள்ளது. திடீர் ஆபத்து வரும்போது ஓட்டுக்குள் தமது உடலை இழுத்துக் கொள்கின்றன. இவையும் நீரில்தான் வாழ்கின்றன. நீருக்கு வெளியேயும் இவறறால் வாழமுடியும். அதிக வெப்பமான பிரதேசங்களில் உள்ள நீர்நிலைகளில்தான் இவை அதிகமாகக் காணப்படுகின்றன. ●





↑ கார்களில் புதுப் புது ரகங்கள், புதுப் புது வடிவங்களில் வந்து அசத்திக் கொண்டிருக்கின்றன.

படத்தில் இருப்பது சீனாவில் தயாரிக்கப்பட்ட கார். பற்றரியில் இயங்கக் கூடியது. காதலர்களுக்கு ஏற்றது. ஏனெனில் இரண்டுபேர்தான் பயணம் செய்யலாம். வழியில் யாராவது லிப்ட்

## ஜாலியோ ஜாலி

கேட்டாலும் ஏறுவதற்கு இடமிருக்காது. அதனால் காதலர்கள் தொல்லையே இல்லாமல் (கரடிகளின் குறுக்கீடு இல்லாமல்) பயணம் செய்யலாம். இதன் வேகம் மணிக்கு 80 கிலோ மீட்டர்.




## சென்றது– வந்தது

← வான்வெளியில் பறக்கும் விமானங்கள் விபத்தில் சிக்குவதும், காணாமல் போவதும் நமக்கெல்லாம் சாதாரண செய்திகள். அதனால் விமானப் பயணம் என்பதே ஆபத்தானதாக மாறிவிட்டது. அதற்காக விஞ்ஞான தொழில்நுட்பம் மீது நம்பிக்கை இழக்கத் தேவையில்லை.

படத்தில் இருப்பது விண்வெளிக் கலம். 18நாட்கள் விண்வெளியில் பறந்து விட்டு பத்திரமாகத்திரும்பி வந்துவிட்டது. விண்வெளியில் அதிக நாட்கள் பறந்த முதலாவது விண்கலம் இதுதான். விமானம்போல வடிவமைத்து இதனை அனுப்பியது அமெரிக்கா. கடந்த டிசம்பர் 7ம் திகதி அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள கென்னடி தளத்தில் விண்கலம் தரை இறங்கும் காட்சிதான் இது. இந்த விண்கலத்தின் பெயர்: கொலம்பியா. ●



படிப்பகம்

www.padippakam.com

# ஸ்ரீதேவியின் பணக்கார கணவர் தாயாகப் போகிறார் ஸ்ரீதேவி

ஸ்ரீதேவி-போனிகபூர் காதல் சினிவிசிட் வாசகர்கள் அறிந்த பழைய செய்தி. காதலும் இல்லை ஒரு கத்தரிக்காயும் இல்லை என்று மறுத்துக் கொண்டிருந்தார் ஸ்ரீதேவி.

கடந்த ஆண்டு ஜூன்மாதம் ஸ்ரீதேவிக்கும் போனிகபூருக்கும் திருமணம் நடந்து விட்டது. செய்தி வெளியே தெரிந்தால் 'இமேஜ்' போய்விடும் என்று பத்திரமாக மறைத்து வைத்திருந்தனர்.

இப்போது மறைக்க முடியாத சூழ்நிலை. அதாகப்பட்டது ஸ்ரீதேவி ஏழுமாத கர்ப்பிணியாக இருக்கிறார். அதனால் சமீபத்தில் பத்திரிகையாளர்களை அழைத்து உண்மையை வெளியிட்டார் ஸ்ரீதேவி.

ஸ்ரீதேவிக்கும் போனி கபூருக்கும் 15 வருட காலப் பழக்கம். இந்திப் பட உலகில் ஸ்ரீதேவிக்கு பல பட வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தவர் போனிகபூர். அதனால் போனி கபூருக்கு நெருக்கமாக இருந்தார் ஸ்ரீதேவி.

போனிகபூர் பிரபல படத் தயாரிப்பாளர். இந்தி நடிகர்கள் அனில்கபூர், சஞ்சய்கபூர் ஆகியோரது சகோதரர்.

ஸ்ரீதேவியை கதாநாயகியாக வைத்து பல படங்களை தயாரித்தவர் போனிகபூர்.

ஸ்ரீதேவி-அனில்கபூர் நடித்த இந்தியில் பிரமாண்டமாக தயாரிக்கப்பட்ட படம், 'ரூப் கிராணி சோரொன் கிராஜா' இந்தியில் முதன் முதலில் பெரும் செலவில் தயாரிக்கப்பட்ட படமும் அதுதான். படத்தை தயாரித்தவர் போனிகபூர். படம் வெளியாகி படுதோல்வி கண்டது. ஸ்ரீதேவிக்காக நஷ்டத்தை தாங்கிக் கொண்டார் போனிகபூர்.

போனிகபூர் திருமணமானவர். இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

ஸ்ரீதேவி முன்னர் விஜய் அமிர்தராஜ் சகோதரர்களுடனும் நெருக்கமாக இருந்தவர். தமிழகத்தைச் சேர்ந்த விஜய் அமிர்தராஜ் சகோதரர்கள் தற்போது ஹொலிவூட் பட உலகில் தயாரிப்பாளர்களாக கொடி கட்டிப் பறக்கிறார்கள்.



அம்பிகா-சத்யராஜ்-கோவைசரளா
படம்-பெரிய மனுஷன்

# மினி சினி

* பாலுமகேந்திரா இயக்கத்தில் விக்னேஷ்-கரண் இணைந்து நடிக்கும் 'ராமன் அப்துல்லா' படத்தில், முஸ்லிம் பெரியவராக முக்கிய வேடமொன்றில் நடித்து வருகிறார் சிவகுமார்.

* கார்த்திக் நடிக்கும் 'கூட்டாளி' படத்திலிருந்து ஈஸ்வரிராவை நீக்கி விட்டு ஹீராவை நாயகியாக ஒப்பந்தம் செய்தார்கள். இப்போது அந்தப் படத்தில் ஹீராவும் நடிக்கவில்லை.

* தமிழில் 'பெரும்புள்ளி', 'புதுப்பாட்டு', 'மாநகர க... நடித்தவர் சுமா ரங்கநாத். இவர் நடித்த மூன்று பட... ரங்கநாத் என்ற பெயரில் இந்திப்படங்களில் நடித்து ...

* தெலுங்கில் சுமார் ஒரு வருடமாக புதிய படங்கள்... தற்போது 'உதயம்' புகழ் ராம் கோபால் வர்மா இயக்... ஊர்மிளாவும், ஷில்பா ஷெட்டியும் சிரஞ்சீவிக்கு ஜோடி...

* இயக்குநரும், வசனகர்த்தாவுமான லியாகத் அலிகா... முதலமைச்சராகவும், ராம்கி நடிக்கும் 'தினமும் என்னை... நடித்து வருகிறார்.

* மலையாளத்தில் முன்னணியில் இருக்கும் மோகன்... படத்தில் நடிக்கவுள்ளார்கள். இப்படத்தை பிரபல ... இயக்கவுள்ளார்.

* 'பூஞ்சோலை', 'சின்னராமசாமி பெரியராமசாமி', 'ப... ரஷிகா, கன்னடத்தில் 3 படங்களிலும், மலையாளத்திலும்... வருகிறார்.

* 'மீரா' படம் மூலம் இ... அதன் பின்னர் கமல்-... படத்தை இயக்கினார்... திட்டமிட்டுள்ளார்.

* தேவாவின் இசை... முரளி முதன்... நடிக்கும் 'பி... பாடியுள்ளா...

* 'நேசப்... படங்க... கதாந... பட... ே...

## சங்கவிக்கு நெத்தியடி

கவர்ச்சி நாயகி சங்கவி ஹிந்திப் படமொன்றில் நடிக்க ஒப்பந்தமான கதை ரு சிகரமானது: எனினும் படு படு இரகசியமானது.

ஹிந்திப் படம் என்றதும் யார் தயாரிப்பது? யார் இயக்குவது? என்றெல்லாம் கேட்காமல் ஓ.கே சொன்னாராம் சங்கவி.

மும்பாய்க்கு வரச் சொன்னார்கள். சங்கவியும் பறந்து போனார். நட்சத்திர விடுதியில் ரூம் போட்டார்கள்.

ஒரு பிரபல நடிகரின் ஜோடியாக சங்கவியை நடிக்கவைக்கப்போவதாக சொல்லப்பட்டது. சங்கவிக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. குறிப்பிட்ட பட இயக்குநரை மசியவைத்தால்தான் சங்கவி நாயகியாக முடியும் என்ற விஷயத்தையும் காதோடு சொன்னார்களாம்.

ஹிந்திப் பட வாய்ப்பு. அதுவும் பிரபல ஹீரோவுடன். விடுவாரா சங்கவி. எதற்கும் தயார், அந்த இயக்குநரை என்ன பாடு படுத்துகிறேன் பாருங்கள், அவராச்சு, நானாச்சு என்று சம்மதம் தெரிவித்தாராம்.

குறிப்பிட்ட இயக்குநரும் சங்கவியும் சந்தித்தனர். மகிழ்ச்சியாக எல்லாம் பரிமாறிக்கொண்டனர் மூன்று நாட்களின் பின்னர் சென்னைக்கு திரும்பிச் செல்லுங்கள். எல்லாம் ஓ.கே. விரைவில் அழைப்போம்! என்று சங்கவியை வழியனுப்பி வைத்தார்களாம்.

அதன் பின்னர் அழைப்பே வரவில்லையாம்.

திட்டம் போட்டு ஏமாற்றி விட்டார்கள் என்பது சமீபத்தில்தான் தெரிந்ததாம். ஓசியில் கலைச் சேவை செய்ய வைத்து விட்டார்கள் பாவம் சங்கவி.



நக்மா
படம்-அரவிந்தன்

# மினி விசிட்

## பறந்து வந்த அம்பிகா பழசை மறக்காத சத்யராஜ்

தமிழ்நாட்டில் விபசாரத் தொழிலில் கொடிகட்டிப் பறந்தவன் 'ஆட்டோ சங்கர்'. தூக்கில் தொங்க முன்னர் ஆட்டோ சங்கர் சில இரகசியங்களை வெளியிட்டான்.

பிரபல அரசியல் தலைவர்கள் மற்றும் பெரும் புள்ளிகளுக்கு நடிகைகளை விநியோகித்த இரகசியமும் அதில் அடக்கம்.

அப்போது பிரபலமாக இருந்த அம்பிகா, ராதா சகோதரிகள் 'ஆட்டோ சங்கர்' மூலமாக பெரும் புள்ளிகளை மகிழ்வித்தனர். அரசியல்வாதிகள், பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலரது தெரிவு சகோதர நடிகைகள்தான்.

பிரபல தலைவர் ஒருவர் நோயில் வீழ்ந்தபோது அவருக்கு சிகிச்சை வழங்க வெளிநாட்டில் இருந்து வைத்தியர்கள் வந்தனர். அந்த வைத்தியர்கள் சிலரை மகிழ்விக்கவும் இரு நடிகைகளும் உபயோகப்படுத்தப்பட்டனர்.

பின்னர் மார்க்கெட் சரிந்த நிலையில் பிரபல தொழிலதிபர்களை மணந்துகொண்டு இருவருமே திரையுலகைவிட்டு ஒதுங்கியிருந்தனர்.

இப்போது அம்பிகா மீண்டும் நடிக்க வந்திருக்கிறார். முன்னர் தன்னோடு நகமும் சதையுமாக இருந்த நடிகர்கள் கைகொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் அமெரிக்காவில் இருந்து பறந்து வந்தார் அம்பிகா.

சத்யராஜ் மட்டுமே பழசை மறக்காமல் கைகொடுத்து உதவியிருக்கிறார். 'பெரிய மனுசன்' படத்தில் தனது ஜோடியாக நடிக்க வைத்திருக்கிறார்.

## பழம் தோல்வி

பாக்யராஜின் 'ஞானப்பழம்' படம் படுதோல்வி கண்டுள்ளது. அடுத்து வரப்போகும் படம் 'வேட்டிய மடிச்சுக்கட்டு'. நக்மாதான் நாயகி. வேட்டிய மடிச்சுக் கட்டும் பாக்யராஜ் நக்மா புண்ணியத்தில் அசத்துவாரா தெரியவில்லை? இந்தப் படமும் பப்படமானால் ஹிந்தியில் கவனம் செலுத்தப் போகிறாராம் பாக்யராஜ்.

## ராசியில்லாத ஆண்டு

1996 சத்யராஜ், பிரபு, சரத்குமார், பிரபுதேவா ஆகியோருக்கு ராசியில்லாத ஆண்டு. சத்யராஜ் நடித்த 'சிவசக்தி', 'சேனாதிபதி' இரண்டும் நூறு நாட்களை தொடவே இல்லை.

பிரபுவின் 'பரம்பரை', 'பாஞ்சாலங்குறிச்சி', 'சிவசக்தி மூன்றிலும் பரம்பரை மட்டுமே நூறுநாட்கள் ஓடியது.

பிரபுதேவாவின் 'லவ் பேட்ஸ்', 'மிஸ்டர் ரோமியோ' இரண்டும் தோல்விப்படங்கள். சரத்குமார் நடித்த மகாபிரபு பகல் காட்சியாக ஓடி நூறு நாளைத் தொட்டது. 'நேதாஜி' படு தோல்விப்படம்.

விஜயகாந்த் படங்களில் 'தமிழ்செல்வன்' 'தாயகம்' இரண்டும் சுமார் ரகம். 'அலெக்ஸாண்டர்' வெற்றிப் படம். அர்ஜுன் நடித்த 'சுபாஷ்', 'செங்கோட்டை' இரண்டும் தோல்வி.

கமல் நடித்த 'இந்தியன்', 'அவ்வைசண்முகி' இரண்டும் வெற்றிப்படங்கள். கமல் தவிர ஏனைய முன்னணிக் ஹீரோக்களுக்கு '96 ராசியில்லாத ஆண்டு.



ராம்கி-சங்கவி
படம்-தினமும் என்னைக் கவனி

## 'காதல் பள்ளி' தயாராகிறது

'காதல் கோட்டை' பட வெற்றிக்குப் பின்னர் காதல் என்ற வார்த்தைக்கு ஏகப்பட்ட மவுசு. காதல் என்ற வார்த்தையுடன் இணைத்து பெயர் சூட்டினால்தான் படம் ஹிட்டாகும் என்பது கடவுள் நம்பிக்கைமாதிரி ஆகிவிட்டது.

'காதல் கொடி', 'காதல் மாளிகை', 'காத்திருந்த காதல்', 'காலமெல்லாம் காதல் வாழ்க', 'காதலிசம்' என்று தொடரும் பெயர்ப் பட்டியலில் புதிதாக ஒரு படம், 'காதல் பள்ளி'.

'சூரியன்', 'இந்து', 'திரு மூர்த்தி' ஆகிய வெற்றிப் படங்களை இயக்கிய பவித்ரன் இயக்கும் படம்தான் 'காதல் பள்ளி'. கதாநாயகன் விக்னேஷ், கதாநாயகி சுவலட்சுமி. வினுச்சக்கரவர்த்தி, மனோரமா, விசித்ரா, ராணி ஆகியோரும் நடிக்கவுள்ளனர். இசை: தேவா. பாடல்கள்: வைரமுத்து.

"மெசபடோமியா.. மலரே மலரே
வா பக்கம்வா அழகு டோக்கியோ
சிலையே சிலையே அன்பே வா.." என்றொரு பாடலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காதல் என்றால் சோகம் என்ற நினைப்பை பொடிப் பொடியாக்கப் போகிறாராம் பவித்ரன். காதலர்களுக்கு நற்செய்திதான்.

## ஸ்மைல்

ஹீரோ, வில்லன், குண... எந்த வட்டத்துக்குள்ளும் ... என்று சொல்பவர் பிகாஷ்...

மணிரத்னத்தின் 'இருவ... கருணாநிதியாக நடித்திரு... பேசப்படுபவர் பிரகாஷ்ரா... கலக்கல் வில்லனாக நடித்...

பிரகாஷ்ராஜ் கதாநா... 'கல்கி', 'பிறந்தநாள்' உட்... கதாநாயகனாக நடித்துக் ...

பிரகாஷ்ராஜ் புதிதா... படத்தின் பெயர்: 'ஸ்மை... நகைச்சுவைப் படமாகத் ... பிரகாஷ்ராஜ்தான் கதா... இன்னமும் முடிவாகவில்...

சின்னத்திரை பட்டிமன்... மான திண்டுக்கல் லியோ... நடிக்கிறார்.

ஆர்.வி.உதயகுமாரிடம் ... கே.ராதாமோகன் இப்படத்...



படிப்பகம்

www.padippakam.com

ாவல்' ஆகிய படங்களில் கதாநாயகியாக
ங்களும் தோல்வி. இப்போது இவர் சமன்
ருகிறார்.

எதிலும் நடிக்காமல் இருந்த சிரஞ்சீவி,
ம் புதிய படமொன்றில் நடிக்கிறார். இதில்
யாக நடிக்கின்றனர்.

் மம்முட்டி நடிக்கும் 'அரசியல்' படத்தில்
க் கவனி' படத்தில் அரசியல்வாதியாகவும்

ாலும், சுரேஷ் கோபியும் இணைந்து ஒரு
மலையாள இயக்குநர் ராஜீவ் அஞ்சல்

கவத்சிங்' ஆகிய படங்களில் நடித்து வரும்
, தெலுங்கிலும் தலா 2 படங்களிலும் நடித்து

யக்குநரான ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம்,
ர்ஜுன் இணைந்து நடித்த 'குருதிப்புனல்'
. இவர் அடுத்து 2 படங்களை இயக்கத்

க்குழுவில் இருக்கும் தேவாவின் சகோதரரான
முறையாக பிரகாஷ்ராஜ் கதாநாயகனாக
றந்தநாள்' படத்தில் பாடல் ஒன்றைப்
ர்.

', 'வாய்மையே வெல்லும்' ஆகிய
ளைத் தொடர்ந்து அருண்குமார்
ாயகனாக நடிக்கும் 'முத்துமணி'
த்திலும் ஜோதிலட்சுமியும்,
ஜாதிமீனாவும் இணைந்து
நடனமாடுகின்றனர்.

**முகப்பில்**

ரக்ஷனா

அரவிந்தசாமி | ரமேஷ் அரவிந்த்



சரண்ராஜ்-டாலி
படம்-ரம்போ ராஜா ரிவோல்வர் ராணி

# அப்பாஸ் ரசிக்கும் நடிகை
## மீசை வைக்க ஆசை இல்லை

அப்பாஸிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவரது பதில்கள்.

**கே: தமிழ்த் திரையுலகில் தங்களை மிகவும் கவர்ந்த நடிகர் நடிகை யார் யார்?**

அ: வித்தியாசமான ஸ்டைலுக்காக ரஜினியையும், பாத்திரத்தை பரிமளிக்கச் செய்வதால் கமலையும், சண்டைக் காட்சிகளுக்காக விஜயகாந்த்தையும், இளமை வடியும் முகத்துக்காக அரவிந்தசாமியையும் பிடிக்கும். நடிகைகளில் குஷ்பு, கவுதமி இருவரையும் பிடிக்கும்.

**கே: 'என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள்' என்று ஐஸ்வர்யாராய் உங்களைக் கேட்டால்.....?**

அ: இன்ப அதிர்ச்சியில் உறைந்து போய்விடுவேன். நான் அவரது பரம ரசிகன்.

**கே: தொடர்ந்து காதல் படங்களில்தான் நடிப்பீர்களா?**

அ: இப்போது காதல் படங்களில்தான் கவனம் செலுத்துவேன். கொஞ்ச நாள் சென்ற பின்னர் எல்லாவிதமான பாத்திரங்களிலும் நடிப்பேன். அதில் ஆக்ஷனும் ஒன்றாக இருக்கும்.

**கே: நீங்கள் ஏன் மீசை வைப்பதில்லை?**

அ: இளமையான என் முகத்தை 'மெய்ன்டெய்ன்' செய்வதற்காகத்தான் நான் மீசை வைப்பதில்லை. படத்திற்காக என்று இல்லை. எப்போதுமே நான் மீசை வைப்பது கிடையாது.

**கே: ரஜினியுடன் இணைந்து நடிப்பீர்களா?**

அ: எனக்கும் ஆசைதான்! நர்ன் நடிக்கும் 'பூச்சூடவா' படத்தை அவர்தான் 'கிளாப்' அடித்து தொடக்கிவைத்தார்.

**கே: சினிமாவில் வித்தியாசமாக ஏதாவது செய்யப்போகிறீர்களா?**

அ: கண்டிப்பாகச் செய்வேன். 'லவ் போய்' 'சாக்லெட் போய்' என்று இப்போது பெயர் வாங்கி இருக்கிறேன். நன்றாக தமிழையும் நடிப்பையும் கற்று, அதன் பின்னர் வித்தியாசம் காட்டுவேன்.

**கே: ஷங்கர் படத்தில் நடிக்க ஏன் மறுத்தீர்கள்?**

அ: அந்தப்படத்திற்கு (ஜீன்ஸ்) தேதி கொடுக்கவேண்டுமானால், ஏனைய படங்களை நிராகரிக்க வேண்டும். அதனால்தான் நடிக்க முடியவில்லை.

**கே: நடிக்க வராவிட்டால்?**

அ: மொடலிங் செய்து கொண்டிருப்பேன். ரி.வி. தொடர்களில் நடித்துக் கொண்டிருப்பேன்.

**கே: உங்கள் உயரம் என்ன?**

அ: 5அடி 11 அங்குலம். வயது: 21. படிப்பு: பிகொம்.

**கே: பெண்கள் என்றால் பிடிக்காது என்று ஒரு பேட்டியில் சொல்லியிருந்தீர்களே?**

அ: ஆண்களை ஏமாற்றும் நயவஞ்சகப் பெண்களைத்தான் பிடிக்காது என்று சொன்னேன்.

**கே: படத்தில் சொந்தக் குரலில் பாடுவீர்களா?**

அ: பாத்ருமில்கூட நான் பாடுவது இல்லை.

**கே: காதலில் வெற்றி இனிமையானதா? தோல்வியில் காணும் சுகம் இனிமையானதா?**

அ: காதலில் தோற்றுப்போனவன் நான். அந்த சோகமான உணர்வை நான் ரசித்தேன். அந்தத் தோல்வி எனக்குள் ஒரு எழுச்சியை உண்டாக்கியது உண்மை.

# நக்மா 40 இலட்சம்

தமிழ்ப்பட உலகில் தற்போது அதிக சம்பளம் வாங்கும் நடிகை ரம்பாதான். இன்றைய நிலவரப்படி ரம்பா சுளையாக வாங்குவது அறுபது இலட்சம்.

அடுத்த இடத்தில் இருப்பவர் நக்மா. அவரது சம்பளம் நாற்பது இலட்சம். குஷ்பு பத்து இலட்சம் முதல் பன்னிரண்டு இலட்சம் வாங்குகிறார். ரோஜா பதினைந்து முதல் இருபது இலட்சம் வாங்குகிறார். மீனா முப்பது இலட்சம் முதல் முப்பத்தைந்து இலட்சம் கேட்கிறார்.

இயக்குநர்கள் பிரபலமானவர்களாக இருந்தால் கொஞ்சம் குறைத்துக் கொள்வார்கள்.

# புதிய நாயகன் ராஜூ சுந்தரம்

ஷங்கர் இயக்கும் 'ஜீன்ஸ்' படத்தில் இரண்டு ஹீரோக்கள். ஒருவர்: பிரசாந்த். இன்னொருவர் ராஜு சுந்தரம். பிரபுதேவாவின் சகோதரர்களில் ஒருவர்தான் ராஜு சுந்தரம். இதுவரை 250 படங்களுக்கு மேல் நடன இயக்குநராக பணியாற்றியவர். சில படங்களில் பாடல் காட்சிகளில் தோன்றி ஆடியுமிருக்கிறார்.

'ஜீன்ஸ்' படத்தில் நடிப்பதால் ராஜு சுந்தரத்தின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்று ஒரு நம்பிக்கை. அதனால் அவரை இப்போதே தமது படத்தில் கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தம் செய்துவிட்டது சூப்பர் குட் பிலிம்ஸ்.

சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரிப்பில் ராஜு சுந்தரம் கதாநாயகனாக நடிக்கும் படம்: 'ஜீவன்'. கதாநாயகியாக மகேஸ்வரி நடிக்கிறார். கவுண்டமணி. விஜயகுமார் நிழல்கள் ரவி, ஜோதி மீனா ஆகியோரும் நடிக்கின்றனர்.

இயக்கம்: பி.உத்தமன். இசை: யுவன் சங்கர் ராஜா. ஒளிப்பதிவு: அப்துல் ரகுமான். சண்டைப் பயிற்சி: கனல் கண்ணன். பாடல்கள்: வாலி.



ராமராஜன்-தேவயானி
படம்-விவசாயி மகன்

"ஓ!... ஓ!... எத்தனை அழகு
இருபது வயதினிலே
லவ்! லவ்! எத்தனை கனவு
எங்கள் கண்களிலே
ஜிம்! ஜிம்! எத்தனை மலர்கள்
பருவத்தின் தோட்டத்திலே!"



வெங்கட் பிரபு-ரஸிகா
படம்-பூஞ்சோலை

# ...ப்ளீஸ்

...சித்திர நடிகர் என்று
...சிக்க விரும்பவில்லை
...ராஜ்.
...ர்' படத்தில் கலைஞர்
...பதால் பரபரப்பாகப்
...ஜ். 'ஆசை' படத்தில்
...வரும் அவர்தான்.
...கனாக நடித்த படம்
...ட பல படங்களில்
...கொண்டிருக்கிறார்.
ஒப்பந்தமாகியுள்ள
...ப்ளீஸ்'. முழு நீள
...தயாராகப்போகிறது.
...ாயகன். கதாநாயகி
...
...ங்கள் மூலம் பிரபல
... பிரதான வேடத்தில்

...தவியாளராக இருந்த
...த இயக்கப்போகிறார்.

# தெலுங்கிலும் ஹிட்டான படங்கள்

தெலுங்குப் படங்கள் தமிழில் மொழி மாற்றப்பட்டு வெற்றி பெற்றுள்ளன. கடந்த ஆண்டு தமிழ்ப் படங்கள் பல தெலுங்கில் மொழிமாற்றப்பட்டு ஒரு கலக்கு கலக்கியிருந்தன.

ரஜினியின் 'முத்து' அதே பெயரில் மொழிமாற்றப்பட்டு நூறு நாளைத் தாண்டி ஓடியது. காதல் கோட்டை' படம்' பிரேம லேகா' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு நூறுநாட்களைத் தாண்டி இப்போதும் ஓடிக்கொண்டிருக்கிறது. 'காதல் தேசம்' படம் 'பிரேமதேசம்' என்ற பெயரில் வெளியாகி ஓடிக் கொண்டிருக்கிறது. தமிழைவிட தெலுங்கில் 'காதல் தேசம்' படத்திற்கு பயங்கர வரவேற்பு.

கடந்த ஆண்டு தமிழ்ப் பட உலகில் ரஜினி ரசிகர்களுக்கு ஏமாற்றம். ரஜினியின் படம் ஒன்றுகூட வரவில்லை. அதே போல தெலுங்குப்பட ரசிகர்களுக்கும் ஒரு ஏமாற்றம். தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவி நடித்த ஒரு படம்கூட வெளியாகவில்லை.

# ஹங்கேரி அழகி

'நாட்டுப்புறப் பாட்டு' வெற்றிகரமாக ஓடிய படம். இப்போது 'நாட்டுப்புற நாயகன்' என்ற பெயரில் புதிய படம் ஒன்று தயாராகிறது. படத்தை இயக்குபவர் இராம-நாராயணன். அவர் இயக்கும் 98வது படம் இது.

கதாநாயகனாக செல்வா நடிக்கிறார். கரகாட்டம் ஆடும் பெண்ணாக ஹங்கேரி நாட்டு அழகி ஒருத்தியை அறிமுகம் செய்யப் போகிறார்கள். மும்பாய் கசந்து விட்டதா?

# ராஜாவின் ஆல்பம்

இசைஞானி இளையராஜா தனியான இசைக் கசட்டுக்களை (ஆல்பம்) தயாரிப்பதில் ஆர்வம் செலுத்துகிறார்.

விரைவில் வரப்போகும் இளையராஜாவின் ஆல்பம், '24 அவர்ஸ் இந்தியா'. இதில் ஒவ்வொரு தீமாக எடுத்து சிறப்பாக இசை கொட்டியிருக்கிறாராம் இளையராஜா.


படிப்பகம்

# யோகம் நல்ல யோகம்

## உச்சி முதல்– உள்ளங்கால்வரை

(சென்றவாரத் தொடர்ச்சி)

### பற்கள்

பற்கள் மனித குலத்திற்கு மிகவும் முக்கியமானவை. மனிதன் பேச, உண்ண மட்டுமல்ல–முகத்தின் அழகை எடுத்துக்காட்ட. பல் தேவை.

'பல்லுப் போனால் சொல்லுப் போச்சு' என்ற பழமொழியும் உண்டு. இந்தப் பற்களைக் கொண்டு மனித குணங்களையும், அதிஷ்டத்தையும் சொல்ல முடியும்.

**மஞ்சள் நிறப் பற்கள்:**

மஞ்சள் நிறமான பற்கள் உள்ளவர்கள் சனி பகவானின் ஆதிக்கம் உள்ளவர்கள். இவர்கள் வாழ்வில் தோல்வி, துயரம், எதிலும் தடைகள்.

**வெண்மை நிறப்பற்கள்:**

இவர்கள் சந்திரன் ஆதிக்கம் உள்ளவர்கள். இவர்களுக்கு எதிலுமே வெற்றி. நல்ல இல்லறம் அமையும்.

**சிவப்பு நிறப் பற்கள்:**

இவர்கள் செவ்வாய் ஆதிக்கம் உள்ளவர்கள். இவர்களுக்கு வெற்றி, தலைமைப் பொறுப்பு, சுகம். ராஜயோகம் உள்ளவர்கள்.

**ரோஜா நிறம் கலந்த பச்சைப் பற்கள்:**

அறிவாளிகள், உயர்ந்த பதவி, எழுத்தாளர்கள், வெளிநாட்டுப் பயணம் போவார்கள். காதல் மணம் புரிவார்கள். பெயரும் புகழும் கிடைக்கும்.

**இடைவெளி உள்ள முன் பற்கள்:**

இவர்களுக்கு நல்ல எதிர்காலம்; அதிஷ்டம் உள்ளவர்கள். இவர்கள் வாழ்வில் பல இன்னல்களைச் சந்தித்து வெற்றி காண்பார்கள். இவர்களுக்கு ராஜயோகம் உண்டு. பெரும் பணக்காரர்களுக்கு இப்படி இருக்கும்.

**கூர்மையான பற்கள்:**

இவர்களுக்குப் பொன், பொருள் சேரும். அறிவாளிகள். இவர்கள் இல்லற வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்.

**சொத்தை மற்றும் நீண்ட பற்கள்.**

இவர்கள் ராசியில்லாதவர்கள். இவர்கள் வாழ்க்கையில் தோல்வி, கவலை– வாழ்க்கையே போர்க்களம் போல் இருக்கும். வேலையின்மை, வறுமை, குழந்தைப் பாக்கியம் இன்மை. பெண்களுக்குத் திருமணம் தடையாக இருக்கும். இவர்கள் பிற்பகுதியில் நன்மை அடைவார்கள்.



**உடைந்த சின்னப் பற்கள்**

துன்பம், கவலை, திருமணத்தடை, விபத்து. இவர்கள் இலட்சியம் நிறைவேறாது.

பெரிய–சின்னப் பற்கள்

வாழ்க்கையில் ஏற்ற–இறக்கம். வசந்தம் மெல்ல வரும்.

### மூக்கு

**அகன்ற மூக்கு:**

சீர்திருத்தவாதி, ராஜயோகம் உள்ளவர், பிடிவாத குணம், சந்தோஷம் உள்ள குணம் கொண்டவர்கள்.

**சப்பை மூக்கு:**

மென்மையான இதயம், எளியகுணம், கூச்ச சுபாவம் உள்ளவர்கள். ஆனால் புகழ் பெறும் யோகம் உண்டு.

**நீண்ட நேர்மூக்கு:**

நேர்மையானவர், ஒழுக்கமானவர். உதவி மனப்பான்மை கொண்டவர்.

**வளைந்த மூக்கு:**

இலட்சியவாதிகள், தொழில்திறமை, மதிநுட்பம் கொண்டவர்கள். வளைந்து கொடுக்கும் தன்மை உடையவர்கள்.

### உதடு

**பிறை போல உதடு:**

சுகம், யோகம், நல்ல எதிர்காலம்.

**சிவப்பு நிற உதடு:**

சுகம், கலை, நாட்டியம், இலக்கியங்களில் புகழ் சேரும்.

**மேல் உதட்டைவிட வெளியே நிற்கும் கீழ் உதடு:**

சோம்பேறி, கவனமின்மை, இரக்கமற்றவர்கள்.

**கறுப்பு நிற உதடு:**

இளமையில் கவலை, சோம்பல், அதிஷ்டமின்மை, பிற்பகுதியில் யோகம் உண்டு.

**இரண்டும் சமமான உதடு:**

நன்மை, யோகம், சுகவாழ்வு.

**கீழ் உதட்டைவிட வெளியே நிற்கும் மேல் உதடு:**

பற்றற்ற வாழ்வு. எதிலும் மிகவும் ஆழ்ந்து இறங்கிவிடுவார்கள். ஞானமார்க்கத்தில் ஈடுபாடு மற்றும் கீழ் உதட்டில் மச்சம் இருக்க யோகம் உண்டு.

## ஏட்டிக்குப் போட்டி எதுதான் சரி?

பழமொழிகள் ஒன்றையொன்று தங்களுக்குள்ளேயே வீழ்த்திக் கொள்கின்றன. ஒருவனுடைய வெற்றிக்கு அடிப்படையாக இருக்கும் அதே பழமொழி இன்னொருவனின் தோல்விக்கு அடிப்படையாகவும் அமைந்துவிடுகின்றது. அப்படிச் சில ஏட்டிக்குப்போட்டியான பழமொழிகள் இங்கே தரப்படுகின்றன.



**1. பல எலி கூடினால் மண் எடுக்காது.**
பலர் கூடி இழுத்தால் தேர் தானாக நகரும்.

**2.தயங்கித் தயங்கிச் செயல் புரிபவன் வெற்றியை இழந்து விடுகிறான்.**
பதறாத காரியம் சிதறாது.

**3.கற்றுக்கொள்ள வயதே கிடையாது.**
கிழட்டுப் புலிகளுக்குக் கற்பிக்க முடியாது.

**4.வாள்முனையைவிட எழுதுகோல் வலிமை வாய்ந்தது.**
வார்த்தைகளைவிட செயலுக்குத்தான் வலிமை அதிகம்.

**5.அடக்கமும், அமைதியும் ஆயிரம் பொன் பெறும்.**
வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும்.

**6.கிழ நரியை எளிதாகப் பிடிக்க முடியாது.**
இருக்கிற முட்டாளிலே பெரிய முட்டாள் வயதான மூடன்தான்.

**7.இனம் இனத்தோடுதான் சேரும்.**
எதிர் எதிர் குணமுள்ளவர்கள் எளிதில் ஒட்டிக்கொள்வார்கள்.

**8.கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.**
துஷ்டனைக் கண்டால் தூர விலகு.

**9.விடாத முயற்சி வெற்றியைத் தரும்.**
மணலில் கயிறு திரிக்க நினைக்காதே.

**10.நெருப்பில்லாமல் புகையாது.**
உண்மை தபாலில் போனால், பொய் தந்தியில் போய்ச் சேரும்.

**11.ஈ ஏறி மலை அசையுமா?**
எறும்பு ஊர கல்லும் தேயும்.

**12.குலைக்கிற நாய் கடிக்காது.**
வாய் இல்லாவிட்டால் காகம் தூக்கிக் கொண்டு போய்விடும்.

**13.அப்பனுக்கு அடங்காதவன் யாருக்கும் அடங்கமாட்டான்.**
வீட்டில் அடங்காதவன் ஊரில் அடங்குவான்.

**14.உண்மையைச் சொல்லிக் கெட்டாருமில்லை, பொய்யைச் சொல்லி வாழ்ந்தாருமில்லை.**
உண்மையைச் சொன்னால் உறவற்றுப் போகும்.

**15. மூத்தோர் வார்த்தைகளான பழமொழிகளை மீற வேண்டாம்.**
புத்திசாலிகள் பழமொழியை உருவாக்குகிறார்கள், முட்டாள்கள் அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

## நம்பலாமா நாங்களும்?



### தாம்பத்திய சுகம் தான் திருமண வாழ்வின் முக்கிய அம்சம்!

அப்படிச் சொல்லி விட முடியாது. திருமண வாழ்க்கையில் இணையும் கணவன்– மனைவி இருவரும் நண்பர்களாகத் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் புரிந்துகொண்டு மகிழ்வாய் இருக்க அநேக வழிகள் உண்டு. அப்படிப்பட்ட வழிகளில் 'செக்ஸு'ம் ஒன்று. ஆனால் அதையொட்டித்தான் அவர்களின் இல்லற வாழ்வின் மகிழ்ச்சி இருக்க வேண்டும் என்பதில்லை.

### அவள் ஓர் அபூர்வமான குறிஞ்சி மலர்

பெண்களில் அழகும், அறிவும் மிக்க பெண்ணை பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூத்திடும் குறிஞ்சிமலரைப் போன்ற அபூர்வமானவள் என்று கவிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். குறிஞ்சிமலர் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கொரு முறை பூப்பதால் அப்படிக் கூறுகிறார்கள். ஆனால் குறிஞ்சி மலரை விட அபூர்வமான மலர் ஒன்று உண்டு. அதன் பெயர் கோக்டஸ் மலர். ஐம்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் இந்த மலர் இந்து சமுத்திரத்தில் உள்ள ரியூனியன் தீவுகளில் காணப்படும்.

## சமைப்போம் சுவைப்போம்

### தக்காளி தோசை

தொகுத்துத் தருவது சுகந்தினி

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| புழுங்கல் அரிசி | –2 டம்ளர் |
| தக்காளி | – 6 |
| வெங்காயம் | – 10 |
| மிளகாய் வற்றல் | – 10 |
| பெருங்காயம் | – சிறிதளவு |
| கறிவேப்பிலை | – சிறிதளவு |
| கடுகு | – கொஞ்சம் |
| உழுத்தம்பருப்பு | – கொஞ்சம் |
| கடலைப்பருப்பு | – கொஞ்சம் |
| உப்பு | – அளவாக |

**செய்முறை:**

அரிசியை ஊறவைத்து, கிரைண்டரில் தக்காளி, மிளகாய், பெருங்காயம், உப்பு எல்லாவற்றையும் போட்டு மைய அரைக்க வேண்டும். (தண்ணீர் சேர்க்கத் தேவையில்லை. தக்காளி போட்டு அரைப்பதால் அதில் நீர் சேர்ந்துவிடும்) சின்ன வெங்காயத்தை பொடியாக அரிந்து கொள்ளவும். கடுகு, உழுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு ஆகியவற்றை எண்ணெயில் பொரித்து அரைத்த மாக்கலவையில் சேர்க்கவும். அதனுடன் அரிந்த வெங்காயம், கறிவேப்பிலையைத் தாளித்துக்கொண்டு அதையும் மாவில் கொட்டவும். மாவில் தண்ணீர் கொஞ்சம் சேர்த்து தோசை ஊற்றவும். தோசை ஒரேஞ்ச் நிறத்துடனும், நல்ல வாசனையுடனும் இருக்கும். தேங்காய்ச் சட்னியுடன் சேர்த்துச் சாப்பிட சுவையோ சுவை.


## லேடீஸ் ஸ்பெஷல்

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
### வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | யசிந்தா பஞ்சலிங்கம் |
| | 463/5, 1ம் கட்டை, ஹொரவப்பொத்தானை வீதி, வவுனியா. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

### பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BC

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: **15-02-1997**

அனுப்பவேண்டிய முகவரி– 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## நம்பர் 13ம் தப்பான நம்பிக்கைகளும்!

மனிதர்களுக்கு எதற்கெடுத்தாலும் பயம். பலருக்கு இருட்டைக் கண்டால் பயம். சிலருக்கு வெளிச்சத்தைக் கண்டால் பயம்.

எண்கணிதம் பார்க்கும் அனைவருக்கும் 'பதின்மூன்றாம் நம்பர்' என்றால் பயங்கர பயம். காரணம் அது இராசியில்லாத எண் என்று நம்பப்படுவதுதான்.

பதின்மூன்றாம் நம்பரைக் கண்டு பயப்படுவதற்கு 'டிரிஸ்கேப்டெகா போபியா' என்று பெயர். ஹோட்டல்களில் 13ம் எண் உள்ள அறையைத் தவிர்த்து விடுகின்றார்கள். பல தங்கும் இடங்களில் 12க்குப் பின் 129அல்லது 14 என்று தாவி விடுகிறார்கள்.

பதின்மூன்றாம் நம்பர் பயங்கரமானது என்பதற்குப் பழங்கால வரலாற்றைச் சிலர் மேற்கோள் காட்டுகின்றார்கள்.

பண்டைய பாபிலோன் நகரில் நடைபெறும் மதச் சடங்கில் 13 பேரைத் தேர்ந்தெடுத்து, கடவுளிடம் பிரார்த்தனை செய்யச் சொல்வார்கள். இந்தச் சடங்கின் போது 12 பேர் ஒருபுறமும், ஒருவர் தனித்து இருந்தும் பிரார்த்தனை செய்வார்கள். பிறகு தனியே அமர்ந்திருப்பவரைச் சடங்கு முடிவில் பலி கொடுத்து விடுவார்கள்.

இதே போல் இயேசு கிறிஸ்துவுடன் கடைசி விருந்தில் கலந்து கொண்டவர்கள் 13 பேர் ஆவர். இவர்களில் யூதாஸ் என்பவன் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான்.

இதனால் சில மேலை நாடுகளில் 13ம் எண் இராசியில்லாத, துரதிஷ்ட எண்ணாக மாறிவிட்டது. அதுவும் அந்த மேலை நாட்டவருக்கு வெள்ளிக்கிழமை அதிஷ்டமில்லாத நாள். போதாதற்கு 13ம் தேதி வெள்ளிக்கிழமையாக வந்துவிட்டால் அவர்கள் நடுங்கி விடுகிறார்கள்.

> மனதில்தான் எத்தனை எத்தனை மாற்றங்கள், எண்ணங்கள்! மனம் விந்தையானது. ஆழம் காண முடியாதது. மனதில் பாரம் வந்துவிட்டால் 'மூட் அவுட்'டாகிவிடுகின்றோம். கவலைகள் மட்டுமல்ல, சில தவறான நம்பிக்கைகளும் கூட மனதுக்கும் பாரம்தான்.

ஐரோப்பிய நாடுகளில் இந்த நாட்களில் எதுவும் செய்யமாட்டார்கள். அதுவும் (மூட நம்பிக்கைகளை ஒழிக்க வேண்டிய) மருத்துவர்கள் அன்று அநேகமாக கிளினிக்குகளைத் திறப்பதில்லை. அப்படியே திறந்தாலும், பொது மக்கள் யாரும் செல்வதில்லை.

1970ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 'அப்பல்லோ 13' செயற்கைக் கோள் விண்ணில் ஏவப்பட்டது. இது வெற்றிகரமாக செயற்படவில்லை. பல தினங்கள் விஞ்ஞானிகளை அலைக்கழித்தது. ஒரு வழியாக 3 விஞ்ஞானிகளுடன் 'அப்பல்லோ 13' தரையிறக்கப்பட்டது. எனவே அறிவியல் அறிஞர்களிடமும் பதின்மூன்று மோசமான எண் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பயம் குறித்து இங்கிலாந்து மருத்துவ இதழ் ஒன்று ஆய்வு நடத்தியுள்ளது. சாதாரண நாட்களைவிட 13ம் திகதிகளில் அதுவும் வெள்ளிக்கிழமைகளில் 50 சதவீதம் விபத்துக்கள் அதிகமாக நடந்துள்ளதாக இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்துக்குக் காரணம் நமது மனம் மற்றும் பயம் என்றால் அதற்கு மிகையில்லை. 'இன்று 13ம் திகதி. அதுவும் வெள்ளிக்கிழமை– விபத்துநாள்– விபத்து நடக்கும்' என்று எண்ணிச் செயற்பட்டால் அன்று விபத்து 100 சதவீதம் நடந்துதான் தீரும். காரணம் மனிதனின் செயல்கள் அனைத்தும் அவனின் நம்பிக்கையின் அடிப்படையில்தான் நடக்கின்றன. எனவே நல்லதே நினைத்தால் நல்லதே நடக்கும்.

## பின்னால் இருக்கும் பெண்மணிகள்



எந்தவொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள் என்பார்கள். படத்தில் இருப்பவர்களுக்கும் அது பொருந்தும். இந்திய கிரிக்கெட் வீரர்களின் துணைவிகள்தான் இவர்கள்.

(இடமிருந்து வலமாக) திருமதி மொங்சியா, திருமதி அஞ்சலி டெண்டுல்கர், திருமதி மதன்லால், திருமதி சங்கீதா அசாருதீன்.

# ரமழானே!

பிறைக் கீற்றுடன் வந்து
பிறப்பெடுத்த ரமழானே!
-o-
புழுதியைக் கிளப்பும்
பயங்கரக் காற்றுகளை
உன் கரங்களால்
பொத்திக் கொண்டு போவாயா?
-o-
சதுகுகளின் மத்தியிலிருந்து
வசந்தங்களை
வரவழைத்துத் தருவாயா?
-o-
சாத்தானின்
சங்கமங்களை
நீயாவது
சீர்குலைக்க மாட்டாயா?
-o-
இரு கரமேந்திப்
பிரார்த்தனைகளால்
போற்றிப் புகழுகிறோம்;
பரிசாக எதைக் கொடுப்பாய்?
ஒரு சொட்டு சமாதானம்?
இல்லை,
ஒரு துளியேனும் அமைதி?
-o-
நற் செயல்களையெல்லாம்
நாம் உனக்காகவே
நன் கொடையாக்குகிறோம்;
உலகுக்கு நீ எதைத் தருவாய்?
பாலைவன மனங்களுக்கிடையே
ஓர் அன்பு ஊற்று...?
காய்ந்த வாழ்வுக்கு ஓர்
கருணை மழை...?
-o-
உலகுக்கு-நீ
சாந்தியைச்
சுமந்து வருகிறாயாம்;
ஆண்டுகளின்
அருகுகளினூடாக
குழப்பமும் அறிவருகிறதே!
-o-
ஒழுக்கம் போதிக்க-நீ
ஒவ்வொரு வருடமும்
வந்து போகிறாயாம்;
எந்தச் சந்தின் வழியாக
சீர் குலைவு
வந்து சேர்கிறது?
-o-
நீ, ஈகையின்
மாதமாம்!
மாளிகைகளின்
மறுபக்கங்களில்
முடிவில்லாத வறுமை
நீடித்து நிலைக்கிறதே!
-o-
இன்றும்,
ஆரோக்கியங்களால்
ஆத்மாக்களை
அழகுபடுத்த வருகிறாயாம்!
பிடை பிடித்துள்ள
நெஞ்சகளைச் சந்தித்தும்,
நீ ஏன்
நிவாரணமளிக்காமல் போகிறாய்?
-o-
இவர்களிடம்- நீ
கேட்டு நின்ற போதும்,
காணிக்கைகள்
கிடைக்கவில்லை!
நீ வைக்கும்
விழாவுக்கு மாத்திரம்
விருந்தினர்களாக
வருகிறார்கள்!
-o-
இவர்கள்
தாகித்திருந்து-உனது
தாகத்தைத் தீர்க்கவில்லை!
தாக சாந்திக்கா-நீ
வரும் வரை
வழிபார்த்து நிற்கிறார்கள்!
-o-
உன் ஒளியால்
விடியல் வராதாயின்,
உனது விரதத்தால்
கோரிக்கைகள் நிறைவேறாதாயின்,
உனது கொடையால்
பள்ளங்கள்
பூரணத்துவம் பெறாதாயின்,
மீண்டும் மீண்டும்
இங்கு நீ வருவதில்
இன்பம் உனக்குண்டோ?

செல்வி பஹீமா ஜஹான்,
மெல்சிரிபுர.



# ஒரு பிஞ்சின் நெஞ்சில்...

கட்டி முடிக்கப்பட்டது
வீடு...!
முடிக்கப்படாதது
வீடு கட்ட வேண்டிய
காசின் வட்டி...
இடிக்கப்பட்டது இதயங்கள்;
இடிக்கப்படாதது
சுவாமி அறை சுவர்!

என் தந்தை-
விரும்பியது அகிம்சாவாதம்...!
விரும்பாதது தீவிரவாதம்.
ஆனால் கிடைத்தது மரணம்;
கிடைக்காதது அவர் உடல்தான்!

என் தாய்
இழந்தது துணையை;
இழக்காதது உயிரை!
மறந்தது தன்னை;
மறக்காதது என்னை!

என்
கையில் ஏறியது தோட்டா;
ஏறாதது புத்தகம்!
போகவிரும்புவது- பாடசாலை.
போகவிரும்பாதது- பிச்சைக்கு.
எதிர்பார்ப்பது சமாதானம்;
எதிர் பார்க்காததும் அதுவே!

கே. ரவிசங்கர், நோர்வே.

# தேன்

# எங்களின் நிலை!

சாம்பல் பூத்த
நெருப்பாய்
தணல் எரிகின்றது.
உள்ளே!
சூரியன் மட்டும்
எரியவில்லை.
எங்களின்
வாழ்க்கையும்
சொந்த நாட்டின்
சுதேச
அகதிகள்!
**
காய்ந்த வயிறுகள்
கனன்று எரிகின்றன.
பட்டினித் தீயில்
வானத்தில்
வல்லூறுகளும்
கழுகுகளும்
வட்டமிட,
பயத்தின்
முன்
பதுங்கிப் போகிறது
பசி!
**
அண்ணாந்த
தலைகள்
அந்நியமாக்கப்பட,
எங்கும் பறந்து
ஒட்டி
புள்ளிக் கோலம்
போடுகின்றன,
இறைச்சித்
துண்டங்கள்!
**
சூரியன்
மட்டும்
சிவக்கவில்லை;
விஞ்ஞானம்
பிரசவித்த
வல்லூறுகளால்.
**
பூமி
சிவக்கின்றது.
புல்
நுனி
பட்டு
வழிந்த
இரத்தத்தின்
சிவப்பால்
பூக்களும்
சிவப்பாகி
சிரிக்கின்றன!
**
பிண
வாடையை
தழுவி
காற்று முத்தமிட,
மூச்சும்
முழுதாக
சுடுகின்றது!
**

ஜெயமணி.

# அந்தநாள் ஞாபகம்





சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் அந்தக்கால அசத்தல் படங்கள். எப்படி, ஒரு படத்தை ஒரு தடவை பார்த்தா நூறுதடவை பார்த்தமாதிரி இருக்கிறதா?







மின்னிடும் புன்னகையும் கொடிபோல் உள்ள இந்த நடிகை யார் தெரிகிறதா? இப்போது சதைபோட்டு உருவம் மாறிவிட்டது, ஆனாலும் உதட்டு மின்னல் மறையவேயில்லை. இப்போதும் கண்டுபிடிக்காவிட்டால் பக்கம் 18ஐ நாடுங்கள்.

# என்னை நினைத்துக் கொண்டு......

உனது நாக்குகளால்
உன் இதழ்களை
நனைத்துப் பார்!
இன்னும் இனிக்கும்
நான் தந்த முத்தங்கள்.
•••
உனது விரல்களால்
உன் உடலெங்கும்
தொட்டுப்பார்!
உனது ஸ்பரிசம்
நான் தொட்ட உணர்வுகளை
இப்போதும் உணரும்.
•••
உன்னை நீயே
மணந்து பார்!
என் மேனி வாசம்
உனக்குள் புகுந்து கொண்ட
இரகசியம் புரியும்.
•••
உன் விழிகளை
நிலைக் கண்ணாடியில்
பார்!
உன் விழிகளில்
என் உருவம் தெரியும்.
•••
உன்னை நீயே
கேட்டுப் பார்!
உன்னை நானென்று
சொல்லும்.
•••



கலஹா-பெ.புண்ணியமூர்த்தி.

## இந்த வாரம் உங்கள் பலன்

(09.02.1997 தொடக்கம் 15.02.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

மகரம் - சூரியன், புதன், வியாழன், வெள்ளி.
மீனம் - சனி, கேது.
கன்னி - இராகு, செவ்வாய்.

★ சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- எதிர்பார்த்த நன்மை, வீண் விரயம். | மு.ப. 10 மணி |
| புதன்- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, கௌரவ மிகுதி. | பி.ப. 3 மணி |
| சனி- அந்நியர் சகவாசம், பொருள் விரயம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- ஆடம்பரச் செலவு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பலவித பேறு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- வெளியிட வாசம், அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| புதன்- வீண் தொல்லை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| வியாழன்- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், பொருள் பேறு. | பி.ப. 3 மணி |
| சனி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பொருள் நஷ்டம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, மனக் கஷ்டம். | மு.ப. 9 மணி |
| புதன்- இனசனப் பகை, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- கடன் தொல்லை, வீண் விரயம். | பகல் 12 மணி |
| வெள்ளி- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், பலவித பேறு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. 3 மணி |
| புதன்- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- எதிர்பார்த்த நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| சனி- அந்நியர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாணக் கஷ்டம், அந்நியர் சகவாசம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. 9 மணி |
| வியாழன்- காரியானுகூலம், தொழில் உயர்ச்சி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு அதிகம். | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், கடன்படல். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் தொல்லை நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- எதிர்பார்த்த நன்மை, பலவித பேறு. | பகல் 12 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, அந்நியர் நட்பு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், பண வரவு. | பகல் 12 மணி |
| சனி- உயர்ந்த நட்பு, முயற்சி மேன்மை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| புதன் - வெளியிட வாசம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், எதிர்பார்த்த நன்மை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- முயற்சி மேன்மை, பயனுள்ள செயல். | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் சிறப்பு, கடன்தொல்லை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, உயர்ந்த நிலை. | மு.ப. 10 மணி |
| புதன்- தொழில் மந்தம், கடன்படல். | பி.ப. 2 மணி |
| வியாழன்- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | பி.ப. 4 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 11 மணி |
| சனி- அந்நியர் சகவாசம், தெய்வ சிந்தனை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், தொழில் சிறப்பு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- அந்நியர் உதவி, பயனுள்ள செயல். | மு.ப. 10 மணி |
| வியாழன்- இனசன நன்மை, பணக்கஷ்டம் நீங்கும். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், தொழில் உயர்ச்சி. | மு.ப. 9 மணி |
| சனி- பண வரவு, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | மு.ப. 1 மணி |
| புதன்- முயற்சி பலிதம், தொழில் பேறு. | பகல் 12 மணி |
| வியாழன்- கடன் தொல்லை, பணவரவு தடை. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பெரியோர் உதவி. | பி.ப. 2 மணி |
| சனி- எதிர்பார்த்த முயற்சி, வீண்குறை கேட்டல். | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தேகசுக நன்மை, மனக்கிலேசம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- செய்தொழில் விருத்தி, பணவரவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, பெரியோர் நட்பு. | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் உதவி, வீண் தொல்லை நீங்கும். | மு.ப. 10 மணி |
| வியாழன்- இனசன நன்மை, தொழில் பேறு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், கௌரவம். | பி.ப. 3 மணி |
| சனி- பெரியோர் நட்பு, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-1

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனமகிழ்ச்சி, உறவினர் உதவி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- அந்நியர் நட்பு, கௌரவ மிகுதி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் 1 மணி |
| சனி- கௌரவ மிகுதி, கடன்தொல்லை நீங்கும். | பி.ப. 2 மணி |


அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com





## தோட்டத்திலே......

எங்க வீட்டுத் தோட்டத்திலே
குயிலு ஒண்ணு கூவுது!
இனிமை கொஞ்சும் ராகத்தோடு
பாட்டு நல்லாப் பாடுது!

அணில் கடித்த பழத்திற்காக
எறும்புக் கூட்டம் ஏங்குது!
ஆடி ஓடிக் களைத்ததாலே
மரத்தில் மந்தி தூங்குது!

பட்டாம் பூச்சி பூவுக்குள்ளே
தேனெடுக்கத் துடிக்குது!
பறவையெல்லாம் சத்தமிட்டு
பாலர் பாடம் படிக்குது!

இன்னும் தயக்கம் ஏனோ? இங்கு
எழுந்து ஓடி வாங்களேன்!
இருட்டும் வரை கும்மி கொட்டி
குதூகலமாய்ப் போங்களேன்!

-எஸ். புகழேந்தி-

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்! இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பலகல்வி தந்து-இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை



## யார் திருடியது?

அக்பர் சக்கரவர்த்தி, தனது மனைவிக்கு ஒரு வைர அட்டிகை செய்து கொடுக்கும்படி ஒரு நகை வியாபாரிக்கு உத்தரவிட்டார். அந்த வியாபாரியும் நகைகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டார்.

அந்த நகை வியாபாரியிடம் ஆறு பேர் வேலை செய்து வந்தார்கள். அட்டிகையைச் செய்து முடித்த வியாபாரி, மறுநாள் அதை அக்பரிடம் கொடுத்து அதற்கான விலையைப் பெறத் திட்டமிட்டார்.

ஆனால் அந்த அட்டிகை காணாமல் போய்விட்டது. அவர் தமது வேலையாட்களைக் கூப்பிட்டு விசாரித்தார். அவர்கள் அனைவரும் அந்த அட்டிகையைப் பற்றி எதுவும் தெரியாது என்று கூறினர்.

அட்டிகையை அக்பரிடம் கொடுக்காவிட்டால் அரச தண்டனைக்குள்ளாக வேண்டிவருமே என்று பரிதவித்தார் வியாபாரி. அவருக்கு பீர்பாலின் நினைவு வந்தது.

பீர்பாலிடம் சென்று, நடந்தவைகளைக் கூறி, தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டார். பீர்பாலும் அவருக்கு உதவுவதாகச் சொன்னார்.

பீர்பால் கேட்டுக் கொண்டதற்கிணங்க நகைவியாபாரியின் ஆறு வேலையாட்களும் பீர்பாலின் முன் நிறுத்தப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் தாக்கு எதுவும் தெரியாது என்று பீர்பாலிடம் கூறினார்கள். உடனே பீர்பால் அவர்களைப் பார்த்து,

"உங்களில் யாரோ ஒருவர்தான் அட்டிகையைத் திருடியிருக்க வேண்டும். திருடியவரை என்னால் கண்டுபிடிக்க முடியும்.

இதோ என்னிடம் இருக்கும் ஆறு மந்திரத் தடிகளையும் உங்களிடம் தருகிறேன். இந்தத் தடியை நீங்கள் இரவு படுக்கும் போது உடன் வைத்துக்கொண்டு படுக்க வேண்டும்.

யார் திருடினாரோ அவரிடம் இருக்கும் தடி ஒரு அங்குலம் நீளமாக வளர்ந்து விடும். அப்போது யார் திருடினார் என்று தெரிந்துவிடும்," என்று கூறி ஆளுக்கு ஒரு தடியைக் கொடுத்து ஒவ்வொருவரையும் தனித்தனி அறைகளில் பூட்டிவிட்டார்.

தனி அறையில் பூட்டப்பட்டவர்களில் ஒருவன் யோசித்தான்:

'காலையில் தடி ஒரு அங்குலம் வளர்ந்துவிட்டால், என்னைத் தண்டிப்பார்கள். எனவே ஒரு அங்குலத்தைக் குறைத்து விட்டால் காலையில் அது முன்பு இருந்தது போல் ஆகிவிடும்' என்று தடியின் நீளத்தில் ஒரு அங்குலத்தைக் குறைத்தான்.

மறுநாள் நகை வியாபாரியும், பீர்பாலும் அவர்கள் அடைக்கப்பட்டிருந்த அறைகளின் பக்கம் வந்தார்கள். கதவுகளைத் திறந்தார்கள்.

முதல் ஐந்து வேலையாட்களிடம் உள்ள தடிகள், முதலில் கொடுக்கப்பட்டபோது எப்படி இருந்ததோ, அப்படியே இருந்தன.

ஆறாவது வேலையாளிடம் கொடுக்கப்பட்ட தடி ஒரு அங்குலம் குறைந்திருந்தது. அவன்தான் திருடன் என்று பீர்பாலுக்குப் புரிந்துவிட்டது.

முதலில் அவன் ஒப்புக்கொள்ள மறுத்தான். பின்னர் நகை வியாபாரியின் பலத்த அடி, உதைக்குப் பின் குற்றத்தை ஒப்புக் கொண்டு, திருடிய அட்டிகையை எடுத்துக் கொடுத்தான்.

தனக்கு ஏற்பட்டிருந்த தடைகளிலிருந்து தன்னைக் காப்பாற்றியதற்காக பீர்பாலை வணங்கி நன்றி செலுத்தினார் நகை வியாபாரி.

## வாரம் ஒரு நாடு

### சவுதி அரேபியா

| | |
|---|---|
| தலைநகரம் | - ரியாட் (அரசபீடம்) |
| | - ஜெட்டா (நிர்வாகம்) |
| பரப்பு | - 22,50,070 சதுர கிலோமீட்டர். |
| மக்கள் தொகை | - 1.79கோடி |
| மொழி | - அரபு |
| எழுத்தறிவு | - 62% |
| சமயம் | - இஸ்லாம் |
| நாணயம் | - றியால் |
| தனிநபர் வருமானம் | - 7940 டொலர். |



**அமைவிடம்:**

அரேபிய வளைகுடாவில் ஐந்தில் நான்கு பகுதி இடத்தில் சவுதி அரேபியா அமைந்துள்ளது. இஸ்லாமிய புனித ஸ்தலங்களான மக்காவும், மதீனாவும் இங்கேதான் அமைந்துள்ளன.

**வரலாறு:**

நெஜத் என்னும் நாடு 18ம் நூற்றாண்டில் துருக்கியின் ஆதிக்கத்திற்குட்பட்டது. 1913ல் சவுதி வம்சத்தின் ஸ்தாபகரான இபன் சவுத், துருக்கியர்களைத் துரத்தினார். 1927ல் பிரிட்டனுடன் ஒரு நட்புறவு ஒப்பந்தம் ஏற்பட்டது. பாராளுமன்றம் இல்லாத மன்னராட்சிமுறை இங்குள்ளது.

**பொருளாதாரம்:**

மிகுந்த எண்ணெய் வளம் கொண்ட நாடு. உலகின் முதன்மையான பெற்றோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடு இது. இங்கு கோதுமை, பேரீச்சம்பழம், பழவகை, பார்லி, தோல், கம்பளி போன்றவை அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

## நட்சத்திரக் கொடிகள்



உலக நாடுகளில் பெரும்பாலானவற்றின் தேசியக்கொடியில் இடம் பெற்றிருக்கும் அடையாளச் சின்னம் நட்சத்திரம். உலகில் மொத்தம் 42 நாடுகளின் தேசியக் கொடிகளில் நட்சத்திரம் இடம்பெற்றுள்ளது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 15.02.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 179
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 177

பரிசுக்குரியவர்:
ரூ. செந்தூரன்.
தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஏ. ஆர். எம். பர்ஸான், ப/அல். இர்ஷாத் மு.ம.வி., ஹாலி-எல. | எல். ரஜீவ், பரி யோவான் த.ம.வி., இறக்குவானை. |
| ஜெ. துஷிந்ரா, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | கே. ஷ..ப்வான் மொஹமட், மொ/மஹவெல முல்ல மு.வி. வெள்ளவாய. |
| சு. ஜெறோம், புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | எஸ். கேசாந்தனி, தமிழ் மகளிர் மகாவித்தியாலயம், பதுளை. |
| தாமோதரம் பிரதீவன், திருவள்ளுவர் வீதி, பாண்டிருப்பு-01 கல்முனை. | செல்வி எஸ். சிவநாதன், இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. |
| மு.க. பர்வின் ஜஹான், கமு/ஸம்ஸ மத்திய கல்லூரி, மருதமுனை-05. | மதிவதனி பரமசிவம், தமிழ் மகா வி., டில்லரி.ப.கனக்கு, டிக்கோயா. |

## வாஸ்கொடகாமா

ஐரோப்பிய நாடுகளுக்கு இந்தியாவை நல்ல முறையில் அறிமுகம் செய்து வைத்தவர் வாஸ்கொடகாமா என்ற கடற் பயணிதான். போர்த்துக்கல் நாட்டிலிருந்து கடல் மார்க்கமாக இந்தியாவை அடையலாம் என்று கடல் வழிப்பாதையை இவர் 1498ம் ஆண்டு மே மாதம் கண்டுபிடித்தார். அதற்கு முன்னர் ஐரோப்பிய நாடுகளிலிருந்து கரடு முரடானதும், பாலைவனம் மற்றும் செங்குத்தான மலைகளைக் கொண்டதுமான தரைப்பாதை வழியாக மாதக்கணக்காகப் பயணம் செய்ய வேண்டியிருந்தது.

வாஸ்கொடகாமா இத்தாலியிலுள்ள வெனிஸ் நகரத்தில் 1460ல் பிறந்தார். போர்த்துக்கேய மன்னனான எமானுவேல் வழங்கிய நான்கு பாய்மரக்கலங்களுடனும் நூற்றுக்கும் மேலான மாலுமிகளுடனும் லிஸ்பன் நகரிலிருந்து புறப்பட்டார். கடலில் மூன்று மாதங்கள் பயணம் செய்து, பல தொல்லைகளையும் துயரங்களையும் தாங்கி 3 மாதங்களின் பின்னர், இந்தியாவின் மேற்குக்கரையிலுள்ள கோழிக்கோடு துறை முகத்தை வந்தடைந்தார். இவருடன் பயணம் செய்த மாலுமிகளில் பாதிக்குமேல் இறந்துவிட்டனர். அவருடைய நீண்ட பயணத்தின்போது இடையில் எந்தக் கரையும் வாஸ்கொடகாமாவுக்குத் தென்படவில்லை.



இந்தியாவிலிருந்து போர்த்துக்கல் திரும்பும்போது கப்பல்களில் வாசனைத் திரவியங்களை நிரப்பிச் சென்றார். இதனால் போர்த்துக்கேய மக்களும் மன்னனும் மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தனர். வாஸ்கொடகாமாவின் இந்தப் பயணத்தின் பின்னரே தென் கிழக்கு ஆசிய நாடுகளில்- இலங்கை, இந்தியா உட்பட- போர்த்துக்கேய ஆதிக்கம் ஏற்பட்டது. இவர் 1524ம் ஆண்டு காலமானார். □

## விடுகதைகளும் விடைகளும்

1. அழகழகாய்ப் பூ பூக்கும், அம்மாடி எனக் காய்காய்க்கும்.
அது என்ன?
2. ஒரு விரல் நீளக்குதிரைக்கு நாலு முழக் கடிவாளம்.
அது என்ன?
3. அடர்ந்த காட்டில் இருண்ட மனிதன்.
அது என்ன?
4. அனலில் பிறந்து ஆகாயத்தில் மறைவான்.
அது என்ன?
5. பல்லைப் பிடித்து அழுத்தினால் பதறிப் பதறி அழுவான்.
அது என்ன?
6. ஆற்றோரம் போகும் கள்ளக் கடாவுக்கு கிள்ளிப் பிடிக்க முடியவில்லை.
அது என்ன?
7. பச்சைக்கோழி இட்ட முட்டையில் இருந்து வெள்ளைக் குஞ்சு பொரித்தது.
அது என்ன?
8. கல்லிலே காய்க்கும் பூ, தண்ணீரிலே மலரும் பூ.
அது என்ன?

**விடைகள்**

1. பூசணிக்காய் 2. ஊசியும், நூலும்
3. பேன் 4. புகை
5. ஆர்மோனியம் 6. ஆமை
7. பஞ்சு 8. சுண்ணாம்பு.

தொகுப்பு:- எம். நஸார், புத்தளம்.

## அறிவோம் மனதில் பதிவோம்




↑ கழுகின் பார்வை முற்றிலும் மாறுபட்டது. அதன் பார்வை மனிதனின் பார்வையை விடவும் 8 மடங்கு கூர்மையானது. ***



↑இரண்டாம் உலகப் போரின் போது மொத்தம் ஒரு கோடியே 60 இலட்சம் போர் வீரர்களும், இதற்குச் சமமான பொதுமக்களும் கொல்லப்பட்டனர். ***

→ மக்கள் குறைந்த நாட்டில் அதிகமான மொழிகள் பேசப்படும் நாடு- பப்புவா நியூகினியா. இந்த நாட்டின் மக்கள் தொகை 32 இலட்சம். மக்கள் பேசும் மொழியோ 700க்கும் அதிகம். ***





↑ நாடாப்புழு என்னும் ஒரு வகைப்புழு தனது உடலையே உணவாக்கிக் கொள்ளும் ஒரு விநோதப் புழுவாகும். இதற்கு உணவு கிடைக்காதபோது இப்படி 95 சதவீத உடலை அவை உணவாக்கிக் கொள்கின்றன. போதிய உணவு கிடைத்தவுடன் மீண்டும் அவை பழைய நிலையை அடைந்து விடுகின்றன. ***



படிப்பகம்

www.padippakam.com

# 13

# அனிதா இளம் மனைவி

நாவல்

உலகின் நவீன எழுத்து வேந்தன்

**சுஜாதா**



அதிகாரிகள் எத்தனை வகை!

"நீ எங்கேயும் போகாதே!"

'நீ!' என்னை சந்தேகப்படுகிறார்! "எங்கும் போகவில்லை," என்றான்.

கான்ஸ்டபிளின் உதவியுடன் அந்த மேஜையைச் சற்று நகர்த்தினார். பாஸ்கரை ஒரு தடவை சுற்றி வந்தார். நோட் புத்தகத்தில் தேதி சமயம் எழுதினார்.

"இது யார் வீடு?" என்று விசாரிப்பு.

"இந்த வீட்டில் இருந்தவர் பெயர் பாஸ்கர். அவர்தான் இறந்தவர்," என்றான் கணேஷ்.

**சென்ற வாரம்**

**வசந்த்விஹாரில் அனிதாவைக் காண்கிறான். அவள் அழுதிருக்கிறாள்.**

**தனக்கிருக்கும் சந்தேகங்களை விலாவாரியாக எடுத்துரைக்கிறான் கணேஷ்.**

**பாஸ்கர் தன்னைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் ஷர்மாவின் கொலைக்கு அனிதாவும் உடந்தை என்கிறான்.**

**அன்றைய தினம் பாஸ்கர் தன்னைப் படுக்கையில் சாய்த்து அடிபணிய வற்புறுத்தினான் என்றும் தன்னை நம்புமாறும் கெஞ்சுகிறாள் அனிதா.**

**பாஸ்கரைப் பழிவாங்கத் துடிக்கும் கணேஷ் காரில் சீறிப் பாய்ந்து ஹெய்லி ரோட்டில் அவன் அறைக்குள் நுழைகிறான்.**

**அங்கே... கொலை. பாஸ்கர் கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறான். பாஸ்கரின் உயிரற்ற உடல்....**

**அங்கிருந்தே தொலைபேசியில் ஃப்ளையிங் ஸ்க்வாட், அடுத்து இன்ஸ்பெக்டர் ராஜேஷ் ஆகியோருக்கு அறிவிக்கிறான். பொலிஸ் வந்து சேர....**

"நீ எதற்கு இங்கு வந்தாய்?"

"அவரைப் பார்க்க."

"தோஸ்த்தா?"

"தெரிந்தவன்."

மாடிப் படியில் அடைத்து நின்று கொண்டிருந்தவர்களிலிருந்து பையன் பேசினான். "ஸாப், இந்த ஆள் காலை எஜமானன் இல்லாதபோது இங்கு வந்திருந்தார்."

"யார் நீ?"

"பாஸ்கர் அய்யாவின் வேலைக்காரன்."

கணேஷ் 'சிக்கல்' என்று எண்ணிக் கொண்டான். ஆனால் பயப்படவில்லை. மடியில் கனமிருந்தால்தானே டாக்டரைப் பார்க்க வேண்டும்.

"நீ இரு. வருகிறேன். அப்புறம் உங்களை எல்லாம் விசாரிக்கிறேன். 18, உள்ளே வாய்யா."

அதே சமயம் மேலும் இரு பொலிஸ் அதிகாரிகள் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் தோள்பட்டைகளில் வெள்ளி நட்சத்திரங்களும், கறுப்புச் சிவப்புப் பட்டைகளும் மின்ன- ஒருவர் விறைப்பாக, ஒருவர் அலட்சியமாக 'சல்யூட்' பரிமாறிக் கொண்டார்கள். எல்லாரும் பஞ்சாபிகள், எல்லோரும் திடகாத்திரர்கள். சிவந்தவர்கள்.

கணேஷ், ராஜேஷ் எப்போது வருவார் என்று காத்துக் கொண்டிருந்தான். தன் மேல் அத்தனை கண்களும் இருப்பது அவனுக்குத் தெரிந்தது. அலட்சியமாகவே நின்று கொண்டிருந்தான்.

கணேஷுக்குச் சட்டென்று அனிதாவின் ஞாபகம் வந்தது. திடீரென்று அவனுள், அவள் இருக்கும் அபாயம் உறைத்தது.

'பாஸ்கரைக் கொன்றது யார்? ஷர்மாவைக் கொன்ற அதே ஆசாமிதானே? அப்படியானால் பட்டியலில் அடுத்தபடி அனிதாவா? பாஸ்கர் ஏன் கொலை செய்யப்பட்டான்? பாஸ்கரை நான் சந்தேகித்துக் கொண்டிருந்தபோது அவனே விழுந்து விட்டானே. யார் பாக்கி? அனிதா, மோனிக்கா, கோவிந்த், ஆம் கோவிந்த்தான். எப்படிச் சொல்ல முடியும், என்ன பகை இது, சம்பந்தமில்லாத கொலை, சம்பந்தம் இல்லையா? அனிதா.'

"உங்கள் பெயர் என்ன?"

"கணேஷ்."

"நீங்கள் பார்த்ததை முழுதும் விவரமாகச் சொல்லுங்கள்." கணேஷ் விவரமாக மெஷின் போல ஒப்புவித்தான். சொல்லிக் கொண்டிருக்கையிலே அவன் ஞாபகம் அனிதாவின் மேல் இருந்தது. அவளுக்குப் ஃபோன் செய்ய வேண்டும்; எச்சரிக்க வேண்டும்.

"ஸார். நான் ஒரு ஃபோன் செய்ய வேண்டும்."

"இந்த ஃபோனை உபயோகப்படுத்தக் கூடாது," என்றார் இன்ஸ்பெக்டர்.

"இதை இல்லை. எதிரே கடைக்குப் போய்ச் செய்கிறேன். விஷயம் ஒன்றுமில்லை. இறந்துபோன இவன் வேலை செய்து கொண்டிருந்த வீட்டின் எசமானிக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். அவர்கள் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தனியான பெண். ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்."

இன்ஸ்பெக்டர் ஏ.எஸ்.பியைப் பார்த்தார். அவர் யோசித்தார். "ஆல்ரைட், கான்ஸ்டபிள், இவருடன் போ," என்றார்.

கணேஷ் அறையை விட்டு வெளியே வந்தபோது அந்தக் கூட்டம் பார்வையால் அவனைத் துளைத்தது.

"இவன்தான்."

"விலங்கு போட அழைத்துப் போகிறார்கள்."

"சின்னப் பையன் போலத்தான் இருக்கிறான்."

"உன் ஸிஸ்டரை என்னுடன் அனுப்பு" என்று அவனைப் பார்த்துச் சொல்லிவிட்டுக் கோபமாகப் படிகளில் இறங்கினான் கணேஷ். கான்ஸ்டபிள் அவனுடன் ஒட்டிக் கொண்டு வந்தார்.

எதிர்க் கடையில் விவிதபாரதி அலறிக் கொண்டிருந்தது. கணேஷ் தன் கையிலிருந்து பைசாவை எடுத்துக்காட்டி. "கொஞ்சம் ஃபோன்," என்றான் கடை முதலாளியிடம்.

அவன் "என்ன நம்பர் வேண்டும்? நான் டயல் செய்து கொடுக்கிறேன்." என்றான். எஸ்.டி.டி.. பயம்.

"ஸிக்ஸ் ஒன் டபிள் ஸிக்ஸ் ஃபோர் த்ரீ."

கடைக்காரன் டயல் செய்து ஃபோனைக் கொடுத்தான் கணேஷிடம்.

"அனிதா?"

"ஆம்!" என்றாள். அவள் குரல்தான்.

"அனிதா, கணேஷ் ஹியர். ஸம்திங் டெர்ரிபிள் ஹாஸ் ஹாப்பன்ட்."

"என்ன கணேஷ்?"

"உஸ்தாத், அந்த ரேடியோவை சின்னதாக வைக்கிறீர்களா.....? அனிதா, பதட்டப்படாமல், பயப்படாமல் கேளுங்கள். பாஸ்கர் கொலை செய்யப்பட்டிருக்கிறான்."

"பாஸ்...கரா?"

"ஆம்!"

"கணேஷ்!" அவள் குரல் ஹீனமாகியது. "என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? எப்படி நேர்ந்தது?"

"எப்படி என்று இன்னும் சற்று நேரத்தில் தெரிந்துவிடும். நான்தான் முதலில் பார்த்தேன்....அவன் ஃப்ளாட்டில் கிடக்கிறான். அவனுடன் சண்டை போடச் சென்றேன்- முடியவில்லை."

"கணேஷ். எனக்குப் பயமாக இருக்கிறது. எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. உடனே இங்கே வந்து என்னை அழைத்துச் சென்று விடுங்களேன்."

"கூட ஒருவரும் இல்லையா? மோனிக்கா எங்கே?"

"மோனிக்கா வெளியில் போயிருக்கிறாள். கணேஷ் உடனே வாருங்கள். உங்களிடம் எல்லாவற்றையும் சொல்லி விடுகிறேன். எனக்குப் பயமாக இருக்கிறது கணேஷ், வந்து விடுங்கள்."

"அனிதா, நான் உடனே வரமுடியாத நிலையில் இருக்கிறேன். இன்னும் பூரா விசாரிக்கவில்லை. முப்பது நிமிடத்தில் வர முடியலாம். வேலைக்காரர்களை அனுப்பி விடாதீர்கள். கார் எங்கே?"

"மோனிக்கா எடுத்துச் சென்றிருக்கிறாள். கணேஷ் நான் உங்களிடம் பேச வேண்டும். சொல்ல வேண்டும். உடனே...."

"உடனே வர முயலுகிறேன். தனியாக இருக்காதீர்கள். சீக்கிரம் வந்து விடுகிறேன்."

"கூப்பிடுகிறார்," என்று மற்றொரு கான்ஸ்டபிள் வந்து சொல்ல கணேஷ் டெலிஃபோனை வைத்தான். பைசா கொடுத்தான். திரும்பிச் சென்றான். 'உங்களிடம் எல்லாவற்றையும் சொல்லி விடுகிறேன்.' அப்படியானால் சொல்லாமல் விட்டிருந்தது இருந்திருக்கிறது. என்ன அது? அனிதாவுக்குத் தெரியும்!

கணேஷ் திரும்ப மாடிக்குச் சென்றபோது இன்ஸ்பெக்டர் ராஜேஷ் வந்திருந்தார். அவன் வணங்கினான்.

"வீ மீட் எகய்ன்."

கணேஷ் சிரித்தான். ராஜேஷ் சிரிக்கவில்லை.

ஏ.எஸ்.பி. விசாரணை நடத்திக் கொண்டிருந்தார், பக்கத்து வீட்டு ஆசாமியை. "நீ பார்த்ததை எல்லாம் சொன்னாயா?"

"இருட்டினது ஒரு கார் வந்து நின்றது சார். கறுப்பு அம்பாஸிடர். அதிலிருந்து ஓர் ஆள் இறங்கி மாடிக்குப் போனான்."

"அவன் எப்படி இருந்தான்?"

"முகத்தைப் பார்க்க முடியவில்லை. சரக்கென்று உள்ளே போய்விட்டான். நானும் சரியாகக் கவனிக்கவில்லை."

"எவ்வளவு உயரம் இருந்தான்?"

"இந்த ஆள் உயரம்?" என்று கணேஷைக் காட்டினார்.

"உங்கள் உயரம் இருக்கலாம்."

"வயது சுமாராக?"

"எனக்குச் சொல்லத் தெரியவில்லையே. அதுதான் சொன்னேனே, உன்னிப்பாகப் பார்க்கவில்லை என்று."

"தானாகக்காரை ஓட்டிக்கொண்டு வந்தானா?"

"அப்படித்தான் நினைக்கிறேன்."

"கார் நம்பர் என்ன?"

"நம்பர் பார்க்கவில்லை. இறங்கின ஆசாமி வேகமாக நடந்து உள்ளே சென்றான். இடது பக்கம் மாடிப்படி ஏறிப்போவதைப் பார்த்தேன்."

"உங்களில் வேறு யாராவது பார்த்தார்களா?"

"நான் பார்த்தேன் ஸார்; கார் வந்து நின்றதை."

"எத்தனை மணிக்கு?"

கணேஷின் கண்கள் அறையைத் துழாவின. அலமாரியின் கீழ்த் தட்டில் செய்தித்தாள்கள் சுத்தமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. புத்தகங்களின் முதுகுகள் வண்ண வண்ணமாக இருந்தன. மைக்கூடு, பை. இன்ஸ்பெக்டர் ராஜேஷின் பார்வையைச் சந்தித்தான். அவர் அவனைத் தனியாக அழைத்தார். "நீ ஏன் இங்கு வந்தாய் கணேஷ்?"

இவரும் நீங்களிலிருந்து 'நீ'க்கு இறங்கிவிட்டனர்- ஏன்?

"பாஸ்கரைப் பார்க்க, ஸிம்பிள்."

"நீ பார்த்தபோது?"

"நிச்சயம் பாஸ்கர் இறந்திருந்தான். அப்பாவின் மேல் ஆணை."

"அதெல்லாம் வேண்டாம். யூஸி...."

"மிஸ்டர் கணேஷ், இந்தப்பக்கம் வருகிறீர்களா?" ஏ.எஸ்.பி.

"இந்த ஆளாப்பா?"

"இவர்தான்."

"என்ன ஸார்?" என்றான் கணேஷ், ஏ.எஸ்.பி. அவனைப் பார்க்கவில்லை.

"என்ன கேட்டார் உன்னை?"

பையன் தொடர்ந்தான்; "பாஸ்கர் அய்யா சென்றவாரம் ஆக்ரா போயிருந்தாரா என்று. இவர் அவருக்கு தோஸ்த் என்று சொன்னார். தான் ஆக்ராவில் வசிப்பதாகச் சொன்னார். பாஸ்கர் அய்யாவை எதிர்பார்த்ததாகச் சொன்னார்."

ஏ.எஸ்.பி. கணேஷைக் கேள்விக் குறியுடன் பார்த்தார்.

கணேஷ் கனைத்துக் கொண்டான்.

"என்னால் இதை விளக்க முடியும். இன்ஸ்பெக்டர் ராஜேஷுக்குத் தெரியும். நான் காலஞ்சென்ற ஆர்.கே.ஷர்மாவின் உயில் விஷயமாக அவருடைய மகளுக்கு உதவி செய்கிறேன். பாஸ்கர், ஷர்மா இறந்து போன சமயம் ஆக்ராவில் இருந்ததாகச் சொன்னான். அது சரிதானா என்று விசாரிப்பதற்காக....."

"வாட் இஸ்திஸ் ஆக்ரா பிஸினஸ் ராஜேஷ்?"

"ஸார், இதனுடன் தொடர்பான மற்றொரு கேஸ் இருக்கிறது. ஆர்.கே.ஷர்மா என்பவர் இந்த பாஸ்கரின் பாஸ். அவர் சென்ற பதினெட்டாம் தேதி...ரிட்ஜ் ரோடு அருகில்...."

"தெரியும். ஐ கெட் தி கனெக்ஷன். இன் அதர் வோர்ட்ஸ் கணேஷ், ஷர்மாவின் கொலையைப் பற்றி புலன் விசாரித்துக் கொண்டிருந்தீர்கள் இல்லையா?"

"இருந்தீர்கள்!"

"ஆம். ஏறக்குறைய."

"நீங்கள் யார் விசாரிக்க? ராஜேஷ், என்ன இது?"

"நான் ஒரு லாயர்...."

ராஜேஷ் இருமினார்.

கணேஷ். "எனக்கு டெத் சர்ட்டிபிகேட் தேவையாக இருந்தது; சர்மா இறந்தது பற்றி எனக்குச் சந்தேகமாக இருந்தது." என்றான்.

"பாஸ்கர் ஆக்ராவில் அன்று இல்லை என்பது எங்களுக்குத் தெரியும் கணேஷ்." என்றார் ராஜேஷ்.

"உன் பெயர் என்ன என்று சொன்னாய்?" என்றார் மற்றொரு அதிகாரி.

"கணேஷ். ஜி.ஏ.என். இ.எஸ்.எச்."

"ராஜேஷ்! இவன் சொல்வது..."

"உண்மை. இவர் அந்த ஃபாமிலியின் லாயர். இவர் பாஸ்கரை சந்திக்க வந்திருக்கலாம்."

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? இந்தக் கொலையை நான் செய்திருக்க முடியும் என்றா? ஜோக் ஆஃப் தி டே."

"அப்படிச் சொல்லவில்லை. சரி பார்க்கிறோம் அவ்வளவுதான்."

ராஜேஷ் உள்ளே சென்றார். கணேஷைப் பெயர் கேட்ட அதிகாரி அவனிடம் வந்து அவன் பைகளைத் தொட்டுப் பார்த்தார்.

"கழட்டவா?" என்றான்.

"வேண்டாம்" என்றார் பெரியவர். "பானர்ஜி! என்ன?"

அறையை விட்டு வெளியே வந்த பானர்ஜி, "ஸார், சுடப்பட்டிருக்கிறான். மிக நெருக்கத்தில் சுடப்பட்டிருக்கிறான். குண்டு உள்ளேயே இருக்கலாம். உடம்பின் மேல் வைத்துக் கூடச் சுட்டிருக்கலாம். அதிக இரத்தம் இல்லை, உறைந்திருக்கிறது."

"தட்ஸ் பெட்டர். உங்களில் யாராவது சுட்ட சப்தம்- வெடி சப்தம் கேட்டீர்களா?"

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "ஏ பாய் ஜரா தேக்கே சலோ" என்று எதிர்க்கடை ரேடியோ பதில் சொன்னது. சைலன்ஸர் இல்லாமல் சாலையில் ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்தான் ஒருவன்.

"இந்த இடத்தில் பொதுவாக சப்தம் அதிகம். சுட்டிருந்தாலும் கேட்காமல் மிஸ் பண்ணி இருக்கலாம்."

"சற்றும் எதிர்பாராத ரீதியில் சுட்டிருக்க வேண்டும்....கறுப்பு அம்பாஸிடர் கார். ஏம்ப்பா, ஆண் பிள்ளைதானே வந்தது?"

கணேஷுக்கு அனிதாவின் ஞாபகம் வந்தது. **"உடனே வாருங்கள், எல்லாவற்றையும் சொல்லி விடுகிறேன்."** என்ன சொல்லப் போகிறாள்?

"ஸார், நான் போகலாமா?"

"வீட்டு விலாசம் சொல்லிவிட்டுப் போங்கள்."

"ஸ்டேட்மெண்ட்டில் கொடுத்திருக்கிறேன். டெலிபோன் நம்பர் கூடக் கொடுத்திருக்கிறேன்."


கணேஷ் தன் காருக்கு விரைந்து ஓடினான். மறுபடி வேகம் பிடித்து ரப்பரில் சீறினான். சற்று நேரத்துக்கு முன்பு அதே வேகத்தில் அனிதாவின் வீட்டிலிருந்து வெளிப்பட்டது ஞாபகம் வந்தது. வேகம் தேவை. நேரத்தைச் சாப்பிடும் வேகம்.


அவன் மறுபடி வஸந்த் விஹாரை அடைந்தபோது அந்த வீடு மௌனமாக இருந்தது.


சற்று அதிக மௌனமோ? எச்சரிக்கை கலந்த வெறுமையோ? கார் கதவை மெல்ல மூடினான். வாயிற் கதவு திறந்திருந்தது.


**(தொடர்ந்து வரும்)**


## பேனா நண்பர் அரங்கம்














பெயர்: ஆர். சந்திரகுமார்.
வயது: 20
முகவரி: 11பி, பண்டாரநாயக்கா மாவத்தை, இரத்தினபுரி.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். ராஸிக்.
வயது: 19
முகவரி: 82, பறகதெனிய, சிங்கபுர, வேவுட.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: வி. ராஜா.
வயது: 27
முகவரி: MOHEN. STR 1, 63452 HANAU, GERMANY.
பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல்.

பெயர்: வி. இளையராணி.
வயது: 14
முகவரி: கம்மடுவ எஸ்.பி., கம்மடுவ பி.ஓ.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: முகமட் நவ்பர்.
வயது: 19
முகவரி: 227, பஸ்யால வீதி, மீரிகம.
பொழுது போக்கு: ரீ.வி., வானொலி.

பெயர்: எம். ஹுஸைர்.
வயது: 21
முகவரி: P.O.BOX - 8293, RIYADH - 11482, K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: ஏ. பர்ஹான்.
வயது: 17
முகவரி: 814/2, யட்டிகென, மல்வானை.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நட்பு.

பெயர்: எம். ரஸோன் ராஸிக்.
வயது: 19
முகவரி: 33சி, ரூம் வில்லா, இந்திரிலிகொட, மக்கொன.
பொழுதுபோக்கு: வானொலி, கிரிக்கெட்.

பெயர்: டி. அன்டன்.
வயது: 23
முகவரி: 165/3, கறுஹாந்துங்களை, நாவலப்பிட்டி.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: ஆர். துஷ்யந்தன்.
வயது: 20
முகவரி: 579/2, செங்குந்தர் வீதி, ஆரையம்பதி-02, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். ஜெகதீசன்.
வயது: 22
முகவரி: VIA GIROGGIO-2, 6900 LUGANO, SWITZERLAND.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: எம். சவீர்.
வயது: 20
முகவரி: முனானைச்சேனை-04, கிண்ணியா.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



படிப்பகம்

www.padippakam.com



# தூக்கு மேடைக் குறிப்பு 15

ஜூலிஸ் பூசிக்



## இதுவரை

செக்கோஸ்லாவாக்கிய நாட்டின் போராளிகளின் தலைவர் ஜூலிஸ் பூசிக். ஜெர்மன் படைகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியவர்.

ஜெர்மன் இரகசியப் பொலிசாரால் அவர் கைதுசெய்யப்படுகிறார். தான் ஜூலிஸ் பூசிக் அல்ல என்கிறார். அவரது மனைவியும் கைதாகிறார். பூசிக் சித்திரவதை செய்யப்படுகிறார்.

அவர் இறந்து விட்டதாக சிறையில் உள்ள மனைவிக்கு தவறான தகவல் கிடைக்கிறது. பின்னர் அது வதந்தி என்று அறிகிறாள்.

அவளை மட்டும் போலந்துக்கு கடின வேலைகள் செய்யும் தண்டனைக்காக அழைத்துப் போகிறார்கள். சிறையில் சித்திரவதைகள் மத்தியில் உறுதியோடு தாக்குப் பிடித்தவர்களைப் பற்றி விபரித்த பூசிக், சிறை அதிகாரிகள் பற்றியும் விபரிக்கிறார்.

அவர்களது முரண்பாடான குணங்களை சுவாரசியமாகச் சொல்கிறார்.

இனி....

பொலிஸ்காரன் ஜாரோஸ்லாவ் ஹொராவின் கதை மிகவும் சுருக்கமானது. ஆனால் அதில் ஒரு முழு மனிதனின் வாழ்க்கைக் கதை பூராவையும் பார்க்கிறோம்.

நாட்டின் ஒரு மூலையில் இருக்கிறது ராட்னிகோ. அழகான பிரதேசம். ஆனால் வறுமை மிகுந்த பகுதி. அவனுடைய தந்தை கண்ணாடி செய்யும் தொழிலாளி. அவருடைய வாழ்க்கை வறுமையில் அடிபட்டது. வேலையிருந்தபோதும் மனச் சாந்தியில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் குடியேறியபோது படு பட்டினி. அவற்றில் ஒன்று ஒருவனை அடிபணிய வைத்தது. இல்லையேல் எதிர்காலத்தைப் பற்றிக் கனவு காணச் செய்தது; அடிபணியாமல் தலை நிமிர்ந்து நிற்கச் செய்தது. சுபீட்ச உலகைச் சிருஷ்டிக்க முடியும் என்ற நம்பிக்கை இட மளித்து. அதற்காகப் போராடத் துணிந்ததனால், அவனுடைய தந்தை ஒரு கம்யூனிஸ்டானார்.

மே தின அணிவகுப்பில் இளைஞன் ஜார்டா, சைக்கிள் கோஷ்டியில் சேர்ந்து, ஒரு சைக்கிளை விட்டுச் சென்றான். அவனுடைய சைக்கிளின் சக்கரங்கள், ஒரு சிவப்பு நாடாவினால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. இந்த சிவப்பு நாடாவை அவன் அங்கேயே விட்டுவிடவில்லை. ஸ்கோடா தொழிற்சாலையில் அவனுக்குக் கிடைத்த முதல் வேலையை ஒப்புக் கொள்ளச் சென்றபோது, அந்த நாடாவைத் தன் மனதில் எங்கோயோ மறைத்து வைத்து, கூடவே எடுத்துச் சென்றான்.

வேலையில்லா நெருக்கடி ஏற்பட்டது. பிறகு அவன் இராணுவத்தில் சேர்க்கப்பட்டான். அதன் பிறகு பொலிஸ் படையில் சேவகம் செய்ய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த நாட்களில் அவன் மனதில் மறைந்த சிவப்பு நாடா என்ன செய்துகொண்டிருந்ததோ, எனக்குத் தெரியாது. ஒருவேளை அது எங்கேயோ சுற்றி மடக்கி வைக்கப்பட்டு, மறைக்கப் பட்டிருக்கக்கூடும். ஆனால் அது பறி போய் விடவில்லை என்பது மட்டும் நிச்சயம்.

ஒரு நாள், பான்கிராப்ட்ஸில் வேலை பார்க்க அவர்கள் அவனைப் பொறுக்கி அனுப்பினார்கள். அவன் கோலின்ஸ்கியைப் போல முன் கூட்டியே திட்டமிட்டுத் தானாகவே வரவில்லை. ஆனால் முதல் தடவையாக ஒரு அறையை அவன் எட்டிப் பார்த்தபோது, அவனுக்கு இங்கு தான் செய்ய வேண்டிய காரியங்கள் நிறைய இருக்கின்றன என்ற உணர்வு உண்டாயிற்று. நாடாச் சுருள் விரிய ஆரம்பித்தது.

முதலில் போர்க்களத்தை நன்கு புரிந்து கொண்டு தன் பலத்தை அவன் அளந்து தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. எங்கு ஆரம்பிப்பது, எப்படி ஆரம்பிப்பது என்ற ஒரே சிந்தனையினால் அவனுடைய முகம் சுருங்கி, தலை கவிழ்ந்தது.

அவன் பொலிஸ் வேலையையே தொழிலாகக் கொண்டவன் அல்ல. சாதாரண ஜனங்களிடையில் பிறந்த ஒரு மகன். எனினும் அவனுக்கு அவனுடைய தந்தையின் அனுபவம் தெரியும். அந்த அனுபவத்தை அஸ்திவாரமாகக் கொண்டு அவன் தன் சிந்தனைகளை உபயோகித்து, ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தான்.

என்ன செய்வதென்று தீர்மானித்தவுடன், அவனுடைய மௌனக் கூட்டை உடைத்துக் கொண்டு புறப்பட்டான் ஒரு மனிதன்.

உள்ளத்தில் மிகவும் அபூர்வமானவன்; சுத்தமானவன். சங்கோஜி. அனால் தைரியசாலி. அவசியமானபோதெல்லாம் அவன் எதற்கும் துணிந்தான்.

சிறியதும் பெரியதும் அவசியமாதலால், அவன் சிறிய காரியங்களையும் பெரிய காரியங்களையும் செய்கிறான். மிகவும் சாந்தமாக சந்தடியில்லாமல், கருத்தாக, பயமின்றி காரியங்களைச் செய்கிறான். அது எல்லாம் அவனுக்கு சகஜமாக இருக்கிறது. உள்ளுக்குள்ளேயே அவனிடமிருக்கும் குணம் இது. இது தான் செய்யப்பட வேண்டும் என்றால், ஏன் இதைப் பற்றி வெளியே பேச வேண்டும்?

அவ்வளவுதான். இதுதான்– தன் முயற்சியால் எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றியிருக்கும் ஒரு மனிதனின் முழுக் குண விசேஷம்!

உயிர் தப்பிப் பிழைத்த அந்த மனிதர்கள், இன்னும் வெளியில் உயிருடன் வாழ்ந்து வேலை செய்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் பான்கிராப்டஸில் ஒரு மனிதன் தன்னுடைய மனிதக் கடமையை செய்தான் என்பதுதான்.

அவர்களை அவனுக்கு நேரில் தெரியாது, அவர்களுக்கும் அவனைத் தெரியாது. கோலின்ஸ்கியையும் அவர்களுக்குத் தெரியாது. ஆனால் பிற்காலத்தில் அவர்கள் ஒருவரையொருவர் தெரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன்.

இந்த இரண்டு ஊழியர்களும் ஒருவரையொருவர் விரைவில் கண்டுகொண்டனர். தங்கள் வேலையில் கிடைத்த சந்தர்ப்பங்களை, முழுக்க முழுக்கச் சிறப்பாகப் பயன்படுத்தினார்கள்.

அவர்களுடைய உதாரணத்தை மறக்காதீர்கள். உணர்வுபூர்வமாகத் தேர்ந்து தெளிந்த கருத்தைக்கொண்டு தங்கள் இதயங்களை இருக்கவேண்டிய இடத்தில் வைத்து இரண்டையும் முழுக்க முழுக்கப் பயன் படுத்தியவர்கள் அவ்விருவரும்.

## "அப்பாஸ் கொரிபா"

எஸ்.எஸ். காவலாளியான கோலின்ஸ்கியின் பசுங்காக்கி உடை, செக் பொலிஸ்காரனாகிய ஹோராவின் கருநீல உடை, ஏவல் கைதியாகிய அப்பாஸ் கொரிபாவின் வெளுத்த வர்ணமற்ற உடை இம் மூன்றையும் சேர்த்து எப்போதாவது பார்க்க நேர்ந்தால், சகோதரத்துவத்தின் உயிரோவியத்தைப் பார்க்கலாம்.

இவர்களைச் சேர்ந்தாற்போல் பார்க்க முடியாது. எப்போதாவது அபூர்வமாகவே அப்படிப்பார்க்க முடியும். இதற்கு ஒரே காரணம், அவர்கள் மூவரும் ஒன்றாக இருப்பதுதான்.

சுத்தம் செய்வது, உணவு பரிமாறுவது முதலிய வேலைகளைத் தாழ்வாரத்தின் வழியே போய் வந்து செய்வதற்கு 'மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான, கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட, மற்றவர்களிலிருந்து பிரிக்கப்பட்ட கைதிகளை மட்டுமே' அனுமதிக்க வேண்டும் என்று சிறை விதிகளில் ஒன்று சொல்கிறது. அதுதான் விதியின் சொற்கள்! செத்து மடிந்த சொற்கள்! அப்படிப்பட்ட ஏவல் கைதிகள் எவரும் இல்லை. ஒரு போதும் இருந்ததுமில்லை. நிச்சயமாக எந்தக் கெஸ்டாபோச் சிறையிலும் இல்லை.

இங்கு அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆசாமிகள், அறைகளில் அடைபட்டிருக்கும் கூட்டு அமைப்பினால் வெளியில் அனுப்பப்பட்டிருப்பவர்களே ஆவர். மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளவும் வாழவும் உதவிபுரிவதற்காகவே, அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

இரகசியக் குறிப்புடன் கையில் எடுத்துச் சென்ற செய்தி, இடையில் மறிக்கப்பட்டுப் பிடுங்கப்பட்டதால், எத்தனையோ ஏவல் கைதிகள் தங்கள் உயிரையே இழந்திருக்கிறார்கள்!

ஆனால் சிறைக்கூட்டு அமைப்பின் விதிகள், அவர்களுக்குப் பிறகு அவ் வேலையை ஒப்புக் கொள்கிறவர்களையும் அந்த அபாயகரமான வேலையைச் செய்யும்படி இரக்கமின்றி வற்புறுத்துகின்றன.

அவர்கள் துணிந்தாலும் சரி, பயந்தாலும் சரி, கூட்டு அமைப்புக்கு அவ்வேலையைக் கண்டிப்பாகச் செய்துதான் தீரவேண்டும். ஒருவன் பயந்தால்தான் அதிகமாக நஷ்டமடைகிறான். எல்லா இரகசிய வேலைகளிலும் இப்படித்தான். பயப்படுகிறவன் சீக்கிரமே மாட்டிக்கொள்வான்.

**எல்லா இரகசிய வேலைகளிலும், பயப்படுகிறவன் சீக்கிரமே மாட்டிக் கொள்வான்.**

இது இரகசிய வேலையிலேயே மிக மிகக் கடுமையான வேலை. எதிர்ப்பை நசுக்கி அழிக்க, ஏவி விடப் பட்டிருப்பவர்களின் கண் எதிரேயே செய்யும் இரகசிய வேலை.

காவல்காரர்களின் பார்வையில், அவர்கள் சொல்கிற வேலையைச் செய்கிறபோது, எதிரி ஏற்படுத்தியிருக்கும் கடுமையான திட்டத்தின் நடுவே, மிகமிகக் கஷ்டமான நிலைமைகளில் இவ்வேலை நடக்கிறது.

இரகசிய வேலையைப் பற்றி நீ வெளியில் கற்றுக்கொண்ட பாடங்கள் எல்லாம், இவ்விடத்தில் போதுமானதில்லை. ஆனால் வெளியில் செய்த அளவுக்கு, சில சமயம் அதைவிட அதிகமாக இங்கு நீ செய்ய வேண்டும்.

வெளியில் இரகசிய வேலை நிபுணர்கள் பலர் இருக்க, இங்கு ஏவல் கைதிகளிலும் நிபுணர்கள் இருக்கிறார்கள். அப்பாஸ் கொரிபா, நிபுணர்களுக் கெல்லாம் நிபுணன். பார்த்தால் பரமசாது. அடக்கத்தின் உருவம். ஆனால் நரியை விடத்தந்திர சாலி. மீனைப் போல் வழுக்கி நழுவக் கூடியவன். நெளிவுசுளிவில் தேர்ந்தவன்.

அவனைக் காவல்காரர்கள் போற்றுகிறார்கள். "அடடா, அவனைப் பாருங்கள்! கடமையிலேயே கண்ணாக இருக்கிறான். நம்பிக்கைக்கு உரியவன்; விதிகளுக்குத் துளியும் புறம்பாக நடப்பதில்லை." அவனுடைய உதாரணத்தைப் பின்பற்றும்படி, மற்ற ஏவல் கைதிகளுக்கு அவர்கள் சொல்கிறார்கள்.

ஆமாம். நம்பிக்கைக்குப் பாத்திரமான ஏவல் கைதிகளே! அவர் உதாரணத்தைப் பின்பற்றுங்கள்! அவர் உண்மையிலேயே கைதிகள் விரும்புவது போல, ஏவல் கைதிகளிலேயே ஈடு இணையற்றவர். வலுவானவர். கூட்டு அமைப்பின் ஊழியர்களிலேயே எதையும் சட்டென்று உணரும் ஆற்றல் படைத்தவர்.

ஒவ்வொரு அறையிலும் இருப்பது யார் யார் என்பது அவருக்குத் தெரியும். புதிதாக வருபவர் ஒவ்வொருவரையும் அந்த விநாடியே தெரிந்துகொண்டு விடுவார். அந்தப்புதிய பேர்வழி ஏன் இங்கு வந்தான். அவனுடைய தொடர்புகள் யார் யார், வெளியில் அவன் எப்படி நடந்துகொண்டான். அவனுடைய தோழர்கள் எப்படி நடந்து கொண்டனர் என்பதையெல்லாம் தெரிந்துகொண்டுவிடுவார்.

அவர் 'வழக்கு'களை ஆராய்ந்து, மர்மங்களை வெளிப்படுத்த முயற்சிக்கிறார். அது அவருக்கு மிகவும் முக்கியம். அப்படிப் பரிசீலனை செய்து உணர்ந்தால்தான், அவருக்கு வெளியுலகத் தொடர்புகளை ஜாக்கிரதையாக வைத்திருக்கவும், சமயம் நேரும்போது சிறந்த ஆலோசனையைக் கூறவும் முடியும்.

அவர் விரோதியையும் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார். ஒவ்வொரு காவல்க் காரனையும் கவனமாகப் பார்க்கிறார்; அவனுடைய பழக்கங்கள் என்னென்ன; அவனுடைய பலாபலம் என்ன, அவனிடம் எதெதை எதிர்பார்க்கலாம்; எதெதெற்கு அவனைப் பயன்படுத்தலாம்; எப்படி அவனை ஏமாற்றலாம்; எப்படி அவனை வழிமாற்றி விடலாம் என்பதையெல்லாம் கவனமாகப் புரிந்து கொள்கிறார்.

காவல்காரர்களைப் பற்றி நான் இதற்கு எழுதியிருக்கும் அநேக குண விசேஷங்கள், ஸ்கொரிபா என்னிடம் சொன்னவையேயாகும். அவர்கள் எல்லோரையும் அவருக்குத் தெரியும்; அவர்களைச் சரியாக அவருக்கு வரையறுக்க முடியும். வராந்தாவில் சுயேச்சையாகத் திரிந்து தன் வேலையைச் செம்மையாகச் செய்ய விரும்புகிறவனுக்கு அது முக்கியமாகும்.

இவை எல்லாவற்றையும்விட, ஸ்கொரிபா தன்கடமையை நன்கு உணர்ந்திருக்கிறார். அவர் ஒரு புரட்சிக்காரர். ஒவ்வொரு விநாடியும் புரட்சியாளராக இருக்க வேண்டும் என்பது அவருக்குத் தெரியும்.

கையைக் கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்து, 'வேலை நடக்கிறபடி நடக்கட்டும்' என்று எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் புரட்சியாளன் சொல்லக் கூடாது என்பதும் அவருக்குத் தெரியும்!

அவர் தன் திறமைக்கு உகந்த மிகவும் பொருத்தமான இடத்தை மிகவும் அபாயகரமான சமயத்தில், மிகவும் கடுமையான நெருக்கடியில் அடைந்திருக்கிறார் என்றுகூட நான் சொல்வேன். இங்கு இருந்தபோது அவர் வளர்ச்சிகூட அடைந்திருக்கிறார்,

அவர் ரப்பர்போல் நீண்டு சுருங்கும் ஆற்றல் படைத்தவர். ஒவ்வொரு நாளிலும் அல்லது மணியிலும் புதிய நிலைமைகள் தோன்றும். அவற்றைச் சமாளிக்கப் புதிய முறைகள் தேவைப்படும். அவர் அவற்றை வெகு விரைவில், நொடி நேரத்தில் கண்டு பிடித்துவிடுவார்.

ஒரு நிமிஷத்தில் துளிதான் அவருக்கு அவகாசம் இருக்கும். அதுபோதும் அவருக்கு. அதற்குள் அவர் ஒரு அறையின் கதவைத் தட்டி, துவாரத்தின் வழியாகக் காதில் செய்தியை வாங்கிக்கொண்டு விடுவார்.

பிறகு, அந்தச் செய்தியைக் கடைக்கோடியிலுள்ள அறையில், அதன் காவலாளி கீழே போய் வேறு காவலாளிமேலே வருவதற்குள், தெளிவாகவும் சரியாகவும் சொல்லிவிடுவார்.

அவர் வெகு ஜாக்கிரதையாக இருப்பதோடு, சமயோசித புத்தியில் நிகரற்றவராகவும் இருக்கிறார். அவரது கை மூலம் நூற்றுக்கணக்கான செய்திக் குறிப்புகள் சென்றிருக்கின்றன. இதுவரை ஒன்றுகூடப் பிடிபடவில்லை. சந்தேகத்திற்குக் கூட இடமேற்படவில்லை.

(தொடர்ந்து வரும்)

---

# புதிய உறவு

நிந்தவூர் எம். ஹிதாயத்

அவளிடமிருந்து மற்றுமோர் கடிதம் வந்திருந்தது. நாளை மறுநாள் அவளுக்குத் திருமணமாம். நண்பன் சொன்னான். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. அதிர்ச்சி; ஒரே அதிர்ச்சி. உடம்பெல்லாம் புல்லரிப்பது போல் இருந்தது.

திருமணத்தைத் தடுத்துவிட வேண்டும். எப்படியாவது தடுத்து விட வேண்டும். இல்லையென்றால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போல் இருந்தது. நான் அவள் மீது கொண்ட காதல் என்னை அணு அணுவாகச் சித்திரவதை செய்து கொன்றுவிடும். அவள் இன்னொருவனோடு சந்தோசமாக வாழ... நான் நரகலோகம் போக வேண்டியதுதான். நடக்கக்கூடாது. அந்தத் திருமணம் நடக்கவேகூடாது.

நான் நண்பனைக் கவலையோடு பார்த்தேன். நண்பன் என்னைப் பரிதாபமாய்ப் பார்த்தான்.

"இப்போ... என்ன செய்வது?" நண்பனைக் கேட்டேன்.

"புறப்படுவோம்", என்றான்.

"எங்கே?"

"அவள் இருக்கும் ஊருக்கு!"

"உனக்குத் தெரியுமா?"

"தெரியாது. போய்த்தான் கண்டு பிடிக்க வேண்டும். உடனே புறப்படு!"

புறப்பட்டோம். நண்பனும் நானும் அவள் இருக்கும் ஊரை நோக்கிப் புறப்பட்டோம். பஸ் நகர்ந்தது. கூடவே அவளும் சேர்ந்து என் மனக் கோட்டைக்குள் பறந்தாள்.

அவள்! என்னுடைய அவள்!! என்னுடைய மனதைத் திருடி இப்போது நெருப்புக் குண்டத்திற்குள் இறக்கி வைத்திருக்கும் அவள்!! 'இன்னொருவனுக்கா?' நினைத்துப் பார்க்கவே முடியவில்லையே! என்ன கொடுமை? என்னைக் காதலித்து விட்டு இன்னொருவனை மணப்பதா? எப்படி மனம் வந்தது இவளுக்கு?

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னால்,

ஒரு நாள்.

நண்பனின் அறைக்குள் நுழைந்த போது, மேசையில் அவள் கடிதம் கிடைத்தது. அனுமதியில்லாமல் பிரித்துப் பார்ப்பது தவறு. அனுமதியோடு வாசித்துப் பார்த்தேன்.



"அவளுடைய வீட்டை நெருங்க நெருங்க என் இதயத்துடிப்பு அதிகமானது"

ஆரிபா என்ற அந்தப் பெயர் அப்போதுதான் எனக்கு அறிமுகமானது. கடிதத்தில் அவள் கையெழுத்து அற்புதமாய் ஜொலித்தது. பல வர்ணங்களில் மின்னினாள். அன்று மின்னியவள்தான். பின்னர் மறையவே மறுத்துவிட்டாள்.

நண்பனுக்கும் அவளுக்கும் ஏற்பட்டது சாதாரண நட்புத்தான். அதனால், என் மனக் குழப்பத்தை அவனிடம் எடுத்துச் சொன்னேன். அவனும் சந்தோசப்பட்டான். என்னைப் போல் ஒருவன் அவளுக்குக் கிடைப்பது அபூர்வம் என்றான். அவளிடம் அனுமதி பெற்றுத்தருவதாக வாக்களித்தான்.

உடனே மடல் வரைந்தான். என்னைப் பற்றி உள்ளது, இல்லாதது, நல்லது நாணயமானது, தெரிந்தது தெரியாதது என்பன பற்றியெல்லாம் அற்புதமாய் எழுதினான்.

அடுத்தவாரம் அவளிடமிருந்து மடல் வந்தது. என் காதலுக்கு பச்சைக் கொடி காட்டியிருந்தாள். காதல் வளர்ந்தது. கடிதங்கள் தொடர்ந்தன. ஆனால், இதுவரை நான் அவளை ஒரு தடவையேனும் பார்த்ததில்லை. புகைப்படத்தில் என்றால்– அதுவுமில்லை. நண்பனின் நிலையும் இதே நிலைதான். எங்கள் காதல் அற்புதக் காதல். காதல் கோட்டைக் காதல்.

பஸ் அந்த ஊரை நெருங்கிவிட்டது. இதுதான் அவளுடைய ஊர். நாங்கள் பஸ்ஸிலிருந்து இறங்கி அவளுடைய வீட்டை நோக்கி நடந்தோம். வீதியில் நின்றவர்களை விசாரித்து அவளுடைய வீட்டைத் தெரிந்து கொண்டோம். வீடு நெருங்கியது. அவளுடைய வீடு நெருங்க நெருங்க என் இதயத் துடிப்பின் வேகம் அதிகமானது.

"படக்..! படக்..!"

அவளது வீட்டுக்கு முன்னால் வந்து நின்றோம். நண்பன் அழைப்பு மணியை அழுத்தினான். நிமிடங்கள் சில கழிந்தன. கதவு திறக்கப்பட்டது. ஒரு பெண் வெளியே எட்டிப்பார்த்தாள். பெண்ணா அவள்? அற்புதத் தேவதை! அந்திவானத்து சூரியன் போல் கவர்ச்சியாய்ப் புன்னகைத்தாள். மேகங்கள் சூழ நடுவில் அகப்பட்டுப் பிரகாசிக்கும் வண்ண நிலவு போல், கறுப்பாடை போர்த்திய வெள்ளை ரோஜாவாய் அவள்... யார் இவள்? ஒரு வேளை இவள்தான் அவளோ?

"யார் நீங்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்?"

அவள்தான் கேட்டாள்.

"நாங்கள் நிந்தவூரிலிருந்து வருகிறோம். இங்கே ஆரிபா என்பது..?"

நண்பன் நாத் தடுமாறினான். அவள் எங்களை அடையாளம் கண்டு கொண்டது போல், அவள் உதட்டுப் புன்னகை இன்னும் அதிகமானது.

"ஓ... நீங்களா? உள்ளே வாருங்கள்! உட்கார்ந்து பேசலாம்." சொல்லிவிட்டு அவள் முன்னே போக நாங்கள் பின் தொடர்ந்தோம்.

"இப்படி உட்காருங்கள்!"

உட்கார்ந்தோம். அவளும் எங்கள் முன்னால் உட்கார்ந்து கொண்டாள்.

"நான் தான் ஆரிபா!"

அவள் இயல்பாகப் பேசினாள். நான் அதிர்ந்து போனேன்.

"நீங்கள் யாரென்று சொல்லவே இல்லையே?"

"நான் றஹீம். இவர் அஷ்ரப். இவர்தான் உங்களை...."

அதற்கு மேல் சொல்ல நண்பனுக்கு நா எழவே இல்லை. எங்கள் சங்கடத்தை அவள் புரிந்திருக்க வேண்டும். இலேசாய்ப் புன்னகைத்தாள்.

"உங்களைச் சந்தித்ததில் ரொம்ப சந்தோசம். நாளைக்கு நடக்க விருக்கின்ற என்னோட கல்யாணத்திற்கு நீங்கள் வர மாட்டீர்கள் என நினைத்தேன். ஆனால், வந்து விட்டீர்கள். நான் அதிஷ்டசாலி தான்."

"நிஜமாகவே உங்களுக்குக் கல்யாணமா?"

நண்பன் கேட்டான்.

அவள் கண்களைச் சுருக்கி கன்னத்தில் குழிவிழச் சிரித்தாள்.

"பொய் சொன்னேன். உங்களை ஒரு கலக்குக் கலக்க வேண்டும் என்பதற்காக சும்மா தமாசா அப்படி எழுதினேன். நீங்கள் உண்மையென்று நம்பி விட்டீர்களே! உம்மா...! இங்கே யார் வந்திருக்கிறார்களென்று பாருங்களேன்!"

அவள் இயல்பாகச் சிரித்துக் கொண்டே உம்மாவை அழைத்தாள். ●



படிப்பகம்

www.padippakam.com

> "பெரோசா ஞாபகங்களை கத்தரிக்க வைத்தாள். சுகமான சுமைகளைத் துறந்து உலகத்தில் விழுந்தார்."

# ஏக்கங்கள்

கரீமா றாஸிக்



புனித றமழான் மாதம். இஸ்லாமிய இதயங்கள் எங்கும் பக்திப் பூக்கள். எவ்வளவுக்குக் கூடுதலான நன்மைகளைச் சம்பாதிக்க முடியுமோ அவ்வளவிற்குக் கூடுதலான நன்மைகளைச் சம்பாதிக்கும் மாதம்.

பசித்திருத்தல்.
குர் ஆன் ஓதல்
தொழுதல்
ஏழைகளுக்கு வாரிவழங்குதல்

இப்படி நன்மைகள் நீண்டு செல்லும் மாதம்.

எண்ணம்,
சொல்,
செயல் மூன்றாலும் தீங்கு செய்யாத மாதம். அகதி முகாமுக்கு வந்து இரண்டு புனித மாதங்கள் மலர்ந்து கடந்தன. சவாஹிர் குர் ஆன் ஓதிக் கொண்டிருந்தார். குர் ஆன் ஓதும் போதுமட்டும் உண்மையான நிம்மதி கிடைக்கிறது அதனால் இதய சுத்தியோடு குர் ஆனை அவரின் இதயம் மேயும்.

"ஒங்களத்தான்..!"

அவரின் பாதி பெரோஸா குரல் வரைந்தாள். விழிகளை அவளில் எய்தார்.

"பளீல் ஹாஜியார்... நெறையக் கொடுக்கிறாராமே..? நீங்களும் போயிட்டு வாங்களேன்...!"

"........."

"........."

"என்ன பேசாம இருக்கிறீங்க....?"

"இப்ப சரியான வருத்தமா இருக்கு... அதோட மண்டையப் புழக்கிற வெயிலும் வேற.... நோம்பத் துறந்த பெறகு போறன்..."

மேற்கொண்டு பெரோஸா பேசவில்லை. அந்த ஓலைக்குடிசைக்குள் பாயை விரித்துப் போட்டுப் படுத்துக்கொண்டார் சவாஹிர்.

இப்போது நாற்பத்தெட்டாவது வருடத்தில் சுவாசிக்கின்றார் சவாஹிர். முகவரி இல்லாத முகமாகிவிட்டதில் கோடி சோகம் இதயம் எங்கும் நிறைந்துகிடந்தது; உறைந்து கிடந்தது. கொஞ்சம் சூடேற்றி உருகவைத்தார் சவாஹிர்.

யாழ்ப்பாணத்தில் ஒரு மரத்தில் மலர்ந்த பூக்களாகத்தான் சவாஹிரும் சச்சிதானந்தத்தின் குடும்பத்தினரும். இவ்வளவு பெரிய பிரிவு தீண்டும் என்று இரு குடும்பத்தினரும் நினைத்ததில்லை. உண்மையான உறவுக்குள் வெடிப்பு ஏற்படும் என்பதும் தெரியவில்லை.

"ஐ..யோ...! அண்...ணா..எங்க போட்டு செய்வீங்..களோ... கடவு...ளே.. நாங்கள் என்ன பாவம் செய்தவர்கள்...."

சச்சிதானந்தத்தின் மனைவி ஒப்பாரி வைத்தாள். சச்சிதானந்தம் இரத்தக் கண்ணீர் சிந்தினார்.

"ம்.ம். இம்.ம்.. அண்ண... தங்கச்சி.. நீங்க... கவலப்படாதீங்க... அவங்கள் போகச் சொன்னதற்கு... நீங்கள் ஏன் கவலைப்பட வேணும்... என்று போகச் சொன்னார்களோ.. போய்த்தானே ஆகணும்... எங்கட உயிரு இருக்கிற வரையிலும் நாங்கள் ஒங்கள ஒரு போதும் மறக்கமாட்டம்..."

சவாஹிர் இதயத்தை வெளிப்படுத்தினார். அவர்களின் அன்பை உறுதிப் படுத்தினார். மதங்கள் வேறானாலும் முகங்களும் மனங்களும் ஒன்றுதான் என்பதை தெரியப்படுத்தினார்.

"மா..மி..! மா..மி... நீங்கள் போயிடாதீங்கோ... நாங்கள் போகவிடமாட்டம்.. இல்லாட்டி.. நாங்களும் உங்களுக்கு கூட வெளிக்கிடுவினம்..."

சச்சிதானந்தத்தின் ஒரே ஒரு பெண் வாரிசு தன் உயிரைப் பிரியும் வேதனையோடு வார்த்தைகளுக்குள் விழுந்து கிடந்தாள். சோகத்தினுள் அழுது உடைந்தாள்.

எடுக்க முடியுமானதை எடுத்தார்கள்.

முப்பது பௌண் தங்க நகைகள், இன்னும் விலையுள்ள நல்ல வெள்ளிப் பாத்திரங்கள் எல்லாவற்றையும் சச்சிதானந்தத்திடம் ஒப்படைத்தார்கள். "உதுவெல்லாம் வேணாம்... நீங்களே... வெச்சிக்கொள்ளுங்கோ.. உத வெச்சித்தான் நீங்கள் ஏதாவது செய்யணுமில்லே.."

சச்சிதானந்தம் வேண்டாம் என்று மறுத்தார். அந்த கொடூரமான நரக சூழ்நிலையை வெறுத்தார்.

"அண்..ண... நக எல்லாம் கொண்டு போக உடமாட்டாங்கள்... நீங்களே வெச்சிக் கொள்ளுங்..க... திரும்பவும் நாம சந்திச்சி இணைஞ்சி வாழக்கூடிய ஒரு சூழ்நில வந்தாப் பாப்பம்..." சவாஹிர் துன்பத்தின் எல்லையில் நின்று பேசினார். தன்னுடைய பதினைந்து வயது மகளையும் பத்து வயது மகனையும் இன்னும் சில உடுபிடவை சாமான்களையும் எடுத்துக்கொண்டு உயிரைப் பிறந்த மண்ணிலும் உணர்வுகளையும் உறவினையும் சச்சிதானந்தத்தின் குடும்பத்தின்மீதும் வைத்துவிட்டு வெறும் உடல்களாக- கூடுகளாகப் பிரிந்தார்கள்.

சவாஹிருக்கு மூத்தவள் கிடைத்தபோது பலசிரமங்களை அணிந்தாள். அப்போது அந்தச் சிரமங்கள் அவளைச் சித்திரவதைப் படுத்தாமல் பாதுகாத்தது சச்சிதானந்தத்தின் மனைவிதான்.

தலைப்பிரசவம் என்பதனால் பெரோசா இன்னுமொரு நரகத்தை எதிர்நோக்கியிருந்தாள்.

மயக்கம்,
வாந்தி,
ப்ரெசர்,
பலஹீனம்...,

இறுதியாகச் 'சிசர்' செய்துதான் அவர்களின் இன்னுமொரு ஜீவன் வெளியே வந்தது.

"புள்ள... இந்த மாதிரிச் சந்தர்ப்பங்கள்ள தான் தைரியமா இருக்க வேணும்...!"

"......."

"பொன்மணியக்கா இருக்கும்போது பயப்புடத்தேவல்ல..."

சவாஹிர் துணிவு வழங்கினார். தன் மனைவியின் நோவை நீக்க இனிப்பு வார்த்தை வழங்கினார். இரவுபகலாக பத்துநாட்கள் பொன்மணிதான் பெரோசாவுக்குத் துணை.

உறவும் உணர்வுகளும் கற்கண்டு போல் இனித்தன. சச்சிதானந்தத்தின் வீட்டாருக்குப் பொங்கல் வந்தால் சவாஹிரின் வீடும் இதயமும் பொங்கும்.

தீபாவளி வந்தால் பட்டாசு வெடிக்கும்.

சித்திரைப் புத்தாண்டு பிறந்தால் சர்க்கரையாக இதயங்கள் எல்லாம் இனிக்கும்.

நோன்புப் பெருநாள் வந்தால் சச்சிதானந்தத்தின் வீட்டாருக்கும் பெருநாள்.

ஹஜ்ஜுப் பெருநாள் வந்தால் இரண்டு குடும்பங்களுக்கும் நெருக்கம் இன்னும் இறுக்கமாகும்.

"ளுஹருக்கு பாங்கு சொல்றாங்க..."

பெரோசா ஞாபகங்களைக் கத்தரிக்க வைத்தாள். சுகமான சுமைகளைத் துறந்து உலகத்தில் விழுந்தார். தலையும் இலேசாக வலித்தது. வெயிலும் பூமியை வென்று கொண்டிருந்தது; மென்று தின்று கொண்டிருந்தது.

எழுந்தார். வுழூஊச் செய்தார். தொழுதார். "யா அல்லாஹ்... இந்த நாட்டில உண்மையான சமாதானத்தைத் தருவாயாக! எல்லோரும் நல்லபடியாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தருவாயாக! எல்லோரும் சந்தோசமாக ஒற்றுமையாக வாழச் செய்வாயாக! போரும் போராட்டமும், பகையும் பீதியும் நீங்கி சாந்தி சமாதானம் தோன்றச் செய்வாயாக! எங்கள் மண்ணில் நாங்கள் மீண்டும் சென்று எங்கள் உறவுகளோடு வாழச் செய்வாயாக! எங்கிருந்தாலும் சச்சிதானந்தத்தின் குடும்பம் நலமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கச் செய்வாயாக! ஆமீன்! ஆமீன்..! யாரப்பல் ஆலமீன்..!" இதயத்தின் பாரத்தை இறைவனிடம் இறக்கி வைத்தார் சவாஹிர்.

"அண்ணே!"

நீண்ட காலப்பழக்கமான அந்தக் குரல்கேட்டு சவாஹிரும் பெரோசாவும் வெளியே வந்தார்கள்.

சச்சிதானந்தம், பொன்மணி, மகள் மூவரும் நின்று கொண்டிருந்தார்கள். அவரால் அவரையே நம்பமுடியவில்லை. தன்னை ஒருதரம் கிள்ளிப்பார்த்துக் கொண்டு அவர்களை அன்பால் அள்ளிக் கொண்டார்.

"நீங்கள் வெளியேறிய கையோடு நாங்களும் கனடாவுக்குக் கிளம்பிட்டம்... வந்து ஒரு மாசம்... எப்படியோ தேடிக் கண்டு பிடிக்கிறதுக்குப் பெரும் பாடாப் போட்டுது."

"எப்படி சுகமா இருக்கிறீங்களா..?"

விசாரணை,. குசலம் வார்த்தைகள். எல்லாம் அன்பு சுமந்திருந்தது. அந்தக் குடிசை யாழ்ப்பாணமாக மாறியிருந்தது.

"உங்களின்ர நகைகள் உதில இருக்கு. பேங்ல போட்டு வெச்சதனால் தப்பியிருந்தது. கொழும்பில வீடு எடுத்து வெச்சிருக்கிறம். அனெக்ஸும் இருக்கு. இனிமேல் நீங்கள் இங்கிட்டு சீவிக்கத் தேவையில்ல. நகய வெச்சி ஏதாவது செய்யலாமில்லே...?"

சச்சிதானந்தம் கூறியவைகள் தேனாக ஒலித்தன. அந்தக் குடிசைக்குள் ஒலித்த சிரிப்பொலி இன்னும் மனிதர்கள் வாழ்கின்றார்கள் என்பதை விளக்கியது.

# அழகு?

எம். சுரேஷ்



மாப்பிள்ளை வீட்டார் அனைவருக்கும் ஆச்சரியம். அவர்கள் எதிர்பார்த்து வந்ததை விட பெண் மிகவும் அழகாக இருந்தாள். நல்ல வசதியான குடும்பம். எம்.ஏ படித்திருந்த மணப்பெண்ணை எல்லோருக்கும் பிடித்திருந்தது. இருப்பினும் மணமகன் வர்மா மட்டும் மௌனமாக இருந்தான்.

"என்னடா பேசாம இருக்கே? பொண்ணைப் புடிச்சிருக்கா?" தாய் கமலம் ஆர்வமாய்க் கேட்க, வர்மா அவள் காதுக்குள் ஏதோ கிசுகிசுத்தான்.

"என்னடா இந்த நேரத்தில!?"

"என்னம்மா பண்றது? ரொம்ப அவசரம்."

"பொண்ணைப் புடிச்சிருக்கான்னு சொல்லிட்டுப் போயேண்டா!"

"போயிட்டு வந்து சொல்றேம்மா!" காதுக்குள் மெதுவாகக் கிசுகிசுத்தபடியே லேசாய் நெழிந்தான் வர்மா. மகனின் அவசரத்தைப் புரிந்துகொண்ட கமலம், பெண்ணின் தகப்பனாரை அழைத்து மெதுவாக விசயத்தைச் சொல்ல...

அடுத்த நிமிடமே வர்மா சகல மரியாதைகளுடனும் வீட்டின் பின்புறமாக இருக்கும் 'டாய்லெட்டுக்கு' அழைத்துச் செல்லப்பட்டான். போகும்போது வீட்டை நன்கு அவதானித்தபடியே சென்ற வர்மா, ஐந்து நிமிடத்தில் 'வேலை'யை முடித்துவிட்டு மீண்டும் வரவேற்பறைக்கு வந்து, தாயின் காதில் மெதுவாக

"அம்மா! எனக்குப் பொண்ணைக் கொஞ்சம்கூடப் பிடிக்கல்ல!" சொன்னான். வர்மா சொன்னது கமலத்திற்கு அதிர்ச்சியாக இருந்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்,

"வீட்டுக்குப்போய் சொல்லியனுப்புறோம்," என்று சமாளித்துவிட்டு விடை பெற்றார்கள்.

★★★

வீட்டில் கமலம் தொண்டை கிழியக் கத்தினாள்:

"அந்தப் பொண்ணுக்கு என்னடா கொறச்சல்? நல்லா படிச்சிருக்கா, மகாலட்சுமி மாதிரி அழகா இருக்கா... அவ கிட்ட என்னடா கொற கண்ட?"

வர்மா மிக நிதானமாகப் பதிலளித்தான்:

"பொண்ணு அழகா இருக்கிற மாதிரி அவ வீட்டுச் சமையலறையும், டாய்லெட்டும் அழகா இல்லையே!"

"......."

"அழகெங்கிறது ஒடம்புல மட்டும் இருந்தா போதாதும்மா....."

கமலம் தலை குனிந்து கொண்டாள்.

# காகிதப் பூக்கள்

எஸ். சரோஜினி - கோட்டைக்கல்லாறு

என்றுமில்லாதவாறு அன்று அந்த அகதிமுகாம் களைகட்டியிருந்தது. மீண்டும் பிறந்த மண்ணுக்குத் திரும்புகின்ற பூரிப்பில் அதிலிருந்தவர்கள் தலைகால் புரியாமல் ஆடிக்கொண்டிருக்க அவர்களுள் ஒருத்தனாக நானும் ஒட்டிக்கொள்கிறேன். எத்தனை எதிர்பார்ப்புகளுடன் வந்த நாங்கள் ஒரு பாரிய பிரச்சனைக்கு முகம் கொடுத்து அகதிகளாக்கப்பட்டதை ஒருகணம் எண்ணிப்பார்க்கிறேன்.



ஏக்கங்கள் பெருமூச்சாக வெளிப்பட அமைதியாகச் செயல்படுகிறேன். "என்ன தம்பி ரெடியா?" என்று கேட்டுக் கொண்டு வந்த வடிவேல் மாஸ்டரின் குரல் என் மௌனத்தைக் கலைக்க நான் "ரெடிதான் மாஸ்டர்" கூறிக்கொண்டே அவரை ஒருதரம் அளவிடுகிறேன்.

முகாமினுள் முடங்கிய நாளிலிருந்து அவர்பட்ட வேதனை, அவரின் முகத்தை ஆக்கிரமித்துக்கொண்ட சோகச்சுவடுகள், தாரை, தாரையாக வழிந்து அவர் கன்னங்களில் கோடுபோட்ட கண்ணீர்த்துளிகள்- அங்கிருந்த பலதரப்பட்ட மக்களுக்குள் ஒரு வேறுபட்ட மனிதனாக அவர்காட்டிய துன்பக் கோலம் நினைத்துப் பார்த்தபோதே கண்களில் நீர்முட்டியது.

ஆனால் இன்று அவர் ஒரு குழந்தையாகத்துள்ளித் திரிவதைப்பார்க்கும் போது சோகம் தூசியாக காற்றோடு கலந்துவிட்டது. எங்களுக்காக இருபடகுகள் காத்திருக்க நீமுந்தி நான்முந்தி என்று ஒவ்வொருவராக ஏறிக்கொள்ள ஒருபடகு முற்றாக நிரம்பி வழிகின்றது.

"ஏன் மாஸ்டர் அதில நெருங்கிக் கொண்டு போகாமல் இந்தப்படகுக்கு வாங்கோவன்."

"இல்லை தம்பி- எவ்வளவு சீக்கிரம் போகவேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் போக வேண்டும்," என்றார்.

இருபடகுகளும் ஒன்றன்பின் ஒன்றாகப் பயணம் செய்துகொண்டிருந்தபோது திடீரென்று செவிப்பறை அதிரும்படியான ஒரு சத்தம், அதைத் தொடர்ந்து பேரிடியாய் பலசத்தங்கள் மிகவும் துரிதகெதியில் வந்த ஷெல் வீச்சினால் முன்னால் போய்க் கொண்டிருந்த படகு கண்ணிமைப்பதற்குள் சிதறி நீரோடு நீராகக் கலந்து உயிரிழந்து போக, அடுத்தபடகு நிலைதடுமாறி கவிழ்ந்து விட அதற்குள் இருந்தவர்களுடன் நானும் திக்குமுக்காடிப் போகிறேன். படகிலே பயணம் செய்துகொண்டிருந்த மனிதங்களில் பல சடலங்களாக வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்க ஓரளவுக்கு நீச்சல் தெரிந்த நான் அரை மனிதனாகக் கரையேறினேன்.

மீண்டும் ஒரு அகதியாக ஆக்கப்பட வேதனை விம்மலாக வெடித்தது.

"எவ்வளவு சீக்கிரம் போவேண்டுமோ! அவ்வளவு சீக்கிரம் போக வேண்டும்" என்று வடிவேல் மாஸ்டர் கூறியவார்த்தைகள் ஈட்டியாக என் செவிகளைத் துளைத்துக் கொண்டிருந்தன.

வடிவேலு மாஸ்டர் போய்விட்டார். திரும்ப முடியாத பயணம்.

# உலரும் மலர்கள்

பாண்டியூர் - கனி



வானத்தில் பொத்தல் விழுந்தது போல் மழை ஓயாமற்பெய்து கொண்டிருந்தது. இற்றுப் போயிருந்த கூரையால் அந்த மழையை தாக்குப்பிடிக்க முடியவில்லை. ஒழுக ஆரம்பிக்கவே அந்த இடங்களில் பாத்திரங்களை வைத்து, கூரையில் பொலித்தீன் தாள்களைச் செருகிக்கொண்டிருந்த வைதேகியின் கவனத்தை "அம்மா, பசிக்கிதம்மா" என்று சின்னக்குரல் ஈர்த்தது. அது அவளது ஐந்து வயது மகனுக்குரியது.

பழஞ்சோற்றைப் பிசைந்து ஊட்டிவிட்டபடி, தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த இரண்டாவது குழந்தை அழுவதை உணர்ந்து ஒரு கையால் தொட்டிலை ஆட்டிவிட்டுக்கொண்டாள். வறுமைக்கோட்டைத் தாண்டமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தது வைதேகியின் குடும்பம். உயர்தரம் வரை படித்திருந்தும் அவளுடைய கணவனுக்கு உத்தியோகம் கிடைக்கவில்லை. சிலருக்குப் போட்டிப் பரீட்சைகளில் தொழில் கிடைத்திருக்கிறது. இன்னும் சிலருக்குச் செல்வாக்குகளிலும், பலருக்குப் பணவாக்குகளிலும் வேலை கிடைக்கிறது. இவர்களிடம் பணவாக்கு இல்லை. அது இருந்தால்தானே செல்வாக்கு? அதுவுமில்லை. கூலிவேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றும் நிலையில் வைதேகியின் கணவன் இருக்கிறான்.

தைப்பொங்கலன்று அயல்வீட்டு சறோஜாவின் குழந்தைகள் புதிய ஆடைகள் அணிந்து, பட்டாசு கொளுத்தி விளையாடியதை வைதேகியின் மகன் ஒரு ஓரமாக நின்று வேடிக்கை பார்த்த காட்சி அவள் விழிகளுக்குள் விரிந்து மறைந்தது. சறோஜாவின் பிள்ளைகளோடு தனது மகனை ஒப்பிட்டுப்பார்த்தபோது வைதேகிக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. ஒரே வயதில் எத்தனை வேறுபாடுகள்? இந்த ஏற்றத்தாழ்வுகள் தனது மகனின் பிஞ்சுமனதை எந்த அளவிற்குப் பாதிக்குமோ? என்று எண்ணிப்பார்த்தபோது வைதேகியின் கண் ஓரம் கசிந்தது.

இளமைக்கால வறுமை கொடுமையானது. மனிதன் கவலை என்ற சொல்லை அறியாதவரைதான் மகிழ்ச்சி என்ற சொல்லுக்கு அர்த்தமிருக்கும். பிள்ளைப் பருவந்தான் பொங்கல், வருஷம் என்றெல்லாம் குதூகலிக்கும் பருவம்.

ஒருவயதுக்குமேல் அந்த ஆசைகளெல்லாம் வருவதில்லை. வாழ்க்கைப் புயலில் சிக்கத் தொடங்கிவிட்டால் இந்த ஆசைகள் உருக்குலைந்து போய்விடும். சின்னஞ்சிறு வயதுகளில்தான் இந்த சந்தோஷங்கள். இவற்றையும் அனுபவிக்க முடியாதபடி இந்த ஏழை வைதேகியின் வயிற்றில் வந்து பிறந்துவிட்டாயே மகனே.. என்று அவளது மனம் ஊமையாய் புலம்பிக் கொண்டிருந்தது.

"வைதேகி, மழைவிட்டிருக்கு. மன்சூர், வீட்டுக்குப் பெயின்ற் பண்ற வேல இருக்கெண்டு சொன்னவன். போய்ப்பாத்திற்று வாறன்," என்று கணவனின் குரல் கேட்டு, "எங்க? மருதமுனைக்கா?" என்றவளுக்கு பதில் கூறாமலே வீதியில் இறங்கி நடந்தான் அவளது கணவன்.

சில மணி நேரங்கள் முடிந்திருக்கும். வீதி விறுவிறுப்பானது. எல்லோர் முகத்திலும் கலவரம் படிந்திருந்தது.

"மருதமுனையில் குழப்பமாம்! பொலிசைச் சுட்டுப்போட்டார்களாம். பஸ்ஸில் போன சனத்துக்கும் பிரச்சனையாம்" கதைகள் பரவிக்கொண்டிருந்தன.

தலையில் சம்மட்டியால் ஓங்கி அடித்தது போலிருந்தது வைதேகிக்கு. "க..டவுளே! மருதமுனையிலையா குழப்பம்?" என்றவளின் கால்களுக்குக்கீழே பூமி நழுவிக்கொண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

## இலக்கிய நயம்

## புகழ் மயக்கம்

தருவது ரசிகன்



"இளையராணி நீதான்-என்
இதய ராணியும் நீதான்.
புதிய ராணியும் நீதான்-என்
மதியை மயக்கும் ராணியும் நீதான்!

மன்னன் நெடுமாறன் புகழ்ந்தான்.
மூத்த ராணிமீது மோகம் கசந்தது-சபையில்
ஆடவந்த பாவைமீது மோகம் படர்ந்தது!

"ஆடவந்தாயோ-என்னை ஆள வந்தாயோ
சூட வந்தாயோ-பூவே நான் சூட வந்தாயோ?"
மயங்கிய மன்னன் மாலை சூடினான்.
மற்றொரு ராணியாய் பக்கத்திலிருத்தினான்.

மூத்த ராணி சோகத்தில் நீந்தினாள்
இளையராணியோ மன்னனில் ஆடினாள்.

"பட்டத்துராணியை புழுதியில் எறிவதா
ஆட வந்த மயிலுக்கு ஆளும் உரிமையா?"
வினா எழுப்பியவர்கள் வீசி எறியப்பட்டனர்.

நெடுமாறனுக்கு புகழ்ச்சியில் ஆசை
புகழ்ந்தால் பொருள் கொடுப்பான்
புத்தி சொன்னால் பொங்கி எழுவான்

எடுத்துச் சொன்னவர்கள்-மன்னன்
மனதில் இருந்து எடுத்தெறியப்பட்டனர்.
கூடியிருந்து கெடுக்க வந்தவர்கள்
மன்னன் மனதில் குடியிருந்தனர்.

வந்தான் புலவன் செங்குன்றன்
வரும்போதே வளைந்துதான் வந்தான்

"வில்லாக வளைகிறீரே-உமது
உடல் ஒடிந்துவிடாதா?"
மன்னன் நகைத்தான்.

"வேந்தன் நீர்-நான் அடிமை
வணங்கும் முறையில் பணிவு வேண்டாமோ?
வில்லாய் வளைவேன்-வளைந்த
வில்லில் வணக்கம் பூட்டுவேன்.
வணக்கம் மன்னா! வாழிய நீவிர்!"

"வில்லில் அம்பும் பூட்டலாம்-மனித
வில்லில் அன்பும் பூட்டலாம்!
அப்படித்தானே அருமைப் புலவரே?"

"ஆமாம் மன்னா! வளைந்த வில்லில்
அம்பிருக்கும்!-என்
வளைந்த உடலில் அன்பிருக்கும்!"

புலவனும் மன்னனும் நந்தவனம் சென்றனர்.
மேகம் கறுத்து பூமியை மறைத்தது.
வானம் நோக்கிய மன்னன்-தன்
பக்கமிருந்த புலவரை நோக்கினான்.

"மேகம் கறுக்கிறது பாரும்-நீர்
இதற்கொரு உவமை தாரும்!"

புலவன் உடனே உதடு திறந்தான்;
"மூத்த ராணியின்
முகம் போல் இருக்கிறது!"

மன்னன் முகத்தில் மகிழ்ச்சி மின்னல்!
மேகம் திரண்டு இடியாய் வெடித்தது.

"இந்த இடிக்கும்-நீர்
தாரும் உவமை!"

"மூத்த ராணியின்
சிரிப்போசை இதுதான்!"
புலவன் தாடிக்குள் சிரித்தான்.

மேகம் மறு நொடியே
மின்லைடித்து பூமியைப் பார்த்தது.

மன்னன் உடனே புலவனை
நோக்கினான்;
"இந்த மின்னல் எப்படி இருக்கிறது?"
புலவன் கண்களைச் சிமிட்டினான்.
"இளையராணியின் இனிய இதழ்களின்
கனவுப் புன்னகை!"
என்று சொன்னான் இரகசியக் குரலில்!

மன்னன் முகம் சூரியனானது
"புலவா! புலவா!- புதையல்
உன்னிடம் கருத்துப் புதையல்!
நீர்தான் நண்பன!- யார்தான்
இப்படி என் மனம் அறிவார்!
நீர்தான் அறிந்தீர், நீர்தான்
எந்தன் நண்பனாய் உயர்ந்தீர்!"

மன்னன் சபையில்
ஆஸ்தான புலவன் அவனேயானான்.

"மன்னா! தீது தீது-மாற்றான்
சபையில் பாடியிருந்தவன் இவன்!
உம்மை நேற்றுவரை-தூற்றிப்
பாடித் திரிந்தவன் இவன்!"
அமைச்சர் நா துடி துடித்தது!

"போதும் நிறுத்தும்-வளைந்த
வில்லாய் வணக்கம் சொல்கிறான்.
திருந்தி வந்து வருந்தி நிற்கிறான்
விரும்பிச் சேர்த்தேன்-நட்பு
அரும்பி நிற்கிறது!"
மன்னன் அமைச்சரை அடக்கினான்.

நகர்வலம் செல்ல புறப்பட்ட மன்னன்
இடையினில் திரும்பி அரண்மனை வந்தான்.
இளையராணியின் இதழ்களில் நீராட
அந்தப்புரத்துக்கு அழைத்தது மனது!

"பொல்லாத புலவர் நீர்-பாடல்
புனைவதில் மட்டுமல்ல பாவையரை
வளைப்பதிலும் வல்லவர் நீர்!"
உள்ளேயிருந்து பேச்சும் நகைப்பும்.
மன்னன் மனதில் இடி இறங்கியது.

"கடமையை மறக்கலாமா புலவரே
பாட்டையாளும் நீர் நாட்டையாள்வது
எப்போது புலவரே?"

"மஞ்சத்தில் மலர்க்கொடி
உன்னை மறப்பது எப்படி?
நெஞ்சத்தில் இரு கணைகள்
என்னைக் கொல்வது ஏனடி!
கடமையை செய்ய முன்னர்
கனிகளால் பசி தீரடி!"

"மரண தேவதை
மன்னனை அழைக்கட்டும்!
புலவர் உம்மை நான்
மஞ்சத்தில் அழைக்கிறேன்!"

"மஞ்சமும் ஒன்றுதான்-உன்
நெஞ்சமும் ஒன்றுதான்
கண்களில் காமன் வில்-என்
நெஞ்சத்தில் பாய்ந்ததே!
கொஞ்சம் நீ மருந்திடு-உன்
இதழ்களால் மருந்திடு!"

களுக்கென்ற சிரிப்பொலியும்
இச் என்ற இதழ் ஒலியும்
மன்னன் செவியில்
காய்ச்சிய ஈயமாய் பாய்ந்தன!

"போதுமா புலவரே!-தந்தது
மறக்குமா புலவரே?"

"மன்னனை மயக்கிய
கணைகளின் ராணியே!
பள்ளியறையில் மன்னன் உன் பிடியில்
பாராளும் சபையில் மன்னன் என் பிடியில்
நீ அவனை ஆடி வீழ்த்தினாய்-நான்
அவனை புகழ் பாடி வீழ்த்தினேன்!"
புலவன் நகைத்தான் நச்சுப் பாம்பாய்!

இந்தப் புலவனின் காதலியை
அந்தப் புரவலன் ஆளலாமா?"

"கூடாதுதான் கண்மணி!- ஆயினும்
கூடித்தானே கெடுக்க வேண்டும்!"

"விலை அதிகம்!"
"விலை அதிகம்தான்- ஆனால்
இந்த வலைக்குத்தானே
பலம் அதிகம்!"

"நம் திட்டம்
மன்னனுக்கு தெரிந்துவிடாதா?"

"வணங்கினேன் இரங்கிவிட்டான்
புகழ்ந்தேன் மயங்கிவிட்டான்
நாள் வரும் பெண்ணே!- அவனை
நாம் வீழ்த்தி விடலாம்!"

மன்னன் நெஞ்சில் பிரளயம்
சிந்தையில் திருக்குறள் உண்மை உரைத்தது.

"வில்லின் வணக்கம்
அம்பு தொடுப்பதின் ஆயத்தமாகும்.
பகைவர் சொல்லின் வணக்கமும்
அடுத்துக் கெடுப்பதின் ஆரம்பமாகும்!
இரண்டையும் நன்மையாய்
நினைப்பது கெடுதி!"

"சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க
—வில் வணக்கம்
தீங்கு குறித்தமை யான்"

குறள்-827-அதிகாரம்-83

---

அப்போது ஒரு குறும்புக்கார மாணவன் குறுக்குக் கேள்வி கேட்டான்:

"சில பண்டங்களுக்கு உப்பே இல்லையே. லட்டு போன்ற இனிப்பு வகைகளிலும் உப்புக் கிடையாது. அதற்காக அவற்றையெல்லாம் குப்பையில் போடலாமா?" என்று கேட்டான்.

சில ஆசிரியர்கள் என்றால் மாணவனை முறைத்திருப்பார்கள். அந்த ஆசிரியர் அமைதியாகப் பதில் சொன்னார்:

"உண்மையில் உப்பு இல்லாத பண்டமே கிடையாது. லட்டு, ஜிலேபி போன்ற இனிப்புக்களிலும் உப்பு இருக்கிறது. அதுபோல அறுசுவைப் பதார்த்தங்களிலும் உப்பு இருக்கிறது. எப்படித் தெரியுமா? 'இதோ பார்' என்று கரும்பலகையில் எழுதிக் காட்டினார்.

இன் + உப்பு = இனிப்பு
கச + உப்பு = கசப்பு
துவர் + உப்பு = துவர்ப்பு
எரி + உப்பு = எரிப்பு
கை + உப்பு = கைப்பு
புளி + உப்பு = புளிப்பு"

●●

* மத்தியஸ்தம் தீர்வுக்கு உதவுமா?

கே. பஸ்தியாம்பிள்ளை, மன்னார்.

அப்படி உறுதியாகச் சொல்லிவிடமுடியாது. மத்தியஸ்தம் என்பது சமாளிப்பிலும் முடியலாம். தீர்வு காணவேண்டுமானால் இரண்டில் ஒன்று முடிவு பண்ணியாக வேண்டும்.

இரண்டாவது உலகப்போர் நடைபெற்ற நேரத்தில் ஒரு விருந்து நடைபெற்றது.

விருந்தில் அமெரிக்க அதிகாரிகளுக்கும், பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும் இடையே ஒரு பிரச்சனை எழுந்தது.

"உணவு உண்டபின்னர்தான் மது அருந்தவேண்டும் என்றார்கள்," அமெரிக்கர்கள்.

"உணவு உண்ண முன்னர் மது அருந்த வேண்டும்," என்றனர் பிரிட்டிஷ்காரர்கள்.

அப்போது ஒரு பிரமுகர் குறுக்கிட்டு, "அமெரிக்கர்களை கௌரவிக்க உணவுக்கு முன்பாகவும் மது அருந்துவோம்; பிரிட்டிஷ்காரர்களைக் கௌரவிக்க உணவு உண்ட பின்னும் மது அருந்துவோம்," என்றார்.

இரு தரப்பாரும் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டார்கள். அதுதான் மத்தியஸ்தம்!

## சிந்தியா பதில்கள்

* ஹாய் சிந்தியா! ஜெயலலிதா மேடம் எப்படி இருக்கிறார்?

செல்வி சி. தனுஷியா, கொழும்பு-09.

தினம் ஒரு அறிக்கையும் கையுமாக.

●●

* சுலபமாக தூக்கம் வர என்ன செய்யலாம்?

பி. விக்னேஸ்வரன், கண்டி.

கவலைகள், கற்பனைகள் அனைத்தையும் 'துக்காடா' என்று கழற்றி வைத்துவிட்டு படுத்தால் 'அக்காடா' என்று தூக்கம்வரும்.

●●

* எம்.ரி.வியில் இரவு 11.30 மணிக்கு சன் ரி.வி. திரைப்படம் காண்பிக்கிறார்களே! அங்கும் இதே நேரத்தில்தான் காண்பிப்பார்களா?

திருமதி பத்மா கணேசன், தெகிவளை.

சன் ரி.வியில் இரவு 9.30க்கு காண்பிக்கப்படும் திரைப்படத்தை பதிவுசெய்துவைத்து இங்கே 11.30க்கு காண்பிக்கிறார்கள். மக்களுக்கு விழிப்பூட்டும் நல் முயற்சி!

●●

* வெற்றிபெறும் சிலர் தோல்வி அடைந்தவர்களைப் பார்த்துக் கேலி செய்யலாமா? அது தலைக்கனம் தானே?

வி. மஜீத், புத்தளம்.

ஒரு அரேபியப் பொன்மொழி என்ன சொல்கிறது தெரியுமா?

"தனக்குப் பின்னால் ஓடிவரும்
குதிரையைப் பார்த்து
சந்தோசப்படும் குதிரை
பந்தயத்தில் ஜெயிக்காது!"

●●

* டியர் சிந்தியா! குஷ்பு மீண்டும் கலக்கத் தொடங்கியிருக்கிறாரே?

செல்வி ரஞ்சனி வேலாயுதம், கொழும்பு.

ஆனாலும் இனி கோயில் கட்ட மாட்டார்கள். குஷ்புவும் கவுனில் இருந்து சேலைக்கு மாறிவிட்டார்.

●●

* பொங்கல் திரைப்படங்களில் முன்னணியில் இருக்கும் படம் எது?

எம். ரவிகரன், மொரட்டுவ.

படித்தவர்கள் அதிதமாக உள்ள ஏரியாக்களில் (ஏ சென்டர்) 'மின்சாரக் கனவு.' கிராமப்புறங்களில் (சி சென்டர்) 'பாரதிகண்ணம்மா.'

* டியர் சிந்தியா! பாகிஸ்தானின் அடுத்த பிரதமர் யார்?

கே. ரகுராம், கொழும்பு-12.

இம்ரான்கான் அல்ல.

●●

* உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் பொதுஜன முன்னணியில் பிளவு வருமா?

எம். முஹமட், பாணந்துறை.

ஓர் ஓரமாய் நின்று தேர்தலை வேடிக்கை பார்க்க லலித் அணி முடிவு செய்திருப்பதும் கிட்டத்தட்ட பிளந்த மாதிரித்தான்!

●●

* 'இருவர்' படம் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன சிந்தியா? பிரகாஷ்ராஜின் நடிப்பு எப்படி?

சி. ரமணி, கொழும்பு-06.

இருவரில் கவர்ந்தவர்கள் இருவர். ஒருவர் மோகன்லால். இன்னொருவர் ஐஸ்வர்யாராய். கருணாநிதி பாத்திரம் பிரகாஷ்ராஜுடன் ஒட்டவேயில்லை. படம் பிரமாண்டம்தான்; ஆனால் பிரமாதமல்ல.

●●

* நடிகை ஸ்ரீதேவியின் திருமணச் செய்தி வியப்பளித்ததா?

என். நவ்[illegible]ப்கான், மாத்தளை.

சிரிப்பளித்தது. கிசுகிசுக்களை மறுத்துவிட்டு, இப்போது பொசுக்கென்று உண்மையைச் சொன்னதால்!

●●

* கலைஞர் கருணாநிதி இனிமேல் திரைப்படங்களுக்கு வசனம் எழுதுவாரா?

ஆர். பாண்டியன், பண்டாரவளை.

எழுதுவாரோ தெரியாது; ஆனால் இப்போது திரைப்படங்களுக்கு விளம்பர வசனம் எழுதிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். பட விளம்பரங்களோடு அவர் கைப்பட எழுதிய பாராட்டையும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன, பட நிறுவனங்கள்.

●●

* டியர் சிந்தியா! ஒரு கடி ஜோக் சொல்லுங்கள்?

க. மகேந்திரன், மட்டக்களப்பு.

குடிசைகளே இல்லாத நாடு ஒன்றின் பெயர் சொல்லுங்கள் பார்க்கலாம்?

'பங்களா'தேஷ்.

●●

* எதற்கெடுத்தாலும் குறுக்குக் கேள்வி கேட்பவர்களை என்ன செய்யலாம்?

மா. அருமைநாதன், திருக்கோணமலை.

குறுக்குக் கேள்விகளை பொறுமையாக நேர்படுத்திப் பாருங்களேன்!

ஒரு குட்டிக் கதை.

ஓர் ஆசிரியர் பொறுமையாகப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

"உப்பில்லாத பண்டம் குப்பையிலே," என்று ஆசிரியர் பாடம் நடத்தினார்.



* தென்னாபிரிக்காவில் இந்திய அணியின் ஆட்டம் எப்படி?

சி.சர்வேந்திரன், வவுனியா.

பயங்கரமான ஆட்டம்; அதன் பெயர்: ஈடாட்டம். ஸிம்பாப்வே அணியிடம் கூட தோல்வி கண்டிருக்க வேண்டியது; அந்தக் கடைசிப் பந்தை ஸிம்பாப்வே வீரர் 'வைட்' பந்தாக வீசியதால் வெற்றி தோல்வியின்றி இந்திய அணி தப்பிக்கொண்டது.

●●

ஸ்போர்ட்ஸ்

## ஓய்வு பெறும் பந்து வீச்சாளர்

அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான கிரேய்க் மக்டர்மட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

31 வயதான மக்டர்மட் 71 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 291 விக்கெட்டுக்களை வீழ்த்தி, டென்னிஸ் லில்லிக்கு அடுத்தபடியாக அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய அவுஸ்திரேலிய வீரர் என்ற பெருமைக்குரியவர். டென்னிஸ் லில்லி 70 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 355 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

தனது 19வது வயதில் அவுஸ்திரேலிய அணியில் முதன் முதலாக இடம் பிடித்த மக்டர்மட், கடைசியாக சென்றவருடம் இந்தியாவில் நடைபெற்ற உலகக்கோப்பைப் போட்டியில் கென்யாவுக்கு எதிராக விளையாடினார்.



## ஓட்ட வீரர் ஓய்வு

அமெரிக்காவின் பிரபல ஓட்டப்பந்தய வீரர் கார்ல் லூயிஸ் ஓய்வு பெறவுள்ளார். வரும் ஜூன் மாதம் ஹோஸ்டனில் நடக்கவிருக்கும் போட்டிகளுக்குப்பின் ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார்.

"நான் இன்னும் நிறையப் போட்டிகளில் பங்கேற்க வேண்டும் என்று பலரும் என்னை ஊக்கப்படுத்தி வருகிறார்கள். ஆனால் ஜூன் மாதத்திற்குப்பின் ஓய்வு பெறப்போவதாக நான் முதல் முறையாகத் தெரிவித்துள்ளேன்.

உடல் ரீதியாக என்னால் இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குப் போட்டியில் பங்கேற்க முடியும். ஆனால் மனரீதியாக என்னால் முடியாது," என்று கூறியுள்ள கார்ல் லூயிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் 9 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார்.

## முதலிடத்தில் அக்ரம்

சீட் (CEAT) சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் தரவரிசையில் பாகிஸ்தான் அணியின் கப்டன் வாஸிம் அக்ரம் முதலிடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்தபடியாக இந்திய வேகப்பந்து வீச்சாளர் வெங்கடேஷ் பிரசாத் இருக்கிறார். வாஸிம் அக்ரம் 83 புள்ளிகளும், வெங்கடேஷ் பிரசாத் 76 புள்ளிகளும் பெற்றுள்ளனர்.



இவர்களுக்கு அடுத்தபட்டியாக 3ம் இடத்தில் பாகிஸ்தான் வீரர் மொய்ன் கானும், 4ம் இடத்தில் இந்திய அணியின் கப்டன் டெண்டுல்கரும் முறையே 68,61 புள்ளிகளுடன் உள்ளனர்.

## 'சார்க்' கிரிக்கெட்

இம்மாதம் 19ம் திகதி பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் நான்கு நாடுகள் கலந்து கொள்ளும் 'சார்க்' கிரிக்கெட் போட்டி தொடங்கவுள்ளது.

இம்மாதம் 19ம் திகதி தொடங்கி 28ம் திகதி வரை நடைபெறும் இந்தப் போட்டிகளில் இலங்கை-ஏ, இந்தியா-ஏ, பாகிஸ்தான்-ஏ, பங்களாதேஷ் ஆகிய அணிகள் பங்கு கொள்கின்றன.

அஜய் சர்மா தலைமையிலான இந்தியா-ஏ அணிக்கு, இந்திய முன்னாள் கப்டனும், தொடக்க ஆட்டக்காரருமான தமிழ்நாட்டு வீரர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்தான் அவர்



கே.ஆர். விஜயா



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 69

## போர்க்களம் புகுந்த இந்திரசித்தன்

இராமதூதனாகிய ஆஞ்சநேயர் மிக்க மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் காணப்பட்டார். இராவணனுடைய சேனைத் தலைவர்கள் ஐவரையும் ஒவ்வொருவராகக் கொன்றதுடன் அவர்கள் திரட்டிவந்த நால் வகைப் படையினையும் அனுமன் அழித் தொழித்தார். இதனைச் செய்து முடித்த பின்னர் அசோகவனத்தின் தோரண வாயில் வளைவின் மீது ஏறி நின்று சுற்றிலும் கண்ணோட்டம் செலுத்தினார். எங்கும் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. வீரர்



களின் சடலங்கள் அவ்வெள்ளத்தில் மிதந்து சென்றன. யானைகளும் குதிரைகளும் இரத்த வெள்ளத்தில் புரண்டன. ஆயிரக்கணக்கான தேர்களின் சிதைவுகளும் மிதந்தன.

இக்காட்சியைப் பார்த்த ஆஞ்சநேயருக்கு மேலும் பொருத வேண்டும் என்ற அவா உண்டாயிற்று: 'இராவணனே போரிடவரு வானானால் எவ்வளவு நன்றாயிருக்கும்?' என்று எண்ணினார். இந்த எண்ணம் தோன்றியதும் அவருடைய மார்பும் தோள் களும் பூரித்தன. கைகள் துடித்தன. கால் களின் தசைநார்கள் புடைத்தன.

போர் முனையிலிருந்து தப்பி ஓடிய அரக்கவீரர்கள் இராவணனிடம் சென்று "மகா பிரபு! தங்கள் தானைத் தளபதிகளான துர்க்கதரன், விருபாட்சன், யூபாட்சன், பிரகசன் மற்றும் பாசகர்ணன் ஆகிய ஐவரை யும் அந்தக் குரங்கு கொன்றுவிட்டது. கடல் போன்ற சேனையையும் கடுகதியில் அழித்து விட்டது," என்று முறையிட்டனர்.

### அட்சகுமாரன்

இச்செய்தியைக் கேட்டதும் தானே சென்று அக்குரங்கின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்று இராவணன் கருதுகிறான். இதனை அறிந்த இராவணனின் இளைய மகனான அட்சகுமாரன் தந்தையை நெருங்கி, ஒரு அற்ப வானரத்தின் கொட்டத்தை அடக்க அரசனே செல்வது முறையாகாது என்று தடுக்கிறான்.

அட்சகுமாரனின் கூற்றை கம்பர் பெருமான் கூறும் முறையைப் பார்ப்போம்:

**முக்கணான் ஊர்தி அன்றேல்**
**மூன்று உலகு அடியின் தாயோன்**
**ஒக்க ஊர் பறவை அன்றேல்**
**அவன் துயில் உரகம் அன்றேல்**
**திக்கயம் அல்லதேல் புன்**
**குரங்கின் மேல் சேறி போலாம்**
**இக்கடன் அடியேற்கு ஈதி**
**இருத்தி ஈண்டு இனிதின் எந்தாய்!**

*(சுந்தர காண்டம்-934)*

**பொருள்:**

*"என்னுடைய தந்தையே! முக்கண்ணனான சிவபிரானுடைய வாகனமான எருதுடன் தாங்கள் போரிட முற்படவில்லை; மூவுல கங்களையும் தனது அடிகளால் அளந்த திருமாலின் வாகனமான கருடனுடன் போரிடப் போகவில்லை; அந்தத் திருமால் படுத்துறங்கும் ஆதிசேடன் எனும் பாம்புடன் போரிடப் போகவில்லை; நீங்கள் போரிடத் துணிந்தது ஒரு சாதாரண குரங்கு. அத்தகைய அற்பப் பிராணியுடன் போரிடத் தாங்கள் முற்படுவது தங்கள் தகுதிக்கு உகந்ததல்ல: அப்பணியினை எனக்கு விட்டு விட்டுத் தாங்கள் இங்கேயே கவலையற்று இருங்கள்.*

—●●●—

இவ்வாறு அட்சகுமாரன் கூறியதுடன், "முன்பு இந்திரனின் ஆணவத்தை நானே சென்று அடக்கிவர நினைத்தேன். அப் பணியினை என் அண்ணன் இந்திரசித்திடம் ஒப்படைத்தீர்கள். அதனால் எனக்கு மனக் குறை ஏற்பட்டது. இப்பொழுது இந்தக் குரங்கைப் பிடித்து இழுத்து வரும் பணியை என்னிடம் ஒப்படைத்து என் மனக்குறையைப் போக்க இடம் கொடுங்கள்," என்று கோரினான்.

தன் மகனின் வேண்டுகோளுக்கு இசைந்த இராவணன், போதிய படைகளுடன் சென்று வானரத்தின் கொட்டத்தை அடக்கி வருமாறு பணித்தான். அட்சகுமாரனும் மாபெரும் சேனை புடைசூழ போருக்குப் புறப்பட்டான்.

அட்சகுமாரனைத் தொலைவிலிருந்து அவதானித்த ஆஞ்சனேயர், அவனுடைய எழிலும் வீரமும் பொருந்திய உருவத்தைக் கண்டதும், இவன் இராவணனாக இருக்க லாமோ என்று முதலில் ஐயுற்றார். பின்னர் இந்திரனை வென்ற இந்திரசித்தனாக இருக் குமோ என்று சந்தேகப்பட்டார். ஆஞ்சனேயர் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்போதே அட்சகுமாரன் தாமதமில்லாமல் தனது வில்லில் நாண்களைப்பூட்டி ஆஞ்சநேயர்

### இராஜகுமாரன்

மீது சரமாரியாகப் பொழிந்தான். அவற்றை யெல்லாம் தனது கைகளால் பிடித்து ஒடித்து எறிந்தார். இருப்பினும் அவருடைய திருமேனி யில் சில பாணங்கள் பட்டுத்தெறித்தன. அதனால் அவருடைய அவயவங்களிலிருந்து இரத்தம் வழிந்தது. இரத்தத்தைக் கண்டதும் அனுமனுடைய கோபம் அடங்காத் தீபோல் உக்கிரமாக எழுந்தது.

### அழிந்தன அசுரப்படைகள்

அட்சகுமாரனின் படையில் வந்த அனைத்து வீரர்களையும் அதம் செய்தார் ஆஞ்சநேயர். யானைகள், குதிரைகள் யாவும் உயிரற்று வீழ்ந்தன. இரதங்களும் சுக்கு நூறாக நொருங்கின. தன்னந்தனியனாக நின்ற அனுமன் விண் முட்டத் தன் உருவை வளர்த்து வீராவேசத்துடன் நின்றார்.

அட்சகுமாரனின் தேரை ஆஞ்சநேயர் உடைத்தெறிந்தார். தேர்ப்பாகன் மாண்டான். தேரை இழுத்து வந்த குதிரைகள் மாண்டன. இருப்பினும் அட்சகுமாரனும் சளைக்க வில்லை. உடைந்த தேரிலிருந்து குதித் தெழுந்து ஆஞ்சநேயருடன் மல்யுத்தத்திலீடு பட்டான். கணநேரத்தில் அட்சனை ஆஞ்சநேயர் பிணமாக்கி நிலத்தில் வீசினார்.

இராவணனின் இளைய புதல்வன் மாண்டசேதி பேரிடிபோல் அரசவைக்கும் அரண்மனைகளுக்கும் அந்தப்புரத்துக்கும் எட்டியது. இராவணனுக்கு கடும் கோபத் துடன் கரை கடந்த துக்கமும் ஏற்பட்டது. கண்களிலிருந்து பீறிட்டுக் கிளம்பிய கண்ணீரை அவன் முகத்தில் தோன்றிய கோபக் கனல் உடனடியாக உலர்த்திவிட்டது. அந்தப்புரத்திலிருந்த இராவணனின் தர்ம பத்தினி மண்டோதரியும் ஏனைய பெண்டிரும் இராவணன் இருந்த இடம் தேடி வந்து அவன் தாள் பணிந்து அழுது புரண்டனர்.

### இந்திரசித்து

இந்திரசித்து தன் தந்தை யின் தாள் பணிந்து, தானே நேரடியாகச் சென்று வான ரத்துக்கு நல்ல பாடம் புகட் டப் போவதாகவும் விடை கொடுக்குமாறும் வேண்டி னான். மகனை ஆரத்தழுவிய இராவணன், "உன் அரு மைத் தம்பியையும் நமது அரக்கர் குலப்பெரும் படை யையும் அழித்த அந்தக் குரங்கை நான் பார்த்தாக வேண்டும். ஆத்திர மேலீட் டால் அதனை அழித்து விடாதே! இத்தகைய வீரச் செயல்களை ஒரு சாதாரண வானரத்தால் புரியமுடி யாது. அவன் யார்? யாரால் ஏவப்பட்டான்? இங்கே அவன் வரக்காரணம் தான் என்ன? என்பனவற்றுக்கெல் லாம் விடைகாணவேண்டும். அவனைக் கட்டி இழுத்துவா!" என்று கூறினான்.

இந்திரசித்து, ஏற்கனவே அவன் தம்பி அட்சகுமாரன் திரட்டிச் சென்ற படைகளைப் போல் பிரமாண்டமான படைகளுடன் சென் றான். மாண்டு மடிந்துபோன படை வீரர் களின் மத்தியில் தனது தம்பியான அட்சகுமா ரனின் சடலத்தைக் கண்டெடுத்து ஆற்றொ ணாத் துயரத்துடன் அழுதான். "எனது தம்பியை வதைத்த குரங்கினை எப்படியும் பழி வாங்கியே தீருவேன்!" என்று சபதமெடுத்தான்.

★★★

விரைந்து முன்னேறி வரும்படைகளை ஆஞ்சநேயர் பார்த்தார். 'இத்தனை வீரர்களும் யானை, குதிரை, தேர்கள் ஆகியனவும் அழிந்தும் அசுரர்களுக்கு புத்தி பிடிபடவில்லையே! உடனடியாகவே மற்றுமோர் அணி வரு கிறதே! வரட்டும் வரட்டும்!' என்று தனக்குள்ளே கருவிக் கொண்டு படை அணி களைக் கூர்மையாகக் கவனித்தார். அழகான தேரின் மீது நடுநாயகமாக வரும் வீரனைக் கண்டதும், 'அவன் வேறு யாருமல்ல; இந்திரசித்தனே!' என்று கண்டு கொண்டார்.

### இந்திரசித்தனின் இறுதித் தீர்மானம்

'இந்திரசித்தன் இணையற்ற வீரன், என்பதை அனுமன் ஏற்கனவே அறிந்திருந் தார். 'அத்தகைய வீரனை வீழ்த்தினால், இராவணன் நிச்சயமாக ஒரு நல்ல முடிவுக்கு வந்தேயாக வேண்டியிருக்கும். பெரும் படை யும் தன் புதல்வர்களும் அழிந்துபோன பின் தான் மட்டும் இருந்து என்ன பயன், என்று எண்ணி, தன் தீய செயல்களை விட்டொழித்துவிடுவான். சீதாப்பிராட்டி யாரை உடனடியாகவே விடுவித்து, இராம பிரானிடம் சரணடைந்து விடுவான்,' என்ற வாறு அனுமன் சிந்திக்கலானார். அதற் கேற்றாற் போல் இந்திரசித்தன்மீது போர் தொடுக்கும் முறைகளை மானசீகமாக வகுத் துக்கொண்டார்.

அரக்க வீரர்கள் அணி அணியாக வந்து ஆஞ்சநேயரின் எதிர் நின்று பலதரப் பட்ட ஆயுதங்களாலும் போரிட்டனர். ஆஞ்ச நேயர் நின்ற நிலையிலிருந்து அசைந்து கொடுக்காமல் அனைத்து ஆயுதங்களையும் அழித்தொழித்தார். படைவீரர்களையும் பிடித்து நசித்துக் கொன்றார். ஏனைய படைகளையும் சிதைத்து இந்திரசித்தனைத் தனிமைப்படுத்தினார்.

தான் திரட்டிக் கொண்டு வந்த படைகள் அனைத்தும் மிகக் குறுகிய காலத்துள் சிதைந்து சின்னாபின்னமானதைக் கண்ட இந்திரசித்தனின் மனம் ஒருகணம் பேதலித் தது. 'ஒரு குரங்கு எம்நாட்டின் படைகள் அனைத்தையும் அதம் செய்துவிட்டதே!' என்று எண்ணும்போது துக்கமும் கடும் கோபமும் ஒருங்கே கொண்டான். எப்படியா வது இந்த வானரத்தினைப் பிடித்துக் கொண்டு போய்த் தன் தந்தையின் முன் நிறுத்தியே ஆகவேண்டும். அப்பணி முடிந்த பின்னர் மடிந்து போனாலும் பாதகமில்லை என்ற முடிவுடன் இந்திரசித்து தனது இறுதி ஆயுதத்தைப் பயன்படுத்தத் தீர்மானித்தான்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 67**
**சரியானவிடை:– இராமபிரான்.**

1. முஹம்மத் சியாப். கொத்தாந்தீவு, முந்தல்.
2. கு.செந்தூரன். தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா.
3. து. பீலிக்ஸ் பத்மநாதன். 116, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
4. து. மர்லியா. 251, வீட்டுத் திட்டம், மகாறம்பைக்குளம், வவுனியா.
5. கு. ஜயகரன்., கணபதி வித்தியாலயம், பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு-12.

**போட்டி இல. 69** கேள்வி:- **இராவணனின் இளைய மகனின் பெயர் என்ன?**

பெப்ரவரி. 15 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.69, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

## காதிலை பூ கந்தசாமி

பொதியொன்று மேசைமீது இருக்கிறது. அதன்மேல் தீர்வுப்பொதி என்ற எழுத்துக்கள் தெரிகின்றன. மேசை அது ஒரு வட்டமேசை. அதனைச்சுற்றி தமிழ், முஸ்லிம் கட்சிகள் இருக்கின்றன.

த.மு.கட்சிகள்: அந்தப் பொதிக்குள்ளே என்ன இருக்குது?
அமைச்சர்: அந்தப் பொதிக்குள்ளே எல்லாம் இருக்குது!
த.மு.கட்சிகள்:
தீர்வுப் பொதியொன்று தூங்குது
கையில் வராமலே
முதல் எடுத்து பார்ப்பது யார்
அதை எடுத்து பிரிப்பது யார்
தீர்வுப் பொதியொன்று தூங்குது
கையில் வராமலே..
அமைச்சர்:
எங்கள் பொதி-இது
உங்களின் பொதி
த.மு.கட்சிகள்: ஏங்க பொதி பாடுங்களா?
அமைச்சர்: இந்தப் பொதி பாடவேண்டு மானால் நீங்கள் எழுந்து ஆடவேண்டும்.
*(தமிழ்-முஸ்லிம் கட்சிகள் நவீன முறையில் நடனமாடத் தொடங்குகின்றன)*
பொதி: *(பாடுகிறது)*
**மாயா மச்சீந்திரா**
**மச்சம் பார்க்க வந்தீரா**
**வாதங்கள் காட்டி**
**மோசம் செய்யும் பொலிட்டிக்ஸா**
த.மு.கட்சிகள்:
தீர்வுத்திட்டங்கள்
தெரிவுக்குழுவில் உருவாகும்
மேஸ்திரி-பொலிக்டிக்ஸ் சாஸ்திரி
பொதி:
**உரு மாறி உரு மாறி**
**தீர்வுப் பொதி உமைத் தேடி**
**வருவேனே வாரித் தருவேனே**
த.மு.கட்சிகள்:
உன்னை நாம் அறிந்திட்டால்
உள்ளிருப்பை அறிந்திட்டால்
தகதிம்மித் தக்கதமித் தாளம்
கவர்மெண்ட் போவதெங்கே
த.மு.கட்சிகள்:
அந்தப்பொதியைப்பாருங்கள் அழகு-தமிழ்க் கட்சிகள் எம்மோடு உறவு
எதிரணி தலைவர்:
இது நீரோடு செல்கின்ற ஓடம்
இதில் நியாயங்கள் யார் சொல்லக் கூடும்?
த.மு.க:
பொதியும் வரும்-ஒருநாள் தீர்வும் வரும்
வோட்டும் வரும் வழியில் வேட்டும் வரும்
எலெக்ஷன் வரும் உடனே கலெக்ஷன் வரும்
பதவி வரும் பொலிசி விலகிவிடும்.
பொதி: *(பொறுமையிழந்து பாடத் தொடங்கு கிறது)*
**சத்தியம்-இது**
**சத்தியம்.**
**எல்லாம் வல்ல இறைவனின் ஆணை**
**சொல்லப்போவது யாவையும் உண்மை**
**சத்தியம்-இது சத்தியம்!**

**பத்துத் திங்கள் தரையிலிருந்தேன்**
**தெரிவுக் குழுவின் அறையிலிருந்தேன்**
**எத்தனையோ சிறைகளை நான்**
**பார்த்துவிட்டேன் போடா! போ!**

**தலைக்கு மேலே வெள்ளம் போனால்**
**சாணென்ன முழம் என்ன?**
**தீர்வை விரும்பும் தைரியமிருந்தால்**
**நாளென்ன பொழுதென்ன?**

எதிரணித்தலைவர்: நிறுத்து! நிறுத்து! இது பொதியே அல்ல.
நாட்டைப் பிரிக்க இரகசியத் திட்டம், இந்தப் பொதி வந்திருப்பதும் அதில் ஒரு கட்டம்! இது குண்டுப் பொதியா என்பதை கண்டுபிடிக்க நமக்குத் தேவை ஒரு காலகட்டம்!

### பாடும் பொதி இது தீர்வுப் பொதி



பொதி:
**என்னை நீர் அறிந்திட்டால்**
**உண்டாகும் சிக்கலை**
**உள்ளேயே பொத்திவைத்தேன் நானும்**
த.மு.க:
தினமும் தினமும் ஆராய்ச்சி
தவணை முறையில் ஆராய்ச்சி
சொல்பொதி- நிசேச் எப்படி?
பொதி:
**செயலில் இறங்கு சீக்கிரமா**
**எலெக்ஷன் ஒண்ணு நடத்தணுமா**
**காலம் நேரம் கடத்தணுமா**
**என்னை பிரியடா**
*(எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வருகிறார்கள். பாட்ஷா ஸ்ரைலில் நடந்துவருகிறார் எதிரணித் தலைவர்)*
**பாரு பாரு லீடர் பாரு**
**பக்கேஜை கண்டால் முறைப்பார் பாரு**
**டிஷ்கஷன் என்று இழுப்பார் பாரு**
**காலம் போக வைப்பார் பாரு**
**பக்கேஜை கடிச்சு தின்பார் பாரு**
**இவர் பேருக்குள்ளே அணிலும் உண்டு**
**-உண்மைதானடா!**
எதிரணித் தலைவர்:
குண்டுப் பொதிபோல்
இருப்பது இதுவா
த.மு.கட்சிகள்: *(எதிரணித்தலைவரை நோக்கி கைகளை விரித்தபடி பாடுகின்றன)*
நீயில்லை என்றால்
தீர்வுமிருக்காது-ஒரு
பொதியிமிருக்காது
நீயில்லை என்றால்
டிஸ்கஷன் இருக்காது-ஒரு
இன்ரஸ்ட்டும் இருக்காது.
எதிரணித் தலைவர்:
தீர்வுப் பொதி இங்கே
தெரிவுக் குழு எங்கே
கவர்மெண்ட் போவதெங்கே
எலெக்ஷன் ஏன் இங்கே
டிஸ்கஷன்தான் இங்கே
பொதி: *(பாடுகிறது)*
**யாரை எங்கே வைப்பது என்று**
**யாருக்கும் தெரியலே-அட**
**குண்டுப் பொதிக்கும் தீர்வுப் பொதிக்கும்**
**பேதம் புரியலே!**
*(பொதி திடீரென்று காணாமல் போகிறது)*
எதிரணித் தலைவர்: *(சந்தோசத்தில் துள்ளுகிறார்)*
**கப்பலேறிப் போயாச்சு**
**சுத்தமான ஊராச்சு! கண்ணம்மா**
**கெட்ட பொதி போயாச்சு**
**திட்டமெல்லாம் பூவாச்சு–பொன்னம்மா**
**முடிவு வரைக்கும் வாதாடினோம்**
**பொலிட்டிக்ஸ் தீர்வில் விளையாடினோம்**
**பக்கேஜ் எல்லாம் தூளாச்சு**
**கண்ணம்மா!**
த.மு.கட்சிகள்: *(சோகத்தில் விம்முகின்றன)*
பொதியிருக்கும், பொலிவிருக்கும் தீர்விருக்காது
பார்லிமெண்ட்டில் வாதம் வரும் பதில் கிடைக்காது
நாலுவகை கட்சியிருக்கும் நல்லிணக்கம் வராது
நடக்கவரும் கவர்மெண்டுக்கும் துணிவிருக்காது
*(வானத்தில் இருந்து ஒரு சிரிப்பொலி கேட்கிறது. தொடர்ந்து அசரீரி கேட்கிறது)*
சட்டி சுட்டதடா கைவிட்டதடா
பொதி கெட்டதடா தீர்வு பட்டதடா
நாலும் நடந்து முடிந்த பின்னால்
காலம் போனது தெரிந்ததடா
ஹா ஹா ஹா

இருக்கும் இடத்தைவிட்டு
இல்லாத இடம்தேடி
எங்கெங்கோ அலைகின்றார்
ஞானத் தங்கமே- அவர்
ஏதுமறியாரடி ஞானத்தங்கமே!
ஹா ஹா ஹா



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com




அருள் ஜுவலரிஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331






## வானத்தில் வலம்

முதல் முதலில் வானத்தில் மனிதன் பறந்தது இராட்சத பலூன்மூலம்தான். அதன் பின்னர்தான் விமானம் கண்டுபிடிக்கப்பட்டது.

288 வருடங்களுக்கு முன்னர் 1709ம் ஆண்டு ஆகஸ்ட் 8ம் திகதி போர்த்துக்கல் நாட்டில்தான் முதன்முதலாக பலூன் மூலமாக வானத்தில் பறந்தார் ஒருவர். அவரது பெயர் பார்த்தலோமியோ டி குஸ்மாயோ. பலூனின் கீழ்ப் பகுதியில் தொட்டில் ஒன்று கயிற்றால் கட்டப்பட்டிருக்கும். சூடான காற்றை உருவாக்கும் நெருப்பைப் பிறப்பிக்கும் கருவியும், சரியான திசையில் பறப்பதற்கான சுங்கானும் அங்கு பொருத்தப் பட்டிருக்கும். அதனை இயக்கிக்கொண்டு வானத்தில் ஒரு ரவுண்ட் அடித்துவிட்டு திரும்பலாம். இது பழைய முறை.

தற்போது பல நவீன கருவிகள் பொருத்தப்பட்ட இராட்சத பலூன்கள் தயாரிக்கப்படுகின்றன. படத்தில் இருப்பது நவீன இராட்சத பலூன். விமானியின் இருக்கைபோலவே பலூனில் பறப்பவர்களுக்கும் இருக்கை செய்யப்பட்டுள்ளது. இந்த பலூன் மூலம் படத்தில் உள்ள இருவரும் அட்லாண்டிக் சமுத்திரத்தை கடந்து சாதனை புரிந்துள்ளனர். 31 மணி நேரங்களும் 41 நிமிடமும் வானில் பறந்து 4947 கிலோ மீட்டர் (3,075 மைல்கள்) தூரத்தைக் கடந்தனர். ஒருவரது பெயர் றிச்சார்ட் பிறான்சன். மற்றவர் பேர்லின்ஸ்ட் றான்ட். நீண்ட தூரத்தை பலூன் மூலம் கடந்த உலக சாதனையும் இதுதான்.

## மலையான மரியாதை

[illegible] படத்தில் இருப்பதுதான் இன்றைய தேதிவரை உலகில் மிகப் பெரிய சிற்பம்.

நமக்கென்ன சுலபமாக பார்த்துவிட்டு வியந்துவிட்டுப் போய்விடுவோம். ஆனால் இந்தச் சிற்பத்தை செதுக்கி முடிக்க எத்தனை ஆண்டுகள் சென்றன தெரியுமா? 46 ஆண்டுகள்!

அமெரிக்காவில் 'ஸ்ரோன் மவுண்டன்' என்று அழைக்கப்படும் கல்லுமலையில்தான் இந்த பிரமாண்டமான சிற்பம் செதுக்கப் பட்டது.-சிற்பம் அமைந்த மலையின் பரப்பளவு 1 1/3 ஏக்கர். சிற்பத்தில் உள்ள காட்சியும் ஒரு வரலாற்றுச் சம்பவத்தைக் குறிக்கிறது. 1861ல் தென் அமெரிக்காவில் யூனியன் அரசுகள் அமைக்கப்பட்டபோது அப்போதிருந்த தலைவர்கள் தமது தொப்பியை அகற்றி மார்பில்வைத்து மரியாதை செய்வதைச் சித்தரிக்கிறது.

ஜெஃபேர்சன் டேவிஸ், ஜெனரல் ரோபேர்ட் எட்வாட்லி, மற்றும் ஜெனரல் தோமஸ் ஜொனாதன் ஜக்சன் ஆகியோரே சிற்பத்தில் உள்ள தலைவர்கள்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657




## படகு - படகு

எஞ்சின்களின் உதவியுடன் கடல் அலைகளை தாண்டிச் செல்லும் படகுகள் வந்துவிட்டன. ஆனாலும் கைகளால் துடுப்பு வீசி செல்வதற்கு பலம் வேண்டும். பயிற்சியும் வேண்டும்.

கைகளால் துடுப்பு வலிக்கும் படகுப் போட்டியை 'ரோவிங்' என்றழைப்பர். 1996 ஒலிம்பிக்கில் பெண்களுக்கான 'ரோவிங்' போட்டியில் கனடா பெண்கள் வித்தை காட்டினர். அவர்கள் கரங்களில் துடுப்புக்கள் இலாவகமாக சுழன்றன. வெற்றியும் அவர்களுக்குத்தான்.



## நம்பர் 2

பாகிஸ்தான் அணியின் விளாசல் மன்னர்களில் ஒருவர் சயீத் அன்வர். துடுப்பாட்டக்காரர்களில் எப்போதாவது ஒரு தடவை மட்டும் விளாசுகிறவர்களும் உண்டு. ஒரு தடவை புகுந்து தூள் பண்ணிவிட்டு மறு தடவை ஏமாற்றிவிடுவார்கள். வந்தால்வா போனால் போ ரகமான ஆட்டம் அது.

சயீட் அன்வர் நிலையான ஆட்டக்காரர். அநேகமாக ஏமாற்றுவதில்லை. அணிக்கு நம்பிக்கை தரும் உத்தரவாதமான நட்சத்திரம்.

'96 சயீட் அன்வருக்கு பிரகாசமான ஆண்டுதான். பாகிஸ்தான் அணிக்கு தலைமைதாங்கி கென்யாவில் நடந்த போட்டியில் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தார். வாசிம் அக்ரமின் பின்னர் பாகிஸ்தான் அணிக்கு கப்டனாகும் தகுதியை நிரூபிக்க கிடைத்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தினார்.

கடந்த ஆண்டில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஆயிரம் ரன்களை தாண்டி வீரர்களின் பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பிடித்துக் கொண்டார். முதலிடம் டெண்டுல்கருக்கு.

கடந்த ஆண்டில் மொத்தம் 35 ஒருநாள் போட்டிகளில் விளையாடினார் சயீட் அன்வர். மொத்தமாக குவித்த ரன்கள் 1592. 10 செஞ்சரிகள். 3 அரை செஞ்சரிகள். சராசரி 53.06 அதிக பட்ச விளாசல் 115. ஐந்து தடவைகள் அவுட்டாகாமல் திரும்பினார். கடந்த ஆண்டில் ஒரு நாள் போட்டி துடுப்பாட்டத்தில் நம்பர் 2 சயீட் அன்வர்தான்.

முதலிடத்தில் வந்த டெண்டுல்கர் 32 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 1611 ரன்கள் குவித்திருந்தார். அதில் 9 செஞ்சரிகள். 6 அரைச் சதங்கள். சராசரி 53.70 அதிக பட்ச விளாசல் 137. இரண்டுதடவைகள் அவுட்டில்லை.






## பிறந்தநாள் வாழ்த்து

பாத்திமா றீமா—பாத்திமா ஸீமா

நிந்தவூர் 18ம் பிரிவு ஜலீல்-ஸபீக்கா தம்பதிகளின் செல்வக் கண்மணிகளான பாத்திமா றீமா- பாத்திமா ஸீமா இருவரும் தமது முதலாவது பிறந்த தினத்தை 07-02-1997ல் நிந்தவூரிலுள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். இவர்களைப் பெற்றோருடன் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தவர்கள் அனைவரும் இறையருளுடன் பல்கலையும் கற்று பல்லாண்டுகள் வாழ வசந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்.





## தொடர் சோகம்

இந்திய கிரிக்கெட் அணியில் சிங்கம் போல இருந்த மனோஜ் பிரபாகருக்கு கடந்த சில ஆண்டுகளாக அடிமேல் அடி. இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் கிரிக்கெட் தெரிவுக்குழுவை கண்டபடி திட்டித் தீர்த்தார். நிரந்தரமாகவே அவரை ஓரம் கட்டிவிட்டனர். தேர்தலில் போட்டியிட்டார். அங்கும் படு தோல்வி.

சமீபத்தில் மற்றொரு அதிர்ச்சி. டெல்லி கிரிக்கெட் அணியும் பிரபாகரை தூக்கி எறிந்துவிட்டது. அதற்குக் காரணமும் மனோஜ் பிரபாகரின் வாய்த்துடுக்குத்தான். மூத்த வீரர் என்பதால் சம்பளம் அதிகம் கேட்டார். மறுக்கப்பட்டது. தமிழ்நாட்டு அணிக்கு எதிரான போட்டியில் ஆட மாட்டேன் என்று அடம்பிடித்தார் பிரபாகர். 'சரிதான்போ' என்று அணியில் இருந்தே விலக்கிவிட்டனர். பிரபாகர் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதுதான் மரியாதையாக இருக்கும் போலிருக்கிறது.



இப்பத்திரிகை கொழும்பு [illegible] 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, [illegible] உள்ள [illegible] அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்